கோகுலம்

GOKULAM


ஜனவரி 2001
ரூ. 6/-



சுழல் கோப்பை யாருக்கு?




பிருந்தாவனம்



ஜோடி சேருங்கள்!

விடை: A-4, B-2, C-1, D-3, E-5



விடை: 14



''எங்கப்பா வியாபாரம் முடிந்து வீட்டுக்கு வரும்போது ஒரு கி.மீ. சுற்றித்தான் வருவார்.''

''அப்படியா! என்ன வியாபாரம் செய்கிறார்?''

''ஜவ்வு மிட்டாய்!''

- ஜி.கே.எஸ். மூர்த்தி

கோகுலம்

ஜனவரி 2001

மலர் : 18

இதழ் : 12



ஆலங்கட்டி மழை கேள்விப் பட்டிருப்பீர்கள். அப்ப மழை கேள்விப்பட்டிருக்கிறீர்களா?
பக்கம் – 28

உலகிலேயே மிக நீளான கழுத்துடைய பிராணி ஒட்டகச் சிவிங்கி என்பது உங்களுக்குத் தெரியும். அதைப் பற்றிய மேலும் பல தகவல்கள் அறிய ஆவலா?
பக்கம் – 68





ஏழு கோடியைக் காப்பாற்று பவரால் ஒரு சின்ன ஊசியைக் காப்பாற்ற முடியவில்லை!
படக்கதை பக்கம் – 12

அழ.வள்ளியப்பா நினைவுப் பரிசு நாடகப் போட்டி.
பக்கம் – 17



நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் காலண்டர்
பக்கம் – 40



உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

ஆக மாறிய கெங்கோரா!


கெங்கோரா ஒரு கிராமத்தில் வசித்து வந்தான். ஒரு நாள் நதிக்கரை யோரமாக நடந்து சென்ற பொழுது அவனுக்கு ஒரு மேளம் கிடைத்தது. அதை எடுத்துத் தட்டிக் கொண்டே நடந்தான். இப்படி போனபோது விளையாட்டாக "மூக்கே நீண்டு போ! மூக்கே நீண்டு போ" என்று கூறினான். அவ்வளவுதான் அவனுடைய மூக்கு நீளமாக வளரத் தொடங்கியது.

அதைக் கண்ட கெங்கோரா பயந்து போய் "மூக்கே குறைந்து விடு" என்று கூறியதும் அவனுடைய மூக்கு இயல்பான அளவுக்குச் சுருங்கிவிட்டது.

'ஆகா! அற்புதம், அதிசயம், ஆச்சர்யம்' என்று வியந்தபடி கெங்கோரா மேளத்தை எடுத்துக் கொண்டு அவனுடைய வீட்டிற்குச் சென்றான்.

மறு நாள் நண்பனிடம் இதைப் பற்றிக் கூறினான் கெங்கோரா. இருவரும் மேளத்தை எடுத்துக் கொண்டு வெளியூர் சென்றனர்.

அங்கே தெருவில் அழகான பெண்ணொருத்தி போய்க் கொண்டிருந்தாள்.



மேளத்தைத் தட்டியவாறு கெங்கோரா "அந்தப் பெண்ணின் மூக்கே! நீளமாகப் போ!" என்றான். அவள் மூக்கு நீளமாக வளர்ந்து விட்டது.

அந்த ஊரின் பெரிய பணக்காரனின் மகள்தான் அப்பெண்.

மூக்கு நீண்டு தன்னுடைய அழகு குலைந்துவிட்டதைக் கண்டதும் அவள் அழுது கொண்டே வீட்டுக்கு ஓடினாள்.

அவளுடைய பெற்றோருக்கும் ஒரே வருத்தம். என்ன செய்வது என்று புரியாமல் அவள் தந்தை விழித்தார்.

நிறைய மருத்துவர்களிடம் ஆலோசனை கேட்டார். யாருக்கும் இதற்கு மருந்து தெரியவில்லை.

ஒரு நாள் கெங்கோராவின் நண்பன் அந்தப் பணக்காரரை அணுகி, அவர் மகளைக் குணப்படுத்துவது மிகவும் கஷ்டம் என்றான். "எனக்குத் தெரிந்த ஒரு மருத்துவர் இருக்கிறார். எப்படிப்பட்ட வியாதியாயிருந்தாலும் அவர் குணப்படுத்திவிடுவார். ஆனால் அதிகம் செலவாகும்" என்றான்.

அதற்கு அப்பணக்காரர் "பரவாயில்லை. முதலில் அவரை வரச் சொல்" என்றார். நண்பன் சொன்னதைக்கேட்டு மறு நாள் பணக்காரரின் வீட்டுக்குச் சென்றான் கெங்கோரா. "மூக்கு மிகவும் நீளமாக வளர்ந்து விட்டது. இதைக் குணப்படுத்துவது மிகவும் கஷ்டம்" என்று கூறினான். மிக மிகச் சிரமப்பட்டு செய்பவன் போலப் பாவனை செய்து, ஏழெட்டு நாட்கள் கொஞ்சம் கொஞ்சமாக மேளத்தைச் சத்தம் கேட்காமல் தட்டி, சிறிது சிறிதாக மூக்கின் நீளத்தைக் குறைத்தான்.

மகிழ்ச்சி அடைந்த பணக்காரர் பணத்தோடு தன் பெண்ணையும் கெங்கோராவிற்குத் திருமணம் செய்வித்தார்.

இருவரும் மகிழ்ச்சியோடு ஊருக்குத் திரும்பினார்கள்.

நிறையப் பணம் இருக்கவே சோம்பேறிகளாக நண்பர்கள் மாறிவிட்டனர்.

இருவரும் ஒரு நாள் பொழுது போகாமல் ஆற்றங் கரையில் பேசிக் கொண்டிருந்த பொழுது கெங்கோராவிற்கு தன் மூக்கு எவ்வளவு நீளம் வளர முடியும் என்று பார்க்கும் ஒரு விசித்திரமான ஆசை வந்தது.

நண்பன் மேளத்தைக் கொட்ட, அவன் "மூக்கே! வளரு!" என்றான். நண்பன் கொட்டக் கொட்ட மூக்கு வளர்ந்து கொண்டே இருந்தது. இப்படியாக கெங்கோராவின் மூக்கு வளர்ந்து மேகத்தைக் கடந்து சொர்க்க லோகத்தையும் அடைந்து விட்டது.

மேலே சொர்க்க பூமியில் ஆற்றின் மீது ஒரு பாலம் அமைத்துக் கொண்டிருந்தான் சொர்க்கத் தச்சன் ஒருவன். பூமியிலிருந்து வந்த கெங்கோராவின் மூக்கை மரத்துண்டு என எண்ணி அதை இழுத்துப் பாலத்தின் மீது வைத்து ஒரு ஆணியைக் கொண்டு அடித்து இணைத்து விட்டுப் போய் விட்டான்.

இதனை அறியாத கெங்கோரா, "மூக்கே! சுருங்கு!" என்று கூறினான். மூக்கு சுருங்கத் தொடங்கியது.

மேல் பகுதி பாலத்துடன் இணைக்கப் பட்டு விட்டதால் அது சுருங்க சுருங்க மேலே மேலே போகத் தொடங்கினான் கெங்கோரா.

மேலே சென்ற கெங்கோரா இப்போது பாலத்தோடு இணைக்கப்பட்டு தொங்கிக் கொண்டிருந்தான்.

அந்த வழியாக வந்த மழைக் கடவுள் இரக்கப்பட்டு அவனை விடுவித்து "என்னிடம் வேலை செய்!" என்று அழைத்துச் சென்றார்.

அவனுடைய வேலை என்னவென்றால் மேகங்களின் மீது ஓடிக் குதித்து மழை பெய்யச் செய்வது.

இப்படி குதித்து குதித்து மழை பெய்யச் செய்வது அவனுக்குப் பிடித்திருந்தது. அவனுக்கு இந்த வேலை விளையாட்டாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஒரு நாள் இவன் இவ்வாறு குதித்து மழையை உண்டாக்கியபோது வேடிக்கையாக வெகுதூரம் எம்பி குதிக்க ஆரம்பித்தான். எம்பி குதித்த அவன் கால் தவறித் தலை கீழே விழத் தொடங்கினான்.

கடைசியில் ஒரு பெரிய ஏரியில் விழுந்தான். தண்ணீரில் விழுந்தவுடன் ஒரு மீனாக மாறிவிட்டான்.

இன்னும் கூட பிலா ஏரியில் கெங்கோரா-புனா என்ற பெயரில் பெரிய மீன்கள் உள்ளன.


கெங்கோராவின் சந்ததி தான் அவை என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.


ஆதாரம் : ஜப்பானியக் கதைகள்

- கே. ஸ்ரீப்ரியா, விழுப்புரம்



குறுக்கெழுத்துப் புதிர்!





இடமிருந்து வலம்

1. இந்த நாட்டின் தலைநகரம் டாக்கா (6)
5. வீடுகட்ட உதவும் மண். ஆறுகளில் இருக்கும் (3)
8. மதுரையில் ஓடும் நதி (2)
9. தங்கம் (2)
11. உயரமான மரம். இதன் எல்லா பாகங்களும் நமக்குப் பயன்படும் (2)

வலமிருந்து இடம்

4. பசித்தால் -- (2)
6. மாட்டிலிருந்து கிடைக்கும் சத்துமிக்க திரவப் பொருள் (2)
7. சந்திரனில் முதலில் காலடி எடுத்து வைத்தவர் ஆம்ஸ்ட்ராங்கா? (2)
10. சந்திரனைக் கண்டு மலரும் பூ (3)
14. டெலிபோனைக் கண்டுபிடித்தவர் (6)

மேலிருந்து கீழ்


1. சாட்டையை இதனுடன் வைத்துச் சுற்றி விளையாடுவார்கள் (5)
2. ஆப்பிரிக்கா ஒரு இருண்ட ---- (4)
3. ஜனநாயக நாட்டில் இது நடத்தி ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர் (4)
4. மழையும் காற்றும் அசுரத்தனமாக வீசுவது (3)
6. அரை என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)
10. ஆற்றின் குறுக்கே இதைக் கட்டி நீரைச் சேமித்து வைப்பார் (2)

கீழிருந்து மேல்

5. பள்ளிகளிலும் கோயில்களிலும் இது ஒலிக்கும் (2)
9. அரிசி, சோளம் போன்றவற்றை வறுத்தால் இது கிடைக்கும் (2)
11. ஓணான், பச்சோந்திக்கு உறவு. வீட்டுச் சுவர்களில் காணப்படும் (3)
12. முன்பு கிழக்கு ஜெர்மனியையும் மேற்கு ஜெர்மனியையும் இந்தச் சுவர் பிரித்துக் கொண்டிருந்தது (4)
13. கடைசியாக பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற நகரம் (4)
14. முருகனுக்கு விசேஷமான தினம் (5)

- வே. தீபா, பத்தாம் வகுப்பு, அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.

விடை 48ம் பக்கம்


விஷம வச்சு

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்று ஐக்கிய நாடுகள் சபையும்கூட அறிவித்தது. தொலைநோக்கியாலும் காண முடியாத இப்பிரபஞ்சத்தின் ரகசியங்களைக் கணக்கியல் சூத்திரங்களின் மூலம் கண்டுபிடித்து உலகை அதிசயிக்க வைத்தவர்.




அறிவியல் மேதை ஐன்ஸ்டீன், 1878ம் ஆண்டு, மார்ச் மாதம் 14ம் நாள் ஜெர்மனியில் உள்ள 'உல்ம்' என்ற சிற்றூரில், ஹெர்மன் ஐன்ஸ்டீனுக்கும், பவுலைன் நீ கோய்ச்சிக்கும் தலைமகனாய் பிறந்தார். அவரின் தலை வழக்கத்திற்கு மாறான வடிவ அமைப்புடன் இருப்பதைப் பார்த்து தாய் பவுலைன் கவலைப்பட்டார். குழந்தைப் பருவத்தில் ஐன்ஸ்டீன் மெதுவாகவே பேசத் துவங்கினார். விளையாட்டில் ஆர்வமின்றி தனிமை விரும்பியாய் வாழ்ந்தார்.

தாய் பியானோ வாசிப்பதைக் கேட்டு, இசையில் நாட்டம் கொண்டு பிற்காலத்தில் வயலின் வாசிப்பதில் திறமையாளரானார். படிப்பில் ஆர்வம் இருந்தாலும், பள்ளிக்குச் செல்வதை வெறுத்தார். ஆல்பர்ட்டின் ஐந்தாவது வயதில், அவரின் சித்தப்பா அவருக்குப் பரிசாகத் தந்த 'திசை காட்டும் கருவி' அவர் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பொருள்களுக்குப்பின், அதனுள்ளே ஏதோ ஒன்று ஆழமாக மறைந்துள்ளது என உணர்ந்தார். தந்தை மற்றும் சித்தப்பாவைக் கேள்விக்கணைகளால் துளைத்தார். பொறியாளரான ஐன்ஸ்டீனின் தந்தை, ஐன்ஸ்டீனின் அறிவியல் மற்றும் கணிதத் திறனையும், ஆர்வத்தையும் ஊக்குவித்தார்.

ஐன்ஸ்டீனின் குடும்பம் ஏழ்மையில் வாடியதால், அவரின் தந்தைக்கு ஐன்ஸ்டீனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப முடியவில்லை. 1894ல் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் குடும்பம் இத்தாலிக்கு இடம் பெயர்ந்தது. படிப்பை முன்னிட்டு அவர் மட்டும் மூனிச்சில் தங்கி கல்வி கற்றார்.


1900ம் வருடம் சிறந்த மதிப்பெண்களுடன், ஐன்ஸ்டீன் பட்டம் பெற்று வெளியேறினாலும், பல்கலைக்கழகத்தில் வேலை கிடைக்கவில்லை. ஒரு வருடத்திற்குப் பின் பள்ளி ஆசிரியராய் பணிக்குச் சேர்ந்து, ஓய்வு நேரத்தில் ஆராய்ச்சியையும் தொடர்ந்தார். 1901ல் அவர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த போது ஜுரிச் பல்கலைக்கழகம் அவருக்கு பி.எச்டி. பட்டம் கொடுக்க மறுத்து விட்டது.



1905லிருந்து 1910 வரை இளம் ஐன்ஸ்டீனுக்கு ஆக்கபூர்வமான கால கட்டமாகும். 1905ம் ஆண்டு பி.எச்டி கட்டு

இணையற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன்!

ரையை முடித்துவிட்டு, இரண்டு வியப்பு மிகு கட்டுரைகளை (திகைப்பூட்டும் சிறப்பு சார்பியல் கோட்பாடு) எழுதினார். ஐன்ஸ்டீன் தன் கருத்துக்களை வார்த்தைகள் மூலம் வெளியிடுவதைவிட விஷயங்களை மிகத் துல்லியமாக கணித சூத்திரங்கள் மூலம் விளக்கினார். ஒளியின் வேகத்தைவிட, வேறெதுவும் வேகமாகச் செல்ல முடியாது என்று கணித்த ஐன்ஸ்டீனின் சமன்பாடான $E=mc^2$, அற்புதமான தகவல்களைத் தருகின்றது. 1907ல், ஐன்ஸ்டீன் இருபதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற கண்டுபிடிப்பான 'குவாண்டம் கோட்பாட்டின்' முதல்




கட்ட ஆய்வைச் சமர்ப்பித்தார். அவரின் சிறப்பு தெரிந்தவுடன் வேலை வாய்ப்புகள் வந்து குவிந்தன. அவர் பி.எச்டி கட்டுரையை மறுத்த ஜூரிச் பல்கலைக்கழகத்திலேயே 1909ல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். பின் பிராக்கில் பணிபுரிந்தார். அதனைத் துறந்து பின், பெர்லினில் புதிய ஆராய்ச்சி நிலையத்தில், மதிப்புமிக்க தலைமைப் பொறுப்பு ஐன்ஸ்டீனுக்கு அளிக்கப்பட்டது. அதன்பின் 1951ல், புவியீர்ப்பு விசையையும் சார்பியல் கோட்பாட்டில் இணைத்து 'பொது சார்பியல்' கண்டுபிடிப்பை வெளியிட்டார்.

1920லிருந்து 1930 வரை, உலகின் பல நாடுகளுக்கும் அவர் உரையாற்ற அழைக்கப்பட்டார். அவரது கட்டுக்கடங்கா ஆர்வமும், மகிழ்ச்சியும், சுயகர்வமின்மையும், அவரின் அருமையான குணங்கள் ஆகும். நண்பர்களுடனும் மற்றவர்களுடனும் எளிமையாகப் பழகி, எளிமையாகவே வாழ்க்கையும் நடத்தினார். 1920லிருந்து 30 வரை ஐன்ஸ்டீனுக்குப் பல விருதுகள் வழங்கப்பட்டன. அவரது புகழையும், செல்வாக்கையும் உண்மையாகவே உதவி தேவைப்பட்ட மக்களுக்கே கொடுத்து உதவினார். 1936ல் அமெரிக்க குடியுரிமை பெற்ற ஐன்ஸ்டீன், நாஜிகளுக்கு எதிரான போரில், அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு அணுசக்தி மூலம் ஆயுதம் தயாரிக்க ஒத்துக் கொண்டார். 1943ம் ஆண்டு அமெரிக்க கடற்படையின் வெடிமருந்துப் பிரிவில் 'சிறப்பு ஆலோசகர்' பொறுப்பு ஐன்ஸ்டீனிடம் ஒப்படைக்கப்பட்டது. 1945ல் ஜனாதிபதி ட்ருமன் காலத்தில் ஏற்பட்ட போரின் வெற்றி, நீடித்த அமைதியை மக்களுக்கு கொண்டு வராது என்று அஞ்சினார் ஐன்ஸ்டீன்.

ஐன்ஸ்டீன் தனது இறுதிக்காலத்தில் நீதிக்காகவும், சுதந்திரத்திற்காகவும், தம்முடைய ஆராயச்சியையும், அர்ப்பணிப்பையும் தொடர்ந்தார். ஐன்ஸ்டீன் யூத மக்களுக்கும், அமைதிக்கும் ஆற்றிய சேவைக்காக, நன்றிக்கடன் செய்யும் பொருட்டு 1952ல் இஸ்ரேலின் ஜனாதிபதி தேர்வுக்காக அழைக்கப்பட்டார். ஐன்ஸ்டீன் அவ்வழைப்பை சாதுரியமாக மறுத்துவிட்டார். சிந்திப்பதையும், காரணங்கள் ஆய்வதையும், பிரசாரத்தையும் வினாத் தொடுப்பதையும் மற்றும் தன் மூச்சையும் 1955ம் ஆண்டு, ஏப்ரல் 18ம் நாள் நிறுத்திக் கொண்டார். விஞ்ஞானிகள் தம் வாழ்வில் 'தங்க கோபுரத்தில் அடைக்கப்படத் தேவை இல்லை' என தீர்மானித்து, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற சிந்தனா முயற்சியுடன் வாழ்ந்து காட்டியவர் ஐன்ஸ்டீன் என்ற மாமனிதர்!

— ஸ்வாதி



ஹலோ! என்னை யாரென்று தெரிகிறதா? இப்படிக் கேட்டால் எப்படிச் சொல்வது என்கிறீர்களா? என்னை மினி கேமரா என்று சொல்லலாம். உங்கள் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அற்புத கண்ணாடி. கண்டுபிடிச்சிருப்பீங்களே! ஆமாம், என் பெயர் கண்.

உங்களைப் போன்ற மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகள், பறவைகள், பூச்சிகள், மீன்கள் என எல்லா உயிரினங்களுக்கும் கண்கள் உண்டு. இருந்தாலும் நிறத்தைக் காணும் சக்தியில் ஒவ்வொன்றும் வேறுபடுகின்றன. மனிதர்களைப் போல் நிறத்தை அறியும் சக்தி பூச்சிகள் மற்றும் ஒருசில மீன்களுக்கு மட்டுமே உண்டு. விலங்குகளால் கறுப்பு, வெள்ளை, சாம்பல் நிறங்களை மட்டுமே அறிய முடியும். மாடு சிவப்பு நிறத்தைக் கண்டு மிரளுகிறது என்றும் பூனைக்குப் பச்சை நிறம் பிடிக்கும் என்றும் கூறுவதெல்லாம் ரீல், நம்பாதீர்கள்.

4000 – 7000 அலை நீளம் உள்ள ஒளியலைகளையே மனிதக் கண்களால் காண முடியும். 2000 – 4000 குறைந்த அலை நீளமுள்ள புறஊதாக் கதிர்களின் நிறங்களை தேனீக்கள், பட்டாம்பூச்சிகள், ஈக்கள் மற்றும் சில பூச்சிகளால் பார்க்க முடியும். மனிதக் கண்களை விடக் கூர்மையானவை பூச்சிகளின் கண்கள். சிறு அசைவைக் கூட கவனித்து விட முடியும்.

நீங்கள் பொதுவாகக் கண் என்று குறிப்பிடுவது வெளியே வெண்மையாகத் தெரியும் ஸ்கிளிராய்டு எனப்படும் விழி வெண்படலத்தையும், அதற்குள்ளே வட்டமாய் இருக்கும் கார்னியா என்ற கருவிழியையும் மட்டுமே! ஆனால் இது மட்டும் கண் அல்ல. இது கண்ணின் 15 சதவீதம் மட்டுமே! மீதி 85 சதவீதம் 'கண் உருண்டை' மண்டையோட்டிலுள்ள கண் குழிக்குள் பத்திரமாய் வைக்கப்பட்டுள்ளது.



கண் பேசுகிறேன்!

மனிதக் கண்ணின் பார்வைப் பகுதி ஸ்கிளிராய்டின் உட்பகுதியான 'விழித்திரை' எனப்படும் 'ரெட்டினா'தான். இதில் உருவத்தைப் பிம்பமாக உருவாக்கக்கூடிய நுண்ணிய உணர் நரம்புகள் சமதளத்தில் உள்ளன. இவற்றிற்குக் கூம்புகள் (cones) மற்றும் குச்சிகள்



நான்கு கண்களும் எதைப் பார்த்து இப்படி பயப்படுகின்றன?

(Rods) என்று பெயர். வண்ணப் பார்வையின் காரணகர்த்தாக்கள் இந்தக் கூம்புகளே! குச்சிகள் பிம்பத்தின் பரப்பையும், கோணம் மற்றும் ஆழத்தையும் கண்டறிகின்றன. மற்ற பாலூட்டிகளின் கண்களில் கூம்புகள் கிடையாது. ஒளியைக் கட்டுப்படுத்தி அனுப்பும் பகுதி கருவிழி எனப்படும் ஐரீஸ். ஐரீஸின் நிறம் கறுப்பு,




பழுப்பு, பச்சை, நீலம் என பல வண்ணங்களில் இருக்கும். பொதுவாக இந்தியர்களுக்குக் கறுப்பு மற்றும் பழுப்பு நிறமாகத்தான் இருக்கும்.

நீங்கள் பார்க்கும் பிம்பத்தை உண்மையில் பார்ப்பது நாங்கள் அல்ல. அதற்கு முழுக் காரணமும் மூளையார்தான். மூளை அனுப்பும் பிம்பம்தான் விழித்திரையில் விழுந்து உங்களைப் பார்க்கச் செய்கிறது. உங்கள் கண் ரஜினிகாந்தின் படத்தைப் பார்த்ததும் பார்வை நரம்பு வழியே மூளைக்குச் செய்தி அனுப்புகிறது. நரம்பு செல்கள் மூலம் வந்த தகவலை, ஏற்கெனவே மூளையில் பதிவு செய்து வைத்துள்ள ரஜினிகாந்த் உருவம், நிறம், ஸ்டைல் போன்றவற்றுடன் ஒப்பிட்டு நீங்கள் பார்த்த உருவம் ரஜினியுடையதுதானா இல்லையா என்பதை முடிவு செய்து இறுதியில் ஊர்ஜிதப்படுத்துகிறது மூளை.

கண்ணின் மேல் இமைக்குள்ளும் கீழ் இமையின் ஓரத்திலும் கண்ணீர் சுரப்பிகள் உள்ளன. இவை கண்களைப் பாதுகாக்க எந்நேரமும் சுரந்து கொண்டே இருக்கின்றன. இதனால் எங்கள் மேல் படியும் தூசி மற்றும் இதரப் பொருட்களை கண்களின் ஓரம் வழியே வெளியேற்றி சுத்தமாக வைத்திருக்கின்றன. நீங்கள் வருத்தப்படும்போதும் ஆனந்தப்படும் போதும் மின் தூண்டல் மூலம் மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மூளையின் கட்டளைப்படி கண்ணீர் சுரப்பிகள் அதிகமாக நீரை உற்பத்தி செய்கின்றன.

உங்கள் உடலில் என்னுடைய பங்கு எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்கே தெரியும். அதை நீங்கள் கவனமாகப் பாதுகாப்பது அவசியம் அல்லவா?

நான் தொடர்ந்து அசைந்து கொண்டே இருப்பதால் விரைவில் சோர்வடைந்து விடுகிறேன். படிக்கும் போது அங்கும் இங்கும் விழிகள் உருளுகின்றன. சோர்வடைந்தாலும் இது பயிற்சியாகவும் இருக்கிறது. ஆனால் டீ.வி. யையும்







கம்ப்யூட்டரையும் தொடர்ந்து பார்க்கும் போது நான் உருளாமல் ஒரே இடத்தில் நிலை கொண்டு விடுறேன். இதனால் தொலை தூரப் பொருட்களைப் பார்க்கச் சுருங்கி - விரிய சிரமம் ஏற்படுகிறது. பொதுவாக ஒரு நிமிடத்திற்கு 22 முறை இமைகள் மூடித் திறக்கின்றன. ஆனால் படிக்கும் போது 10 முறையும், டீ.வி. பார்க்கும் போது 7 முறையும் தான் இமைக்கின்றன. சிமிட்டல் குறைவதால் எனக்குள் உள்ள நீர் ஆவியாகி உலர்ந்து விடுகின்றது. இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன.

நான் சோர்வுற்றிருந்தால் விழியை 8 என்ற அமைப்பின்படி உருட்டினால் சிறந்த பயிற்சியாக அமையும்.

என்னுள் தூசு விழுந்து விட்டால் கசக்குதல் கூடாது. இமைகளை அடிக்கடி மூடித் திறந்து தூசைக் கண்ணின் ஓரத்திற்குக் கொண்டு வந்து எடுத்து விட வேண்டும். இல்லையென்றால் ஓர் அகன்ற பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து கண்களை மூழ்க வைத்து திறந்து மூடினால் தூசு வெளியேறி விடும்.

சோப்பு, பவுடர், சீயக்காய் என் மேல் பட்டு விட்டால் லேசான துணியில் இமைகளை மூடி ஒத்தி எடுக்கலாம்.

என் மேல் கை அல்லது ஏதாவது பொருள் பட்டு விட்டால் கண்களின் மேல் 15 நிமிடம் ஐஸ் கட்டி ஒத்தடம் கொடுத்தால் சரியாகி விடும்.


நான் சிவந்திருந்தால் தாய்ப்பால், எண்ணெய், பச்சிலை போன்றவற்றை விடக் கூடாது. எனக்குக் கெடுதல். உடனே மருத்துவரைப் பார்க்க வேண்டும். மற்றவர்களின் கைக்குட்டை மற்றும் துண்டால் என்னைத் துடைக்கக் கூடாது.

கண்களில் வலி, நீர் வடிதல், கட்டி ஏற்பட்டால் உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும்.

ஆசைக்காக மற்றவர்களின் கண்ணாடியைப் போட்டுப் பார்க்காதீர்கள். அது உங்களுக்கும் நல்லதல்ல. கண்ணாடியின் சொந்தக்காரருக்கும் நல்லதல்ல.

குழந்தைகள் நீண்ட நேரம் வெயிலில் விளையாடுவதாலும், உணவில் போதுமான வைட்டமின் 'ஏ' இல்லாததாலும் மாலைக் கண் நோய் ஏற்படுகிறது. இதைத் தடுக்க வைட்டமின் ஏ, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிற காய்கறிகள் மற்றும் பழங்கள், கீரை வகைகள், முட்டை, மீன் போன்றவற்றைச் சாப்பிடுவது நல்லது.

— எஸ். மோகனா



"கத்தி சாணை பிடிப்பீங்களா?"

"கத்தவெல்லாம் முடியாது! அமைதியாகத்தான் சாணை பிடிப்பேன்...!"

- கலை நண்பன்



காப்பாற்றியது ஏன்?

அந்த நதியில் சாது ஒருவர் நீராடிக் கொண்டிருந்தார். தேள் ஒன்று நீரோட்டத்தில் அடித்துக் கொண்டு வருவதைக் கண்டார்.

"ஐயோ பாவம்! என்றெண்ணி, அதைக் காப்பாற்றி, கரையில் வீசி விடலாம் என்று கையில் பிடித்தார். எடுத்தவுடனே சாதுவின் கையைக் கொட்டி விட்டது, தேள். 'சுருக்! என்று வலி ஏற்படவே தண்ணீரில் தள்ளி விட்டார்.

தேள் தண்ணீரில் தத்தளிப்பதைக் கண்டு மறுபடியும் எடுத்தார். மறுபடியும் தேள் கொட்டி விட்டது. மறுபடியுய சாது அதை ஆற்று நீரில் போட்டு விட்டார்.

இப்படி நாலைந்து முறை நடந்தது, சாது – தேள் நாடகம். கடைசியில் சாது வலியைப் பொறுத்துக் கொண்டு தேளைக் கரை மீது வீசி எறிந்தார். அங்கிருந்த பாறை இடுக்குச் சந்தில் புகுந்து மறைந்தது தேள்.


சாதுவுக்குத் தேள் கடியினால் விஷம் விறுவிறுவென ஏறி வலி அதிகமாக, கரையை அடைந்து ஒரு பாறை மீது உட்கார்ந்து கையை வேகமாக ஆட்டி உதறிக் கொண்டிருந்தார். ஆற்றங்கரையில் குளித்து விட்டு மேலே வந்த பலர் சாதுவின் செய்கையைக் கண்டு அவர் அருகே சென்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர்.


"தேள் விஷ ஜந்து என்று தெரியும். அது கொட்டினால் விபரீதமான வலி ஏற்படும் என்றும் தெரியும். தெரிந்திருந்தும் அதைக் காப்பாற்றினீர். இப்போது வலியால் அவஸ்தைப்படுகிறீர். உங்களை என்னவென்று சொல்வது?" என்றார் கூட்டத்தில் நின்றிருந்த ஒருவர்.


அதைக் கேட்ட சாது புன்னகை பூத்த வண்ணம் கூறினார் :

"நீங்கள் சொன்னது உண்மைதான். கொட்டுவது தேளின் குணம். ஆபத்தில் சிக்கிய பிராணிகளைக் காப்பாற்றுவது மனித குணம். தன்னைக் காப்பாற்றியவன், அவனைக் கொட்டக் கூடாது என்ற பகுத்தறிவு இல்லை, அதனிடம். அதனால் என்னைக் கொட்டியது. மனிதன் பகுத்தறிவு படைத்தவன். மனித சுபாவம் ஆபத்தில் உதவுவது. தேள் தனது இயல்பான குணத்தைக் காட்டியது. மனிதனான என் இயல்பு ஆபத்சகாயம். நான் அதைக் காப்பாற்றாமல் விட்டு விட்டால் மனிதனுக்கும் ஜந்துக்களுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கூறினார்.

— ஏழ்வரைக்கடியான்



ஊசி பத்திரம்!
வேணுவாரியத்
குருநானக் ஒருமுறை லாகூருக்குப் பயணம் மேற்கொண்டார். ஒருநாள் பணக்காரர் ஒருவர் அவரைச் சந்தித்தார்.
குருதேவா! என் பெயர் துனிசந்த். தாங்கள் இன்று என் வீட்டிற்கு வந்து ஆசீர்வதிக்க வேண்டு கிறேன்.
நான் இங்கு மகிழ்ச்சியாக இருக்கிறேன். வசதியான வீட்டிற்கு வர விருப்பம் இல்லை.
என் கோரிக்கையைத் தட்டாதீர்கள். என் மனைவி எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்.
உன்னை ஏமாற்ற நான் விரும்பவில்லை. வருகிறேன்.
சிறிது நேரத்தில் குருநானக் தன் சீடர்களுடன் துனிசந்தின் வீட்டிற்குக் கிளம்பினார்.
துனிசந்தின் அரண்மனை போன்ற வீட்டிற்கு முன் வந்து சேர்ந்தார் குருநானக்.
ஏதோ விழா கொண்டாடப்படுகிறது போலிருக்கு. வண்ணக் கொடிகள் நிறைய பறக்கின்றனவே!
கொடிகளைப் பற்றி துனிசந்திடம் கேட்க வேண்டும்.


குருதேவ், இந்த ஆப்பிள்கள் எல்லாம் அரிய வகைகள். இந்தத் திராட்சை தேன் போன்று சுவையுடையது.
பணக்காரர்களால்தான் இவற்றை வாங்க இயலும்.
அப்படியென்றால் நீ உண்மையிலேயே பணக்காரன்தான்.
துனிசந்த், இந்த வீட்டின் மேல் வண்ணக் கொடிகளைப் பார்த்தேன். ஏதாவது விசேஷமா?
இல்லை. என் செல்வத்தைக் குறிக்கின்றன அக் கொடிகள்.
ஒவ்வொரு கொடியும் ஒரு கோடியைக் குறிக்கிறது. நான் ஏழு கொடிகளை ஏற்றி வைத்திருக்கிறேன்.
அப்படியென்றால் ஏழு கோடி மதிப்புள்ள சொத்து உன்னிடம் உள்ளது. அதனால் என்னிடமிருந்து எதையும் பெற நீ விரும்பவில்லை.
நிச்சயமாக குருதேவா. ஆனால்...
...எனக்கு அமைதியே கிடைக்க மாட்டேங்கிறது. இந்நகரில் ஒருவர் இருபது கொடிகள் வரை பறக்க விட்டிருக்கிறார்.


என்னிடம் அவ்வளவு கோடிகள் இல்லாதது குறித்து வருத்தமாக உள்ளது.
உன் பிரச்னை புரிகிறது. நீ மகிழ்ச்சியாக இல்லை...
இங்குள்ள மக்கள் உன்னைவிட ரொம்ப சந்தோஷமாக இருக்கிறார்கள்.
இந்த விஷயம் உன்னை எப்பொழுதும் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறது.
நீங்கள் சொல்வது உண்மைதான்.
துனிசந்த், நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.
சொல்லுங்கள். உடனே செய்து முடிக்கிறேன்.
குருநானக் தன் ஆடையிலிருந்து சிறிய ஊசியை எடுத்துக் கொடுத்தார்.
இந்த ஊசி விலைமதிப்பற்றது. இதைப் பத்திரமாகப் பாதுகாத்து அடுத்த பிறவியில் என்னிடம் கொடுத்துவிடு.
உங்கள் ஆசீர்வாதம் குருதேவா!
குருதேவ் கிளம்பிச் சென்றதும் துனிசந்த் மனைவியிடம் ஊசியை ஒப்படைத்தார்.
ஐயோ! என்ன காரியம் செய்து விட்டீர்கள்? அடுத்த பிறவி வரை எப்படி பாதுகாப்பது?
நீ சொல்வது உண்மைதான். குழப்பமாகி விட்டேன்!
உடனே குருதேவைச் சந்தித்து திருப்பிக் கொடுத்து விடுங்கள்.


துனிசந்த் ஊசியை எடுத்துக்கொண்டு குருநானக்கைச் சந்தித்தார்.
வருக துனிசந்த்.
குருதேவா, தயவுகூர்ந்து இந்த ஊசியைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்!
நான் எப்படி அடுத்த பிறவிவரை இதைப் பாதுகாப்பது?
துனிசந்த், அடுத்த பிறவிக்கும் சேர்த்து ஏழுகோடி ரூபாயை எப்படி பாதுகாக்கிறாய்! கேவலம் சிறு ஊசியைப் பாதுகாக்க முடியவில்லையா?
என்னை மன்னித்து விடுங்கள். பேராசையால் இப்படி நடந்து கொண்டேன்.
© SAI FEATURES, ALUVA - 7
துனிசந்த் குருதேவரின் பாதத்தில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்.
பசித்தவர்களுக்கு உணவிடு. இல்லாதவர்களுக்கு தர்மம் பண்ணு. நீ செலவு செய்யும் ஒவ்வொரு நாணயமும் இரட்டிப்பாகி அடுத்த பிறவியில் உன்னை வந்தடையும்.
குருதேவா! எனக்கு வெளிச்சத்தைக் காட்டி விட்டீர்கள்.
துனிசந்த் பக்தியில் திளைத்து குருநானக்கின் சீடராக மாறினார்.

ஜோ, ஜோ, ஜோ!




''எதுக்குத் தூங்கறப்ப ரெயின் கோட்டை மாட்டிட்டு தூங்கறீங்க?''
''தினமும் மழையில் நனைகிற மாதிரி கனவு வருதே!''

- என்.கே. பாலசுப்ரமணியன், சென்னை.


''உங்க 'பல்ஸ்' பார்க்கணும். கொஞ்சம் கையை நீட்டுங்க.''
''பல்'லைப் பார்க்க வாயைத்தானே காட்டணும். கையை எதுக்குக் காட்டச் சொல்றீங்க, டாக்டர்?''

- கே.ஆர். உதயகுமார், சென்னை.



''ஏன் எந்நேரமும் கண்ணாடி முன்பு நின்று கொண்டு இருக்கிறாய்?''
''டாக்டர், உடம்பைப் பார்த்துக்கச் சொல்லியிருக்காரே!''

- மோகன், குன்னமங்கலம்.



''ஹலோ... நான் சம்பந்தம் பேசுறேன்''
''சம்பந்தம் எல்லாம் நேரில்தான் பேசணும். போனில் பேச முடியாது''

- மோகன், குன்னமங்கலம்.





குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டி

நாடகம் எழுத ஆர்வமுள்ளவர்களுக்கு, இதோ ஓர் மகிழ்ச்சியான செய்தி! சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் போட்டி அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.

2. நாடகங்கள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்று உறுதி மொழியுடன் அனுப்ப வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும்.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாடகங்களைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை நாடகத்துடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை நாடகங்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

6. நாடகங்களை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

7. முடிவு தேதி 28.2.2001. இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்படமாட்டாது.

8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.

9. நாடகங்களை **ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 600 097** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் **'அழ.வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டி'** என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு – ரூ. 500/-
இரண்டாம் பரிசு – ரூ. 300/-
மூன்றாம் பரிசு – ரூ. 200/-



கோகுலம் சுழல்

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. 1998ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வத்தலகுண்டு அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி கோப்பையைப் பெற்றது. 1999ஆம் ஆண்டு தேனி மாவட்டத்திலுள்ள ஆண்டிபட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றது. இந்த ஆண்டு திண்டுக்கல் மாவட்டமே மீண்டும் அந்தப் பெருமையைத் தட்டிச் சென்றுவிட்டது. இம்மாவட்டத்திலுள்ள செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி தான் 2000வது ஆண்டு சுழல் கோப்பையைப் பெற்றுள்ளது.

இந்த ஆண்டு 42 பள்ளிகள் போட்டியில் பங்கு கொண்டாலும் 10 பள்ளிகளிடையே தான் ஆரம்பத்திலிருந்தே கடும் போட்டி இருந்து வந்தது. ஆரம்பத்தில் லால்பேட்டை முன்னணியில் இருந்தது. பிறகு ஆண்டிபட்டி, இறுதியில் செந்துறை முந்திக் கொண்டது.

டிசம்பர் 5ம்தேதி செந்துறையில் கோப்பை வழங்கும் விழா நடந்தது.

திண்டுக்கல்லில் இருந்து நத்தம் செல்லும் வழியில் 40கி.மீ. தொலைவில் உள்ளது செந்துறை கிராமம். செல்லும் வழியெல்லாம் பச்சைப் பசேல் என கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் மரங்கள். மலைப்பாங்கான இந்தச் சிறு கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு அன்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள்.

முதல் தடவையாக மாநில அளவில் ஒரு மிகப் பெரிய அங்கீகாரத்தைப் பெறும் மகிழ்ச்சியில் பள்ளியே விழாக் கோலம் பூண்டு இருந்தது.

காலையில் இருந்தே மெல்லிய தூறல் பூமியை நனைத்துக் கொண்டிருந்தது கண்டு மாணவ, மாணவியர்களின் முகங்களில் பெரும் வாட்டம். காரணம் அந்தப் பள்ளியில் கூட்ட அரங்கம் எதுவும் இல்லை. விழாவினை தலைமை ஆசிரியர் அறையிலேயே நடத்தி விட்டால் நம்மால்

• கோட்டாட்சியரிடமிருந்து பரிசு பெறுகிறார்கள்- இடமிருந்து ஆறுமுகம், மா.மணி, பெ. இராமசாமி



கோப்பை யாருக்கு?

கண்டுகளிக்க முடியாதே என்ற ஏக்கம்.

மாணவ, மாணவியரின் பிரார்த்தனைகள் வீண் போகவில்லை. திண்டுக்கல்லில் இருந்து கோட்டாட்சியர் டி.ஜெகன்னாதன் பரிசுகளை வழங்குவதற்காகப் பள்ளி வளாகத்தில் நுழைந்த நிமிடமே, தூறல் நின்று வானம் வெறிச்சிட்டது.

அடுத்த சில நிமிடங்களில் பள்ளி மைதானத்தில் மாணவ, மாணவியர்கள் அணிவகுத்தனர்.


பள்ளித் தலைமை ஆசிரியர் ஆர். முத்துமாறன் வரவேற்றுப் பேசியதாவது: ''எங்கள் பள்ளிக்கு மாநில அளவில் இப்பரிசு கிடைத்துள்ளது பெருமைக்குரியது. பள்ளியின் ஆசிரியர்கள் கொடுத்த ஊக்கம் தான் மாணவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்த உதவியுள்ளது. கோகுலம் போன்ற தரமான பத்திரிகைகள் தருகின்ற உற்சாகம் மாணவர்களை மேலும், மேலும் எழுதத் தூண்டும். இந்த ஆண்டு கிடைத்துள்ள சுழற் கோப்பையை அடுத்த ஆண்டும் நமது பள்ளியே கைப்பற்ற அனைத்து மாணவ, மாணவியர்களும் கடுமையாக முயற்சிக்கவேண்டும். இளைய சமுதாயத்தின் படைப்பாற்றலை, சிந்தனைத் திறனை வளர்க்க உதவும் கோகுலம் இதழுக்குப் பள்ளியின் சார்பில் நன்றி'' எனக் கூறினார்.

குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி என்பதால் விழாவிற்கு முதல் நாள்தான் பரிசுகளை வழங்க திண்டுக்கல் கோட்டாட்சியருக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இருந்தும் உடனே அழைப்பை ஏற்று பரிசுகளை வழங்க வந்திருந்த கோட்டாட்சியர் டி.ஜெகன்னாதன் பரிசுகளை வழங்கி, பேசுகையில் ''காலை முதல் நள்ளிரவு வரை மக்கள் பிரச்னைகளையே பார்த்து வரும் எங்களைப் போன்ற அதிகாரிகளுக்கு இத்தகைய விழாக்கள் பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றன. குறிப்பாக 'கல்கி' நடத்தும் விழாவில் பங்கேற்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியையும், பெருமையையும் தருகிறது. 'பொன்னியின் செல்வன்' போன்ற சரித்திரக் கதையை இனி ஒருவரால் படைக்க முடியுமா என்ற கேள்வியை வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்ட சரித்திர நாயகர் அமரர் கல்கி. தேச பக்திக்கு உதாரண புருஷராக விளங்கிய அமரர் கல்கியின் நூற்றாண்டு விழாவை ஒட்டி ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தச் சுழற் கோப்பையை வழங்குவது என்பதே எனக்குப் பெருமை.

''அதிலும் செந்துறை போன்ற ஒரு பின்தங்கிய கிராமத்தில், அரசு மேல்நிலைப்பள்ளி இந்த விருதைப் பெறுகிறது என்றால் எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதிலும் சுழற்கோப்பை தோற்றுவிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளில் இரண்டு முறை திண்டுக்கல் மாவட்டம் வென்று சாதனை படைத்துள்ளது. இதற்குக் காரணமான மாணவர்களைப்

• தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுடன் மாணவர்கள்





• கவிதை மடல்

பாராட்டுகிறேன்.

"கோகுலம் வெறும் பொழுது போக்கு பத்திரிகை மட்டுமல்ல. மாணவ-மாணவியருக்கு இன்றைய அறிவியல் வளர்ச்சியையும், புதிய கண்டுபிடிப்புகளையும் அறிமுகப்படுத்தும் இதழ். சிறுவர்களின் சிந்தனையை ஆக்கபூர்வமாகச் செலுத்தவும், நல்வழிப்படுத்தவும் உதவுகின்ற மாத இதழ். நல்ல குணங்களைக் கொண்டு ஒழுக்கத்துடன் வாழ கற்றுக் கொடுக்கும் இதழ் கோகுலம்" எனக் கூறினார்.

பள்ளி மாணவியரின் நீண்ட நாள் கோரிக்கையான கழிப்பிட வசதிகளை உடனடியாக ஏற்படுத்தித் தருவதாக கோட்டாட்சியர் அறிவித்தவுடன் விண்ணை முட்டும் கரவொலி எழுந்தது.

'பள்ளியால் ஊருக்குப் பெருமை' என செந்துறை ஊராட்சித் தலைவர் எம். ராஜேந்திரனும், பெற்றோர் ஆசிரியர் கழக முன்னாள் தலைவர் கே.எஸ். பெருமாளும் வாழ்த்தினர்.

விழாத் துளிகள்:

● பரிசு பெற்ற மாணவர்கள் பெ. ராமசாமி, எம்.மணி ஆகியோர், கோகுலத்தை வாழ்த்தி எழுதிய கவிதைகளை அரங்கில் வாசித்தனர்.

● பெறுவதில் மட்டுமல்ல கொடுப்பதிலும் மகிழ்ச்சி காண்போம் என பள்ளியின் +2 மாணவர்கள் கோகுலம் நிர்வாகத்திற்கு நினைவுப் பரிசினை வழங்கினர்.

● திண்டுக்கல் மாவட்ட கல்கி ஏஜெண்ட் ஜெயச்சந்திரன் கோட்டாட்சியர், ஊராட்சி தலைவர், பெற்றோர் ஆசிரியர் கழக முன்னாள் தலைவர், தலைமை ஆசிரியர் ஆகியோருக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

செந்துறை அரசு மேல் நிலைப் பள்ளியை வாழ்த்துவோம். அடுத்த ஆண்டு சுழல் கோப்பை உங்கள் பள்ளிக்குக் கிடைக்க விரும்புகிறீர்களா? இப்போதே களத்தில் இறங்குங்கள். கோப்பையைக் கைப்பற்றுங்கள்!

அட்டையில்: **மா.மணி, ஆறுமுகம், பெ. ராமசாமி மற்றும் பள்ளி மாணவிகள்**

அட்டை மற்றும் படங்கள்: **ஸ்ரீஹரி**

முதல் ஆறு இடங்களைப் பெற்ற பள்ளிகள்

1) செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி.
2) ஆண்டிபட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி.
3) இமாம் கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி, லால்பேட்டை.
4) ஸ்ரைன் வேளாங்கன்னி பள்ளி, சென்னை.
5) புனித அலாய்சியஸ் உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.
6) அரசு மேல்நிலைப்பள்ளி, பெரியதச்சூர்.



உங்கள் நூலகம்



எல்லா மொழிகளிலும் வெளிவந்த கதைகள்!

குழந்தைகளுக்குப் பஞ்ச தந்திரக் கதைகள், பாலமுருகன், பக்-144. ரூ. 35/- சங்கர் பதிப்பகம், 21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 600 049

பைபிளுக்கு அடுத்ததாக உலக மொழிகள் எல்லாவற்றிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள பெருமை நமது நாட்டின் பஞ்ச தந்திரக் கதைகளுக்கு உண்டு. இதன் எத்தனையோ பதிப்புகள் விதம் விதமாகக் கதை வடிவிலும் பாடல் வடிவிலும் சித்திரக் கதை வடிவிலும் வந்துள்ளன. அத்தனைக்கும் நல்ல வரவேற்பு இருப்பது ஒன்றே இதன் பெருமைகளை விளக்கப் போதுமானது. இப்பொழுது இதை அருமையான கதை வடிவில் தந்துள்ளார்கள். படித்து விட்டுக் கதை கூறவும் குழந்தைகளைப் படிக்க வைக்கவும் தகுதியான பதிப்பாக வெளிவந்துள்ளது. இன்னும் சில படங்கள் இருந்தால் சிறப்பு மேலும் கூடியிருக்கும்.

பாலகங்காதர திலகர், எம்.வி.வெங்கட்ராம், பக்-56, ரூ.15/- பழனியப்பா பிரதர்ஸ், 14 பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14.

சாகித்ய அகாதமி பரிசைப்பெற்ற நாடறிந்த எழுத்தாளரின் சிறுவருக்கான வாழ்க்கை வரலாற்று நூல் இது. சுதந்தரம் எனது பிறப்புரிமை என்று முழங்கிய பாலகங்காதர திலகரின் எழுச்சியூட்டும் வீர தியாக காவியம். நாடு காத்த நல்லவர் வரிசையில் முத்திரை பதித்திருக்கும் நூல்.

நேர்மை வேண்டும், பாலதம்பூத்ரி, பக்-96, ரூ. 36/- இராமநாதன் பதிப்பகம், பிளாட் எண் 4698, ஏ.ஏ. 144 மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை - 600 040.

31 சிறுகதைகள் வாசகர்களின் மனதைக் கவர்ந்தவை. சிறுவர் உலகம் இன்று எதிர்நோக்கும் பல பிரச்னைகளை மையமாக வைத்து எழுதப்பட்டவை. தோல்விக்கான காரணம், நண்பர்களைப் பெறுவதன் அவசியம், கட்டுப்பாட்டுக்குள் இருந்தால் கிடைக்கும் பாதுகாப்பு, உதவிக்கரம் நீட்ட வேண்டியதன் அவசியம் இப்படி எத்தனையோ. ராமுவின் படங்களும் இருக்கின்றன.

நன்னெறி புகட்டும் நான்கு நாடகங்கள், ஜானகி மணாளன், பக்-120, ரூ.25/- திருவரசு புத்தக நிலையம், 13, தீன தயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

பல ஆண்டுகளாகச் சிறுவர் இலக்கியம் படைத்து கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான எழுத்தாளரின் நாடகத் தொகுப்பு இது. உண்மையான உழைப்பைப் பாராட்டுவதும், நன்றி மறவாமல் இருப்பதும், விடாமுயற்சியோடு உழைப்பதும் எத்தகைய உன்னதமான பண்புகள் என்பதை இதிலுள்ள நான்கு நாடகங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

விடிவெள்ளிகள், அருப்புக்கோட்டை செல்வம், பக்-128, ரூ.25/- கற்பகம் புத்தகாலயம், 18, ராஜாபாதர்தெரு, தியாகராய நகர், சென்னை - 17.

கல்வியறிவில்லா மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி அவர்களைக் கொத்தடிமையாக்கி, இரசாயனத் தொழிற்சாலை நடத்துகிறார் ஒருவர். கிராமத்தின் சுற்றுச் சூழலையும் அப்பாவி மக்களின் உடலாரோக்கியத்தையும் பாதித்துக் கோடீஸ்வரராக உள்ள இரக்கமில்லாத் தந்தைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தும் சிறுவனின் கதை. படித்து மகிழவும் விழிப்புணர்வு பெறவும் ஏற்ற நூல்.

— ரே

உங்களுக்குள் பல திறமைகள் ஒளிந்திருக்கக் கூடும். ஓவியம் வரைவது, புகைப்படம் எடுப்பது- இப்படி பல விஷயங்களில் உங்களுக்கு இருக்கும் ஆர்வத்தை ஊக்குவித்து பளிச்சிட வைக்க யாரும் உதவ முன்வரவில்லையே என்று ஏங்க வேண்டாம். உங்களைப் பட்டை தீட்ட கோகுலம் முன் வருகிறது. பல்வேறு கலைகளில் சிறந்து விளங்கும் நிபுணர்கள், அவர்களின் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் இங்கு சொல்கிறார்கள்.

– ஆர்.

மூன்றாவது

புகைப்பட நிபுணர்

யோகா

காமிராவைப் பிடித்து நான் எடுத்த முதல் படம் என்ன? மூளையை கிளிக் செய்து பின்னோக்கிப் போகும் போது காஞ்சிபுரம் வேகவதி ஆற்றங்கரை மன ஃபிரேமுக்குள் வருகிறது. பச்சையப்பன் பள்ளியில் ஒன்பதாவது படித்துக் கொண்டிருந்தேன். நண்பர் ராஜரத்னம் பள்ளி யிறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந் தார். ஒரு நாள் பள்ளிக்கு வரும்போது ஒரு சிறிய கறுப்பு பெட்டியைக் கொண்டு வந்தார். எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொண்டோம்! அது ஒரு கோடக் பாக்ஸ் காமிரா.



அன்று மாலையே ஆற்றங்கரைக்குப் போய் விட்டோம். ஆற்றங்கரை மணலில் நண்பர்களை வைத்து குழு, குழுவாகப் படம் எடுத்துக் கொண்டிருந்தார் ராஜ ரத்னம். என் கவனம் ஏனோ அதில் செல்லவில்லை. சுற்றிலும் பார்த்தவாறு இருந்த எனக்குக் கரையில் கண்ட காட்சி 'ஜூம்' ஆகி, மனக் கண்ணில் பதிவாகியது. சிறிய கோயில், அழகான கோபுரம். அதை ஒட்டி அரசமரம். கிளைகளுக்கு இடை யில், காற்றின் அசைவுகளுக்கேற்ப, பல கோணங்களில் அழகைக் காட்டும் கோபுரம்.

ஒரு சின்னப் பொறிதான். நண்பனி டம் காமிராவை வாங்கினேன். கரையில் கண்ட காட்சி காமிராவில் பதிவாகியது. அப்புறம் அதை டெவலப் செய்து பிரிண்ட் போட்டுப் பார்த்தபோது கவிதை எழுதத் தூண்டும் அளவுக்கு அதில் ஆற்றங்கரை காட்சி பதிவாகி இருந்தது. எல்லோரும் ஆற்று மணலில், படம் எடுத்துக் கொண்டிருந்தபோது என் கவனம் கரையில் இருந்த கோயில் மீது சென்றதெப்படி? இந்த கவனிப்பு எப்படி நிகழ்ந்தது? இதைத்தான் observation என் கிறோம். உங்களில் பலருக்கு இந்தக் கவனிப்புத் தன்மை இயல்பாகவே இருக் கக் கூடும்.

சிறு வயதில் என்னைக் கவர்ந்த சினிமா ஒளிப்பதிவாளர் மார்கஸ் பாட் டலே. கையில் காசு கிடைத்தால் நான் தியேட்டரில் தான் இருப்பேன். பாட்லே படங்களில் ஒவ்வொரு காட்சியும் எவ்வளவு அற்புதமாகப் படம் பிடிக் கப்பட்டிருக்கிறது என்று யோசித்து வியந்து போவேன். அது என்னவோ

தெரியவில்லை; பாட்லேயிடம் உதவியாளராகச் சேர வேண்டும் என்று மனதின் ஓரத்தில் ஆசை அரும்பியது!

அதற்கேற்றவாறு திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டாமா! நிறைய நாவல்கள், கதைப் புத்தகங்கள் படிப்பேன். ஒவ்வொரு கதைக்கும் காட்சியமைப்பை எழுதி, எப்படி படம் பிடிக்கலாம் என்பதைப் புத்தகங்களில் எழுதிக் கொள்வேன். நா.பா.வின் 'பொன்விலங்கு' நாவலை ஷாட், ஷாட்டாகப் பிரித்து எழுதினேன். கைகளில் காமிரா இல்லாமலேயே, நான் கனவுத் தொழிற்சாலையில் பணியாற்றினேன்.

என் கல்லூரிக் காலத்தில் என்

கண்!

போட்டோகிராபி ஆர்வத்துக்கு உரம் போட்டு வளர்த்தவர் நண்பர் கந்தசாமி ராஜா. கல்லூரியில் நடக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் படம் எடுப்பார். என்னிடமும் காமிரா கொடுத்து தமிழ்மன்ற கூட்டங்களைப் படம் எடுக்கச் சொல்வார். சினிமா ஒளிப்பதிவாளர் ஆக வேண்டும் என்ற நெருப்பு அணையாமல் எரிந்து கொண்டே இருந்தது.

ஆனால் என் துரதிஷ்டம், மார்கஸ் பாட்லே இறந்து போய்விட்டார். எங்கள் குடும்ப நண்பரும் பிரபல மேக்கப் நிபுணருமான பீதாம்பரம் அவர்கள் (இயக்குனர் வாசுவின் தந்தை) என்னை ஜெமினி கலர் லேபரட்டரியில் வேலைக்குச் சேர்த்து விட்டார். டெவலப் செய்வது, பிரிண்ட் போடுவது போன்றவற்றில் உள்ள நுட்பங்களைக் கற்றுக் கொண்டேன். என் சகோதரர் 'ஜெனித்' சங்கர் புகைப்பட ஸ்டுடியோ வைத்திருந்தார். அவருக்கு உதவியாகச் சேர்ந்து கொண்டேன்.

என்னுடைய ஆயிரக்கணக்கான படங்கள் இதுவரை பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. என்ன இருந்தாலும் முதல் முதலாக நான் எடுத்த படத்தை பத்திரிகையில் பார்த்தபோது எழுந்த சந்தோஷ உணர்வு இன்னும் அப்படியே பதிந்திருக்கிறது.

விக்லேண்டர் என்ற ஜெர்மன் காமிராவை எடுத்துக் கொண்டு நானும் நண்பர்களும் சைக்கிளில் கடற்கரைக்கு ஜாலியாகப் போனோம். சுழன்றடிக்கும் காற்றில் கடற்கரைச் சாலையில் மூச்சு வாங்க சைக்கிளை மிதித்துக் கொண்டு காந்தி சிலை அருகே போய்க் கொண்டிருந்த



போதுதான் அந்தக் காட்சியைப் பார்த்தேன். மாடு ஒன்று காந்தியின் முகத்தைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தது. என்ன சொல்கிறது அந்த மாடு? நடு சாலையில் நின்றவாறு அந்தக் காட்சியை கிளிக்கினேன். அந்தக் காட்சியைப் பதிவு செய்ய வேண்டும் என்று என்னைத் தூண்டியது எது? புகைப்படக் கலையில் ஆர்வமுள்ள ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியது மூன்றாவது கண்தான். பிரபல பத்திரிகையில் அந்தக் காட்சி பிரசுரமாயிற்று. அந்தப் படத்தை வெளியிட்டு 'மாட்டுக்கு வாயிருந்தால் காந்தியிடம் என்ன பேசியிருக்கும்?' என்று போட்டியையும் வைத்திருந்தார் அதன் ஆசிரியர்.

நான் புகைப்படக் கலையை கற்றுக் கொள்ள ஆர்வமாக இருந்த காலத்தில் அது ஒரு கடினமான கலையாக இருந்தது. ஒளிக்கு ஏற்ப காமிராக்கண் திறந்து மூடும் வேகத்தையும் ஒளி பாயும் துவாரத்தின் அளவையும் நிர்ணயிக்க வேண்டும். இப்போது அப்படியல்ல... வெளிச்சத்துக்கு



தைரியமா நில்லுங்க. நல்லா எடுப்பேன்!

ஏற்ப தன்னை தானே சரி செய்து கொண்டு எடுக்கும் ஆட்டோ காமிராக்கள் வந்து விட்டன. நீங்கள் கிளிக் செய்தால் போதும்.

ஆனால் உண்மையிலேயே, புகைப்படக் கலையை ஒரு ஹாபியாக வைத்துக் கொள்ளாமல் தொழில் ரீதியாக எதிர்காலத்தில் பிரகாசிக்க ஆர்வமாக இருப்பவர்களுக்கு நான் சொல்வது, ஆட்டோ காமிராவில் பழகாதீர்கள் என்பதுதான். ஷட்டர் ஸ்பீட், எக்ஸ்போஷர் ஆகியவற்றை கைகளில் முறைப்படுத்திக் கற்றுக் கொள்ளுங்கள்.

சுவரின் முன்னால், ஒரு நபரை நிறுத்தி வைத்து ஆட்டோ காமிராவில் கற்றுக்குட்டிகள் படமெடுக்கும் போது சுவர் பிரகாசமாகவும், நபர் கறுப்பாகவும் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதையே கைகளால் சரி செய்து எடுக்கும் காமிராவில் நன்கு எடுக்க முடியும். கொஞ்சம் காஸ்ட்லியான கலைதான். காமிராவில் ஒவ்வொரு ஃபிரேம் எடுத்த பிறகும், அதன் வேகம், எக்ஸ்போஷர் ஆகிய விவரங்களை ஒரு காகிதத்தில் எழுதி வைத்துக் கொள்ளவும். பின்னர் பிரிண்ட் போட்டு, ஒவ்வொரு ஃபிரேம் படத்தையும், எழுதி வைத்ததையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளவும். 'என்ன தவறு செய்திருக்கிறோம்' என்பது புரிந்து போகும். அடுத்த முறை திருத்திக் கொள்ளலாம்.

நான் முதலில் சொன்னது போல 'ஊடுருவி கவனிக்கும் தன்மை' முக்கியம். நான்கு பேர் காரில் போய்க் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு கதைகள் அலசப்படுகின்றன. உரையாடலில் ஓட்டுநர் பங்கு கொண்டாலும் அவர் கவனம் சாலையின் மீதிருக்கிறது அல்லவா! அது போன்று தான் புகைப்படக்காரரும் இருக்க வேண்டும். எந்த நேரத்தில் என்ன அபூர்வமான காட்சி நம் கண்ணுக்குள் விழும் என்று நமக்கே தெரியாதல்லவா! இயற்கையாகத் தெரியும் / ஏற்படும் காட்சிகள் ஒரு பக்கம் இருக்க, உங்களின் பார்வையில் சில காட்சிகள் அபூர்வமாகத் தெரியலாம். எனவே எப்போதும் விழிப்புணர்வு தேவை.

ஒரு நபரையோ அல்லது காட்சியையோ படமெடுக்கும் போது 'எப்படி அழகான விதத்தில் படமெடுக்க முடியும்?' என்று சிந்தனை செய்து முடிவுக்கு வர வேண்டும். ஒரு நபர் ஒரு கோணத்தில் சற்று மோசமாக இருப்பார்; வேறொரு கோணத்தில் அழகாக இருப்பார். காட்சிகளை எடுக்கும்போது எந்த இடத்தில் இருந்து எடுத்தால் ஃபிரேமுக்குள் நினைத்தது எல்லாம் வரும் என்று யூகித்து அங்கிருந்து எடுக்கவேண்டும். பின்புறம் சூரியன் இருக்க, காமிராவுக்கும் சூரியனுக்கும் நடுவில் ஆட்களை நிறுத்திப் படமெடுத்தால் அந்தப் படம் உண்மையிலேயே 'புகைப்'படம் ஆகிவிடும். அதாவது ஆட்கள் முகத்தில் போதிய வெளிச்சம் இல்லாததன் காரணமாக கருமை படிந்து விடும்.

இப்போதெல்லாம் புகைப்படத்துறை எவ்வளவோ வளர்ந்து விட்டது, மாடல் போட்டோகிராபி, நியூஸ் போட்டோகிராபி, இண்டஸ்டிரியல் போட்டோகிராபி என்று பல பிரிவுகள் வந்து விட்டன. உங்கள் ஆர்வத்துக்கும், திறமைக்கும் ஏற்றதை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருக்கிறது. என்ன ரெடியா! ஸ்மைல் ப்ளீஸ்!

சந்திப்பு: **ப்ரியன்**

உலகின் திருநாள்

வானிடை எழுந்து காரிருள் களைந்து
வருபவன் கதிரோன் அன்றோ? - அவன்
வரவினைப் போற்றி வணங்கிடும் திருநாள்
வையத்தின் திருநாள் அன்றோ?

மானுட இனத்தின் பசிப்பிணி போக்கும்
மருத்துவர் உழவர் அன்றோ? - புவி
மானத்தைத் தமது உயிரினும் மேலாய்
மதிப்பவர் அவர்தான் அன்றோ?

ஊனுடன் உடைக்கும் உரியன விளைத்தல்
உழவரின் தொழில்தான் அன்றோ?- அந்த
உழவரைப் போற்றி உவந்திடும் திருநாள்
உலகத்தின் திருநாள் அன்றோ?

ஆவலை இளங்குமரன்,
செங்கற்பட்டு



I. இரு தந்தையர் தம் புதல்வர்களுக்குப் பணம் தந்தனர். ஒருவர் தம் புதல்வனுக்கு 150 ரூபாயும், மற்றொருவர் 100 ரூபாயும் கொடுத்தார்கள். இரு புதல்வர்களும் தம் கையில் இருக்கும் பணத்தை எண்ணிப் பார்த்தபோது, இருவரது கையிருப்புகளும் மொத்தம் 150 ரூபாய் மட்டுமே இருந்தது. அவர்களிடம் வேறு பணம் இல்லை. எப்படி இது?

— ர. பாஸ்கர், பன்னிரண்டாம் வகுப்பு, எஸ்.ஆர்.ஜி.டி.எஸ். பள்ளி, திருவண்ணாமலை.



II. 20லிருந்து 28வரை இருக்கும் எண்களை இந்தக் கட்டத்தில் போட்டுக் கூட்டினால் 72 வர வேண்டும். ஆனால் ஒரே எண்ணே மறுபடியும் வரக்கூடாது. அது எப்படி?

— நான்ஸி, பத்தாம் வகுப்பு, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்.

III. ஐந்து என்ற எண்ணை பத்து முறை தான் பயன்படுத்தலாம். வேறு எந்த எண்ணையும் பயன்படுத்தக் கூடாது. ஐந்து என்ற எண்ணைப் பெருக்கலாம், கூட்டலாம், கழிக்கலாம், வகுக்கலாம். ஆனால் விடை 100 வர வேண்டும். எப்படி?

ஆதாரம் விளையாட்டுக் கணக்குகள்.

— ஏ.எல்.பாத்திமா, காரைக்கால்.

IV. ஒரு பெரியவரிடம் மூன்று பனங் குலைகள் இருந்தன. ஒவ்வொரு குலையிலும் பத்துக் காய்கள் இருந்தன. அம் மூன்று குலைகளில் முறையே ஒரு கண், இரண்டு கண், மூன்று கண் உடைய நுங்குகள் இருந்தன. இவற்றை மகன்கள் மூவரிடமும் கொடுத்து சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும்படி கூறினார் அப்பெரியவர். ஒவ்வொருவருக்கும் பத்துக் காய்கள், இருபது நுங்குகள் கணக்காக இருக்கவேண்டும் எப்படி?

— பெ. இராமசாமி, பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, செந்துறை.

V. 1932ம் ஆண்டு பேரனின் வயது அவன் பிறந்த ஆண்டின் கடைசி இரண்டு எண்களுக்குச் சமமாக உள்ளது. இதைத் தன் தாத்தாவிடம் அவன் கூறியபோது தாத்தாவும், "எனக்கும் 1932ல் என் வயது நான் பிறந்த ஆண்டின் கடைசி இரு எண்ணிற்குச் சமமாக உள்ளது" எனக் கூறுகிறார். எனில் தாத்தா பிறந்த ஆண்டு, பேரன் பிறந்த ஆண்டு என்ன?

— மு. வீரலட்சுமி, பதினோராம் வகுப்பு, அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.

VI. ஒரு கடிகாரம் 5 முறை மணி அடிக்க 12 வினாடி ஆகிறது எனில் 10 முறை மணி அடிக்க எத்தனை வினாடிகளாகும்?

— செந்தமிழ்ச் செல்வி, பத்தாம் வகுப்பு, காஞ்சிபுரம்.

VII. 1. பெர்ஷியா என்று முன்பு அழைக்கப்பட்ட நாடு எது?

2. ஆஸ்திரேலியாவின் தேசியப் பறவை எது?

3. தந்தை பெரியார் பிறந்த இடம் எது?

புதிர் உலகம்

4. பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் எது?

5. 2000மாவது ஆண்டின் சர்வதேச குழந்தைகள் மாநாடு இங்கிலாந்தில் உள்ள --------- நகரில் நடைபெற்றது.

— ஜோ. மகாலட்சுமி, பத்தாம் வகுப்பு, உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருச்சிற்றம்பலம், மயிலாடுதுறை.

ஈ	


விடைகள்

I. தந்தையரில் ஒருவர் மற்றவரது புதல்வர் என்பதே இங்குள்ள இரகசியம். இங்கு இருப்போர் 4 பேர் அல்ல. தாத்தா, தந்தை, புதல்வர் ஆகிய மூவர் மட்டுமே.

தாத்தா, தம் புதல்வனான தந்தைக்கு 150 ரூபாயும், தந்தை, தம் புதல்வனுக்கு 100 ரூபாயும் தந்தனர்.

II.

27	20	25
22	24	26
23	28	21



III.

5 x 5 = 25
5 x 5 = 25
5 x 5 = 25
5 x 5 = 25

100 + 5 - 5 = 100

IV.

முதல் மகன்
1 கண் காய்கள் 3 நுங்குகள் 3
2 கண் காய்கள் 4 நுங்குகள் 8
3 கண் காய்கள் 3 நுங்குகள் 9
10 20

2வது மகன்
1 கண் காய்கள் 3 நுங்குகள் 3
2 கண் காய்கள் 4 நுங்குகள் 8
3 கண் காய்கள் 3 நுங்குகள் 9
10 20

3வது மகன்
1 கண் காய்கள் 4 நுங்குகள் 4
2 கண் காய்கள் 2 நுங்குகள் 4
3 கண் காய்கள் 4 நுங்குகள் 12
10 20

V. தாத்தா பிறந்த ஆண்டு - 1866
1932ல் தாத்தாவின் வயது 66
பேரன் பிறந்த ஆண்டு - 1916
1932ல் பேரனின் வயது 16.

VI. 27 வினாடிகள் ஆகும்.

கடிகாரம், முதல் மணி அடிக்கும் நேரத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கில்லை. காரணம் திடீரென்று முதல் மணி அடித்து விடுகிறது. எனவே அடுத்த மணி அடிப்பதற்கு இடையே உள்ள நேரத்தைத் தான் கணக்கிட வேண்டும்.

2வது மணி அடிக்க 3 வினாடி
3வது மணி அடிக்க 3 வினாடி
4வது மணி அடிக்க 3 வினாடி
5வது மணி அடிக்க 3 வினாடி
மொத்தம் 12 வினாடி

எனவே, 10 முறை மணி அடிக்க முதல் மணியைக் கணக்கில், சேர்க்காமல் கணக்கிட்டால் 9 x 3 = 27 வினாடிகள்.

VII.

ஈ	ஈரான்
	ஈமு
	ஈரோடு
	ஈசல்
	ஈஸ்ட்பர்ன்

குருவியூரில் ஒரு பாட்டி இருந்தாள். அவளுக்கு உறவு ஒரே பேரன். ஆனால் அவன் கொஞ்சம் அப்பாவி. சற்றே மந்தபுத்தியுள்ளவன். ஆனால் ரொம்ப நேர்மையானவன். உண்மையே பேசுவான். அவனுக்குப் பள்ளிக்கூடம் எட்டிக்காயாய்க் கசந்தது.

அவன் மூன்றாம் வகுப்பு படித்தான். அவன் வகுப்பு ஆசிரியர் மிகவும் ஒல்லியாக இருந்தார். தலை மட்டும் பெரியதாக இருந்தது. அதனால் பிள்ளைகள் அவரை 'ஓணான் வாத்தியார்' என அழைத்தனர்.

அவர் மிகவும் நல்லவர். அவரிடம் தன் பேரன் ட்யூஷன் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதாக அம்மணிப் பாட்டி சொல்லிக் கொண்டிருந்தாள்.

பேரன் வரதன் புறக்கடை வாய்க்காலில் பல் விளக்கிக் கொண்டிருந்தான். ஒரு பெரிய ஓணான் ஓடியது. வரதன் வேப்பங்குச்சியைக் கடித்தபடியே அதைத் துரத்திக் கொண்டு ஓடினான். அவனுக்குப் பயந்து அது வயல்வெளியைத் தாண்டி சந்து பொந்தெல்லாம் ஓடியது.


"ஓணான் வாத்தியாரே! ஓணான் வாத்தியாரே! எனக்குப் பாடம் சொல்லிக் கொடுங்க" என்று சொல்லிக் கொண்டே அதைப் பின்தொடர்ந்தான் அசட்டு வரதன்.

ஓணான் ஒரு பெரிய புதருக்குள் நுழைந்து மறைந்து விட்டது. அந்தப் புதரைத் தோண்டினான் வரதன். ஒரு பெரிய துணி மூட்டை இருந்தது. அதைப் பிரித்தான். உள்ளே கண்ணைப் பறிக்கும் ஆபரணங்கள் இருந்தன. பிரமித்த வரதன் மூட்டையை முன் போல கட்டி வைத்து விட்டு வீட்டுக்குத் திரும்பினான்.

பாட்டி வரதனைக் கண்டதும், "எங்கேடா போய் தொலைஞ்சே? சாப்பிட்டுப் பள்ளிக்கூடம் போக வேண்டாமா?" என்றாள்.

"பாட்டி! ஓணான் வாத்தியாரை ஏழை, கஷ்டப்படறாருன்னு சொல்லுவியே! அதெல்லாம் பொய். ஓணான் வாத்தியார் பெரிய பணக்காரர். ஒரு மூட்டை நகையை யாருக்கும் தெரியாமல் ஊருக்கு வெளியிலே இருக்கிற மொட்டைப் பனைக்குக் கீழே





புதைச்சு வைச்சிருக்கார். இந்த ரெண்டு கண்ணாலே பார்த்தேன்''

மாலதி

என்று அபிநயத்தோடு சொன்னான் வரதன்.

பாட்டி மெதுவாக பேரனிடம் பேச்சுக் கொடுத்து புதையல் இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டாள்.

உலக்கை, கோணி எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, ''ஓணான் வாத்தியார்

ஓணான் ஒரு பெரிய புதருக்குள் நுழைந்து மறைந்து விட்டது. அந்தப் புதரைத் தோண்டினான் வரதன்.

வீட்டைக் காட்டு. நானும் பார்க்கிறேன். அப்போதானே நீ சொன்னது உண்மை யின்னு தெரியும்'' என்றாள் பாட்டி.

''இதெல்லாம் எதுக்கு?'' என்று கேட்டான் வரதன். ''யாராவது வாத்தியார் சேமிப்பை எடுக்க வந்தா அடிக் கிறதுக்கு உலக்கை.



கை வியர்வையிலே வழுக்காம இருக்கக் கோணிப்பை – சரி, சரி, வா'' என்று வரதன் நம்பும்படி சொல்லி விட்டு நடந்தாள்.

நல்லவேளையாக யாரும் எதிர்ப்பட வில்லை. ''யார்கிட்டேயும் வாத்தியார் புதை யலைப் பத்திச் சொல்லாதே! பாவம் வாத் தியார்... பறிச்சுடுவாங்க'' என்று எச்சரித்

அப்ப மழை!

திருந்தாள்.

அடையாளம் காட்டினான் பேரன். பாட்டி உலக்கையால் நெம்பி புதையலை வெளியே எடுத்தாள். "ஏன் பாட்டி! வெளியே எடுக்கறே?'' என்று கேட்டான் வரதன்.

''உள்ளே இருட்டா இருக்கு. சரியாத் தெரியலே. வெளியே எடுத்துப் பிரிச்சுப் பார்க்கிறேனே!'' என்றான் பாட்டி.

> **''இன்னொருத்தர் சொத்துக்கு ஆசைப்படக் கூடாதுன்னு எனக்குச் சொல்லிக் கொடுத்துட்டு நீயே இப்படி செய்யலாமா?''**

துணி கிழிந்து விட்டது. 'எவரோ எங்கோ இருடியது' என்று புரிந்து கொண்ட பாட்டி துணி மூட்டையைச் சாக்குப் பைக்குள் இறக்கினாள்.

''ஏன் பாட்டி கோணிக்குள்ளே மாத்தறே?''

"துணி கிழிஞ்சிருக்கே! அதான்'' பாட்டி கோணியை நன்றாகக் கட்டி தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடந் தாள்.

''பாட்டி! இது ரொம்ப அநியாயம்! இன்னொருத்தர் சொத்துக்கு ஆசைப்படக் கூடாதுன்னு எனக்குச் சொல்லிக் கொடுத்துட்டு நீயே இப்படி செய்ய லாமா? ஒணான் வாத் தியார் பாவமில்லையா!'' இப்படி புலம்பிக் கொண்டே வந்தான் வரதன்.

பாட்டி வேகமாக நடந்து வீடு வந்து சேர்ந் தாள்.

"பாட்டி! உன்னோட திருட்டை நான் பஞ்சாயத்துத் தலைவர் வீட்டிலே போய் சொல்லப் போறேன்'' வரதன் வாசல் வரை போய் விட்டான்.

"வரதுக் கண்ணு! இப்போ அப்ப மழை பெய்யப் போறதே! தின்னுட்டுப் போயேன்! நீ திரும்பி வரதுக்குள்ளே நின்னுடும்'' என்றாள் பாட்டி.

வரதன் சடாரென்று திரும்பினான்.

"அப்ப மழை! இதுவரை கேள்விப்பட் டதே இல்லையே?''

"நீ குழந்தையா இருக்கும்போது பெய்தது. இப்போ மேகம் அதே மாதிரி கூடி இருக்கு. பத்து நிமிஷத்திலே பெய்திடும். நீ நம்ம மொட்டை மாடியிலே போய் நின்னுக்கோ'' என்றாள் பாட்டி.


வரதன் மளமளவென்று மாடிக்குப் போனான். பாட்டியும் சுறுசுறுப்பாக அப் பத்துக்குக் கரைத்தாள். பத்து நிமிஷமானதும் வரதன் கத்தினான்.

"பாட்டி! அப்ப மழை எப்போ பெய்யும்?''

"இதோ பெஞ்சுடும்.''

"நான் இறங்கி வரட்டுமா?''

"வேண்டாம். வேண்டாம். கடகடன்னு பெஞ்சுடும்'' என்று பாட்டி அவசரமாகக் கூறினாள்.



அடுப்பில் எண்ணெய் வைத்து அப்பக் குழியில் அப்பம் தயாரித்தாள். முற்றத்தில் நின்றபடி வீசி வீசி எறிந்தாள். வரதன் பேசவே நேர மில்லாமல் ஓடி ஓடிப் பொறுக்கிச் சாப் பிட்டான்.

"அவ்வளவுதானா? இன்னும் பெய்யுமா?'' என்று கேட்டான் வரதன்.

"பெய்யும். பெய்யும். இறங்காதே. விட்டு விட்டுப் பெய்யும். முழுவதையும் சாப் பிடாதே! வயிறு ஒத்துக்காது. இதிலே சேகரிச்சு வைச்சுக்கோ'' என்று ஒரு பாத்திரத்

தையும் கொடுத்து விட்டுப் போனாள்.

வரதனுக்கு அப்பமென்றால் உயிர். அன்று இருட்டுகிற வரை பாட்டி தயவால் அப்ப மழை பெய்தது.

பாட்டி அப்பம் தயாரித்த சுவடுகளை அழித்து விட்டு, "அவ்வளவுதான்! இறங்கி வா" என்று குரல் கொடுத்தாள்.


வரதன் கீழே இறங்கி வந்தான்.

"பாட்டி! நீ சாப்பிட்டியா? அப்பம் ரொம்ப ஜோராயிருந்தது" என்றான். பிறகு பஞ்சாயத்துத் தலைவர் வீட்டுக்குப் புறப் பட்டான்.

"பஞ்சாயத்துத் தலைவர் ஊரிலே இல்லையாம்! நாளைக்குப் போ" என்றாள் பாட்டி.

வரதன் கொஞ்சம் மோரைக் குடித்து விட்டுப் படுத்துத் தூங்கினான். வரதன் தூக்கத்தில் கும்பகர்ணனுக்கும் மேலே!

பாட்டி ஊர் அடங்கிய பிறகு புறக்கடையில் குழிதோண்டி கோணிப் பையைப் போட்டு மூடினாள். மேலே தரையைச் சமப்படுத்தி குப்பைக் கழிவுகளை நிறைத்



தாள். அவளது இந்த வேலைகள் முடியும்போது கோழி கூவியது. அதன் பிறகு வந்து படுத்தவள் அயர்ந்து உறங்கினாள்.

எழுந்து பார்த்தபோது படுக்கையில் வரதன் இல்லை. பஞ்சாயத்துத் தலைவர் தன் குழுவினரோடு வந்து குரல் கொடுத்தார்.

பாட்டி வெளியே வந்து வரவேற்றாள்.

"அம்மணியம்மா! எங்கேயோ போயி புதையல் எடுத்திங்களாமே? எங்கே பதுக்கி இருக்கிங்க?" என்று அதிகாரமாகக் கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

"பாட்டி! கோணிப் பையைக் கொண்டு வா. அது ஓணான் வாத்தியாரோடது" என்றான் வரதன்.

"பாட்டியம்மா! நாங்க புதையல் இருந்த இடத்தைப் பார்த்துட்டுத்தான் வரோம். மண் பொலபொலன்னு இருக்கு" என்றார் ஒருவர்.

"ஓணான் வாத்தியார் ஏழை. புதைச்சு வைக்கிற அளவு பணம் இருந்தா அவர் ஏன் கஷ்டப்படுகிறார்? இந்தக் கிறுக்கன் சொன்னதை நம்பிட்டு வேலை மெனக்கெட்டு இத்தனை பேரும் வந்திருக்கீங்களே! சரி. அந்தப் புதையலை நான் என்றைக்கு எடுத்தேன்னு கேளுங்கோ!" என்றாள் பாட்டி நிதானத்

அன்று இருட்டுகிற வரை பாட்டி தயவால் அப்ப மழை பெய்தது.

துடன்.

வரதனுக்கு நேற்று, இன்று, நாளை, ஒரு வாரம் முன்பு என்றெல்லாம் கணக்காகச் சொல்லத் தெரியாது.

"ஓ! என்னை அசடுங்கறியா? ஐயா! நான் அடையாளம் வைச்சிருக்கேன்! அப்ப மழை பெய்ததே, அன்னிக்குத்தான் பாட்டி புதையலை எடுத்தாள்" என்றான் வரதன்.

அனைவரும் 'கொல்' லென்று சிரித்தனர். "பாட்டி சொன்னது சரிதான்! கனாகண்டு பையன் உளறுகிறான். அப்ப மழையாமே!" என்று விமரிசித்தபடி வீட்டை ஆராய்ந்தனர்.


பிறகு பாட்டி தந்த காப்பியைக் குடித்து விட்டு தத்தம் இருப்பிடம் திரும்பினர்.

பாட்டி உடனே ஊரைக் காலி செய்தால் ஊரார் சந்தேகப்படுவர் என்று ஊரில் சிறிது காலம் இருந்தாள். பிறகு ஏதோ சாக்குச் சொல்லி பேரனுடன் புதையலை எடுத்துக் கொண்டு தூர தேசம் சென்று வாழ்ந்தாள்.

5 ஆளப்பிறந்தவன்!

கதை: ராஜி படம்: லலிதா




இது என்ன பிரமாதம்! நீ இன்னும் அரண்மனையைச் சுற்றிப் பார்க்க வில்லையே, வா காட்டுகிறேன்.
அரண்மனையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது...
நண்பா, இது என்ன தரையில் ஒரு கதவு! நிலவறையா?
தெரியவில்லை. நானே இப்போதுதான் பார்க்கிறேன். திறந்து பார்ப்போமே.


இது என்ன மூட்டைகள்? சோதித்துப் பார்க்கலாம்.
பார்த்து, கண்ணே தெரியவில்லை.
ஐயையோ மிளகாய்ப் பொடி... அரிசி மாவு. இது பண்டகசாலை போலிருக்கிறது.
அ-ச்..சூ
ஆமாம் சோமு.
இளவரசரைத் தேடிக் கொண்டு அங்கு வந்த பிரபாகரன் –
இளவரசே என்ன கோலம்? உடலெல்லாம் அரிசி மாவு.
ஒன்றும் வேண்டாம் சும்மா...
தங்களுக்கு என்ன தேவையென்றாலும் என்னிடம் கூறுங்கள்.


இருவரும் குளித்துப் படுக்கை அறைக்கு வந்தனர்.
இவ்வளவு மிருதுவான மெத்தையில் எனக்குத் தூக்கம் வராது போலிருக்கு ஜெயசிம்மா?
அப்படியானால் வழக்கம் போல் தரையில் படுப்போம். ஆனால் பிரபாகரன் சந்தேகப்படாமல் இருக்க தலையணையை வைத்துப் போர்த்தி விடலாம்.
இருவரும் கீழே படுத்திருந்தனர். அப்போது –
ஜெயசிம்மா! அதோ ஓர் உருவம்.
உஸ். சத்தம் போடாதே!


(தொடரும்)

பிருந்தாவனம்

உலகிலேயே பிரம்மாண்டமான அரண்மனை சீனாவில் பீகிங் எனப்படும் பெய்ஜிங்கில் உள்ள 'இம்பீரியல் பேலஸ்'தான். இந்த அரண்மனை கட்டப்பட்டிருக்கும் நிலத்தின் பரப்பளவு 7,20,000 சதுர மீட்டர்கள் ஆகும்.

– ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபிசெட்டிபாளையம்.






தென்னாப்பிரிக்காவில் தூக்கணாங்குருவி இனத்தைச் சேர்ந்த ஒரு பறவை உள்ளது. பல குருவிகள் சேர்ந்து பெரிய கூடாகக் கட்டுகின்றன. இது ஒரு குடிசை அளவு பல அறைகள் கொண்டதாக இருக்கும். அறைக்கு ஒரு ஜோடி வீதம் வசிக்கும். முந்நூறுக்கு மேற்பட்ட அறைகள் கொண்ட கூடுகள் காணப்படுகின்றன.

– எம். மோகன்ராஜ், சீர்காழி.

உடல் நலத்தைப் பேண வைட்டமின்களும் மிகவும் தேவை என்று முதன் முதலாகக் கண்டறிந்தவர் சர் ஃப்ரெட்ரிக் கௌலந்து ஆவார். இதற்காக இவருக்கும் கிறிஸ்டியான் எக்மான் என்பாருக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

– டி.எஸ். கிருஷ்ணன், களியூர்.





ரேனே தேகைபல் லேனெக் என்ற பிரெஞ்சு டாக்டர்தான் 1816ல் ஸ்டெதாஸ்கோப்பை முதன் முதலில் உருவாக்கியவர். அவர் உருவாக்கி, உபயோகப்படுத்திய ஸ்டெதாஸ்கோப் ஒரு அடி நீளமுள்ள மெல்லிசான மரக்குழல்தான்! அவர் தெருவில் சென்று கொண்டிருந்த போது சின்னக் குழந்தைகள் மரக்குழாய் ஒன்றில் ஃபோனில் பேசுவதுபோல விளையாடியதைப் பார்த்து வீட்டிற்கு வந்து அதைப் போலவே ஸ்டெதாஸ்கோப்பை உருவாக்கினார்.


– இரா. விநோதினி

தேங்காய் பறித்துச் சாப்பிடும் நண்டுகள்!



தனக்கு ஆபத்து என்று தெரிந்தவுடன் பல்லி தனது வாலைத் துண்டித்துக் கொள்கிறது. வால் தனியாகச் சுழன்று விழுந்து துடிப்பதைப் பார்த்து எதிரி குழம்பிப் போய் இருக்கும்போது, பல்லி தப்பித்து விடுகிறது. வால் இழந்த சிறிது நாட்களிலேயே பல்லிக்கு வேறு ஒரு வால் முளைத்து விடும்.

- இ. அருணாசலம், தென்காசி.



வண்ணத்துப் பூச்சிகளைக் கையால் பிடித்தால் விரல்களில் வண்ணப் பொடி ஒட்டியிருப்பதைக் காணலாம். வண்ணத்துப் பூச்சியின் இறக்கைகளின் மீதுள்ள நுண்துகள்களைத் தடவியெடுத்து விட்டால் இறக்கை ஒரு நிறமற்ற, ஒளிபுகும் மென் படலமாகத் தோன்றும். இதுவே வண்ணத்துப் பூச்சிகள் பளபளப்பாக இருப்பதற்குக் காரணம்.

- வே. அவந்திகா, ஏழாம் வகுப்பு 'அ' பிரிவு, நா. மேல்நிலைப்பள்ளி, பொ.வெ.க. பொங்கலூர்.



பூனைக்கு நிறபேதம் தெரியாது. எல்லாமே கறுப்பு வெள்ளையாகத்தான் தெரியும். நீரில் நனையப் பிடிக்காது. முழு இருட்டில் பூனை எதையும் பார்க்க முடியாது. மங்கலான வெளிச்சத்தில் மற்ற விலங்குகளை விட நன்றாகப் பார்க்கும் சக்தி உண்டு. நாய்க்கும் பூனைக்கும் ஜென்மப் பகை என்பது தவறான கருத்து. யோசிக்கும் திறமையும் கெட்டிக்காரத்தனமும் கூட பூனைக்கு உண்டு.

- ஜி. ராஜேஸ்வரி, பதினோராம் வகுப்பு 'அ' பிரிவு, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்.

ஜப்பானியர்கள் இடுப்பு வரை குனிந்து ஒருவருக்கொருவர் வணக்கம் சொல்லுவர். கிழக்கிந்தியதீவு மக்கள் மூக்குகளை உரசிக் கொண்டு வணக்கம் சொல்லுவர். நீலகிரி ஆதிவாசிகள் இருவர் தலைமேல் இருவர் கைவைத்து வணக்கம் சொல்லுவர். திபெத்திய லாமாக்கள் வணங்கும்போது நாக்கை நீட்டுவது வழக்கமாம்!


- டி.எஸ்.பாலு, சென்னை.


பிருந்தாவனம்

பிருந்தாவனம்

சனியின் சுற்றளவு 17,000 மைல்கள். சனியின் குறுக்களவு 73,000 மைல்கள் ஆகும். சனிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தூரம் 88.6 கோடி மைல்கள். சனிக்கும், பூமிக்கும் இடைப்பட்ட தூரம் 75 கோடி மைல்கள். சனி தன்னைத் தானே சுற்றி வர 10 மணி 14 நிமிட நேரமாகும். சனி சூரியனைச் சுற்றிவர 29½ வருடங்களாகும்.

– ச. இலக்குமணசுவாமி,
திருநகர், மதுரை-6.






வெப்ப, மிதவெப்பக் கடல்களிலெல்லாம் நாம் கடற் குதிரையைக் காணலாம். இவை குழாய் மீன் குடும்பத்தைச் சேர்ந்தவை. சிறிய கடல் உயிரினங்கள், மற்ற மீன்களின் முட்டைகள் இவற்றிற்கு உணவாகும். இறந்த பொருட்களைக் கடற்குதிரை உண்பதில்லை. ஐம்பது வகையான கடற் குதிரையினங்கள் வாழ்கின்றன. இவற்றின் நீளம் ஐந்திலிருந்து பன்னிரண்டு அங்குலம் வரை இருக்கும்.

– ஏ.எல். ராவியாகனி,
காரைக்கால்.

சூட்கேஸுக்குள் மடித்து எடுத்துச் செல்லக் கூடிய வகையில் ஒரு ஹெலிகாப்டரை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். நமக்குத் தேவையான போது இந்த ஹெலிகாப்டரில் பறந்து சென்று, தேவையற்ற சமயங்களில் சூட்கேஸில் மடித்து நமது அறையில் வைத்துக் கொள்ளலாம். சூட்கேஸில் இருந்து திறந்த ஐந்தே நிமிடங்களில் இதனைப் பொருத்திப் பறந்து சென்று விடலாம். இதனுடைய வேகம் மணிக்கு நூறுமைல்.

– ஆர். ஆர். பூபதி,
கன்னிவாடி அஞ்சல்,
திண்டுக்கல்.





பசிபிக் தீவுகளில் ஒருவகை ராட்சஸ நண்டுகள் உள்ளன. இவை தென்னை மரத்தின் மீது ஏறித் தேங்காயைக் குடைந்துச் சாப்பிடுகின்றன. மட்டையுடன் கூடிய தேங்காயைக் குடைந்துவிடக் கூடிய பலம் பெற்றவை அவை. ஆப்பிரிக்காவில் ஒரு வகை ராட்சஸத் தவளை உள்ளது. இது பத்து பவுண்டு கனம் இருக்கும்.

– எஸ். மோகன்ராஜ்,
சீர்காழி.

பிருந்தாவனம்



கோகுலம் க்விஸ் முடிவு!

நவம்பர் க்விஸ் போட்டியில் ஏராள மாணவர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் நிறைய பேர் சரியான விடைகளை எழுதியிருப்பதால் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. உலகிலுள்ள தீவுகளுள் மிகப் பெரியது கிரீன்லாந்து.

2. பாலூட்டிகளில் மிகப் பெரியது நீலத் திமிங்கலம்.

3. கவிமணி என்று அன்புடன் அழைக்கப்பட்ட கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை.

4. ஆல்ஃபிரட் நோபெல் ஸ்வீடன் நாட்டுக்காரர்.

5.தொல்காப்பியர் இயற்றிய நூல் தொல்காப்பியம்.

6. மிகுந்த ஒளி வீசும் நட்சத்திரம் சிரியஸ்.

7. நட்சத்திர மீன் முட்தோலிகள் தொகுதியைச் சேர்ந்தது.

8. இந்தியாவின் இரும்பு மனிதர் என்று போற்றப்பட்டவர் சர்தார் வல்லபாய் படேல்

9. ஒலிம்பிக்ஸில் பளு தூக்கும் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்தியப் பெண் கர்ணம் மல்லேஸ்வரி.

10. காந்தியடிகள் பிறந்த மாநிலம் குஜராத்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. சி. கார்த்திக் கிரிச்சந்தர், விருதுநகர்

2. த. சிவபாரதி, எட்டாம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி. பள்ளி, மல்லிபாளையம், ஈரோடு மாவட்டம்.

3. ஆர். வினோதினி, ஒன்பதாம் வகுப்பு, அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, ஏரல், தூத்துக்குடி மாவட்டம்.

4. ஆர். ஹரி, நாகமலை, மதுரை.

5. அ. முத்து சிவம், நாகமலை, மதுரை.

6. பி.பி. கிருஷ்ண பிரசாத், சேலம்.

7. கு. வெற்றிமணி, உள்ளிக்கடை, தஞ்சை மாவட்டம்

8. ஆர். கோபிநாத், பதினோராம் வகுப்பு, மஞ்சம்பட்டி அஞ்சல், திருச்சி மாவட்டம்.

9. செ. செந்தில் முருகன், கொன்னாம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

10. அ. சரவணன், வேடச்சந்தூர் அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம்.

11. பா. தீபா, எட்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, அகஸ்தீஸ்வரம், குமரி மாவட்டம்.

12. எஸ். மகேஸ் ராஜா, ஐடியல் மேல்நிலைப் பள்ளி, அந்தியூர், ஈரோடு மாவட்டம்.

13. ஆர். ஜெபாசித்ரா, பதினோராம் வகுப்பு, அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, வேலூர்.

14. ஆர். யாமினி, எட்டாம் வகுப்பு, எம்.ஜி.உயர் நிலைப்பள்ளி, திருவண்ணாமலை.

15. ப. சத்யா, பதினோராம் வகுப்பு, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிப்பட்டி.

16. டி. எஸ். அறிவழகன், திருப்புலிவனம், காஞ்சிபுரம் மாவட்டம்.

17. கே. கலைச் செல்வி, ஒன்பதாம் வகுப்பு, ஏ.வி. உயர்நிலைப்பள்ளி, பரமக்குடி.

18. பி. செந்தில்குமார், அத்தாணி, ஈரோடு மாவட்டம்.

19. ஏ. சசிகலா, பத்தாம்வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, பெரியதச்சூர்.

20. ஆர். ஜானகிராமன், எஸ்.எஸ். உயர்நிலைப் பள்ளி, கோவை.

ஜனவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

பிப்ரவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28			

மார்ச்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

ஏப்ரல்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

மே

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

ஜூன்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

ஜூலை

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

ஆகஸ்ட்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

செப்டெம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

அக்டோபர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

நவம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

டிசம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

கோகுலம் 2001



ராணி வந்து விட்டதா?

எங்கள் சித்தப்பா பத்திரிகைகளில் துணுக்கு எழுதுபவர். தினமும் அலுவலகத்திலிருந்து போன் செய்து ஒவ்வொரு பத்திரிகையின் பெயரையும் சொல்லி வந்திருக்கிறதா என்று விசாரிப்பார். அன்று சித்தப்பா போன் செய்த போது ஊரிலிருந்து வந்திருந்த என் பாட்டிதான் போனை எடுத்தார். சித்தப்பா "ராணி வந்துருச்சா?"



என்று கேட்டார். உடனே பாட்டி, "ராணி வரலை. இன்னிக்கு மட்டும் இல்லை. இன்னும் இரண்டு நாளைக்கு வராது" என்றார். "பாட்டி ராணி அப்பவே வந்தாச்சு" என்று கத்தினேன் நான். உடனே பாட்டி" எங்கே வந்தாள்? எல்லா வேலையும் நான் தானே செஞ்சேன்" என்றார். பிறகுதான் புரிந்தது. 'ராணி' புத்தகத்தை எங்கள் வீட்டு வேலைக்கார அம்மாள் என்று நினைத்து விட்டார் பாட்டி என்று.

– ப. சௌந்தர்யா,
மடிப்பாக்கம், சென்னை.

அரிசி மூட்டை

அப்பாவுடன் அரிசி மண்டிக்குச் சென்றிருந்தேன். அங்கு வந்த ஒருவர் கடைக்காரரிடம், "ஏங்க, பத்து மூட்டை பொன்னி அரிசி இன்னிக்குத் தரேன்னு சொன்னீங்களே, வந்து விட்டதா?'' என்றார். "மன்னிச்சிடுங்க. சுத்தமா ஒரு மூட்டை கூட வரலைங்க. நாளைக்குக் கண்டிப்பா தந்துடறேன்" என்றார் கடைக்காரர். "எனக்கு ரொம்ப அவசரம். சுத்தமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆள் வைத்து சுத்தம் செய்து கொள்கிறேன்'' என்றார் வந்தவர். உடனே கடைக்காரர் சிரித்து விட்டார். நாங்களும் அவருடன் சேர்ந்து சிரித்தோம். "ஏன் சிரிக்கிறீங்க?" என்று கேட்டார் அவர். "ஒரு மூட்டை அரிசி கூட இல்லை என்பதைத்தான் சுத்தமாக இல்லை" என்றேன் என்று கடைக்காரர் சொன்னதும், அவரும்



சிரித்தார்.

– ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.

பொங்கல்

நானும் தம்பியும் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தவறாமல் கோயிலுக்குப் போவோம். கோயில் பூசாரி எங்களை அன்புடன் கவனிப்பார். எப்பொழுதும் சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் கொடுப்பார். அன்றும் பிரசாதம் கொண்டு வந்தார். ''சாமி இன்னிக்கு என்ன பிரசாதம்?'' என்றான் தம்பி.




"வழக்கம் போல சர்க்கரைப் பொங்கல் தான்" என்றார் பூசாரி. உடனே தம்பி, "தினமும் சாமிக்குச் சர்க்கரைப் பொங்கல் கொடுத்தால் சுகர் வந்துடுமே" என்றான். "இந்த மாதிரி லொள்ளு பண்ணினா சாமிக்குக் கோபம்தான் வரும்" என்றார் பூசாரி. தம்பி மன்னிப்புக் கேட்டான்.

– ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

கொசுக்கடி

என் அத்தை பெண் சபீதா மிகவும் சிறியவள். புரிகிறதோ இல்லையோ டீ.வி. நிகழ்ச்சியைத் தொடர்ந்து பார்ப்பாள். வீட்டின் பின்புறம் சாக்கடை மூடப் படாமல் இருப்பதால் பகல், இரவு என எப்பொழுதும் கொசு கடித்துக் கொண்டிருக்கும். அன்று டீ.வி நிகழ்ச்சி யின் இடையே கொசுவர்த்தி விளம்பரம் வந்தது. அதில் கொசுவர்த்தி ஏற்றியதும்



கொசுக்கள் பறந்தன. சிறிது நேரத்தில் சபீதாவைக் கொசு கடிக்க, "என்ன இது! கொசுவர்த்தி வைத்தும் கொசு கடிக்குதே" என்றாள். "கொசுவர்த்தி ஏற்றலையே" என்றேன் நான். "இப்பத்தானே டீவியில் காண்பித்தார்கள்" என்றாளே பார்க்கலாம்!

– சு. துர்கா காத்யாயனி, ஒன்பதாம் வகுப்பு, புனித ஆலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

வேஸ்ட்

என் தங்கை அபர்ணா சுட்டிப் பெண். ஒரு நாள் பள்ளியில் இருந்து வந்த தும் ஷூவுக்கு உள்ள லேஸை எங்கோ போட்டு விட்டாள். மறுநாள் பள்ளிக்குக் கிளம்பும் போது லேஸைத் தேட ஆரம்பித் தாள். கிடைக்கவில்லை. அப்பா கோபத் துடன் அடிக்கப் போனார். "அப்பா கொஞ்சம் பொறுங்க. தேடிக்




கண்டுபிடிக்கலாம்" என்றாள் அபர்ணா. எல்லோரும் சேர்ந்து தேடியதில் லேஸ் கிடைத்து விட்டது. உடனே அபர்ணா அப்பாவிடம், "நல்ல காலம் நீங்கள் என்னை அடிக்கவில்லை. அடித்திருந்தால் அந்த அடி வேஸ்டாகியிருக்கும்" என்றாள். அப்பா கோபத்தை மறந்து சிரித்து விட்டார்.

– சு. செண்பகவல்லி, பாளையங்கோட்டை.

காப்பி

அப்பாவின் நண்பர் ஒருநாள் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அம்மா ஊருக்குச் சென்றிருந்ததால் அக்காவைக் குடிக்க ஏதாவது கொண்டு வருமாறு கூறினார் அப்பா. என் அக்கா காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். உடனே அப்பாவின் நண்பர், "எனக்குக் காப்பி ரொம்பப் பிடிக் கும்னு உனக்குத் தெரியுமா?" என்று வியந் தபடி கேட்டார். உடனே என் அக்கா, "ஜெராக்ஸ் கடை வைத்திருப்பவர்களுக் குக் காப்பிதானே பிடிக்கும்" என்றாள். நான், அப்பா, அப்பாவின் நண்பர் மூவரும் சிரித்து விட்டோம்.

– எஸ். ராஜசேகரன், ராஜபாளையம்.



அழகன், செந்தில், குமரன்!

8 ஃபைல் கிடைத்தது!

திரும்பவும் பிரதான சாலையை அடைந்ததும்தான் செந்தில் நிம்மதியாக உணர்ந்தான். சற்று தாமதம் செய்திருந்தாலும், அந்த மூன்று சதிகாரர்களும் கத்தியால் தன்னைக் கூறு போட்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நிதானமாக நடந்து சென்றான். ஆனால் உள்ளுக்குள் அமைதியின்றித் தவித்தான். அந்தச் சதிகாரர்கள் வசம், ஒரு பாம்! அதை எங்கே வைப்பார்கள்? எப்போது வைப்பார்கள்? ஏன் வைக்கிறார்கள்? எப்படி தடுப்பது? விடை தெரியாத கேள்விகள்! பீதியில் உறைந்திருந்த செந்தில் மூளை சிந்திக்க மறுத்தது.

இரவு வெகு நேரம் கழித்துக் கண்ணயர்ந்தான். சதிகாரர்கள் துரத்தினர். பாம் வெடித்தது.



சிவப்பு ஃபைலை ஒரு பெருச்சாளி இழுத்துச் சென்றது. திடுமென்று அந்தப் பொல்லாத பெருச்சாளி பேசியது! 'என் பெயர் தெரியுமா?' என்றது! எல்லாமே கனவில்தான்!

காலையில் சீக்கிரமே எழுந்து விட்டான் செந்தில். அசதியாக உணர்ந்தான். பள்ளிக்குச் செல்லும் மனநிலையில் அவன் இல்லை.

காலை 6.30. ஹாலில் தியாகராஜன் மூலையை வெறித்தபடி உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் பிரிக்கப்படாமல் கிடந்தது நியூஸ் பேப்பர். அப்பாவின் நிலை செந்தில் மனதைப் பிசைந்தது.

செந்தில் அப்பாவின் அறைக்குள் சென்றான். இங்குதான் அந்தச் சிவப்பு ஃபைல் சனியனை அப்பா அன்று பார்த்துக் கொண்டிருந்தார்... அது எப்படி திடுமென்று காணாமல் போயிருக்கும்...?

எதையோ பார்க்கத் தவறி விட்டதாக அவன் உள்ளுணர்வு அறிவுறுத்தியது.

அது என்ன? இந்த அறையையும், வீட்டையும் அவன் பலமுறை சல்லடை இட்டுத் தேடிப் பார்த்து விட்டான். இலக்கில்லாமல் அவன் பார்வை சென்றது.


டீப்பாய் ஒட்டியிருந்த சுவர்ப் பகுதியில், லேசான பழுப்பு நிறத் தீற்றல் கறை! மிகவும் கூர்மையாகப் பார்த்தாலொழியஅது சிக்கியிருக்காது!

தீவிரமாக யோசித்தான். முதலில், செந்தில் பார்த்தபோது அந்தச் சிவப்பு ஃபைல் தரையில் இருந்தது. அப்போது

பத்மா ரவிசங்கர்

அப்பா வேலை பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு... முதலில் கோதண்டராமனும், பின் சண்முகமும் வீட்டிற்கு விசிட் செய்தனர். அந்தச் சமயம், வேலை முடிந்து அந்த மர டீப்பாய் மேல் ஃபைலை வைத்திருந்ததாக அப்பா சொல்லியிருந்தார். அங்கிருந்து எப்படி மாயமாக மறைய முடியும்?

கடைசியாக, சிவப்பு ஃபைல் இருந்த இடம் இந்த மர டீப்பாய்தான். டீப்பாய், அறை சுவரை ஒட்டி இருந்தது.



செந்தில் டீப்பாயை உற்றுப் பார்த்தான். குனிந்து, அதன் கீழே பார்த்தான். வித்தியாசமாக எதுவும் புலப்படவில்லை. தடயம் ஏதும் சிக்கவில்லை.

நிமிர்ந்தவன் பார்வை சட்டென்று உஷாரானது. அது என்ன? டீப்பாய் ஒட்டியிருந்த சுவர்ப் பகுதியில், லேசான பழுப்பு நிறத் தீற்றல் கறை! மிகவும் கூர்மையாகப் பார்த்தாலொழியஅது சிக்கியிருக்காது! ஒரு விரல் அளவுதான் இருந்தது. சுத்தமான சுவரில் திடுமென்று இந்தக் கறை தோன்றியது எப்படி? என்னவாக இருக்கும்? எப்படி கண்டுபிடிப்பது?

டீப்பாய் மீது கையை ஊன்றி, சுவர் அருகே முகத்தைக் கொண்டு சென்று பார்த்தான். ஏதோ வாசனை தட்டுப்பட்டது! அவன் மூக்கு பழுப்புக் கறைக்கு மிக நெருங்கிச் சென்றதும், அவனுக்குப் புலப்பட்டு விட்டது! அது – மூக்குப்

பொடி நெடி!

செந்தில் துள்ளலுடன் ஹாலுக்கு வந்தான். "அப்பா!" என்று உற்சாகமாகக் கூவினான். "கண்டுபிடிச்சுட்டேன்!"

"என்னப்பா சொல்றே?"

"முதல்ல என் கேள்விக்குப் பதில் சொல்லுங்க! அன்னிக்கு வந்த உங்க ரெண்டு நண்பர்கள்ல யார் மூக்குப் பொடி போடுவாங்க?"

"கோதண்டராமன்!" என்றார் செந்திலை வியப்புடன் பார்த்தபடி.

"அவர்தான் அந்த ஃபைலை எடுத்திருக்கார்!" என்றான் தீர்மானமாக.

"எப்படி சொல்றே?" என்று கேட்ட தியாகராஜனை அறைக்கு அழைத்துச் சென்று காண்பித்தான்.

"கிரேட், செந்தில்!" என்று முக மலர்ந்த தியாகராஜன், செந்திலைப் பாசமுடன் தழுவிக் கொண்டார்.

"ஃபைலை டீப்பாயிலிருந்து எடுக்கும் போது, அவர் அறியாமலே அவரோட விரல் சுவத்துல பட்டிருக்கு! ஆனா, எப்படி உங்க கண் முன்னாலே அவர் எடுத்திருக்க முடியும்னுதான் எனக்குப் புரியலைப்பா!"

"எனக்குப் புரிஞ்சுடுச்சு செந்தில்! இப்பதான் எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வருது! கோதண்டராமன் கிளம்பறதுக்கு முன்னே குடிக்கத் தண்ணீர் கேட்டார்! நான் போய் எடுத்துக்கிட்டு வர்றதுக்குள்ளே, அவர் அந்த ஃபைலை சுமுக்கமா எடுத்துத் தன் பைக்குள்ளே மறைச்சு வச்சிருக்கணும்!"

கோதண்டராமன் வீட்டில் இருந்தார். அலுவலகம் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். செந்திலுக்குச் சுர்ரென்று கோபம் வந்தது. புனிதமான


"உன் அப்பா விஷயமா ஒருநாள்கூட என் கிட்ட நீ சிபாரிசு பேசாததை நினைச்சா, எனக்குப் புல்லரிக்குதடா. கிரேட்!"

நட்பைப் பயன்படுத்தி ஈனச்செயல் புரிந்த இந்த மனிதர் எவ்வளவு கேவலமானவர்...

"என்ன செந்தில் ஆபீஸ் கிளம்பற நேரத்துல வந்திருக்கே?" என்று புன்முறுவலுடன் கேட்டார் கோதண்டராமன்.

"இனிமே நீங்க எப்பவுமே ஆபீஸ் கிளம்ப முடியாதுன்னு சொல்ல வந்தேன்!"

கோதண்டராமன் முகம் சட்டென்று சுருங்க "என்னடா சொல்றே?" என்றார்.



"உங்க வேலை காலின்னு சொல்றேன்!"

"ராஸ்கல்! வயசுக்கேத்த மாதிரியா பேசறே?"

"நீங்கதான் வயசுக்கேத்த மாதிரி நடந்துக்கலை! அந்தச் சிவப்பு ஃபைலை எங்க வீட்டுலருந்து திருடியிருக்கீங்க!"

"முதல்ல வெளியே போடா நாயே!" என்று கோதண்டராமன் கூச்சலிட்டார்.

செந்தில் சற்றும் அசையாமல் நின்றான். இமைக்காமல் அவரை முறைத்துப்பார்த்தான்.

"ஆக, உங்க குற்றத்தை நீங்க ஒப்புக்கலை! உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தைச் சொல்றேன்" என்றான் நிதானமாக. "நீங்க பொடி போடுவீங்கதானே?"

கோதண்டராமன் முகம் வெளிரியது.

"அந்த ஃபைல் இருந்த இடத்துல, மூக்குப் பொடி கறைல உங்க விரல் ரேகை பதிஞ்சிருக்கு! இப்ப என் அப்பா போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிளம்பிக்கிட்டிருப்பார்... போலீஸோட 'கவனிப்பு'ல நீங்க குற்றத்தை ஒப்புக்குவீங்கன்னு என் அப்பா சொன்னார்!"

"ஐயையோ! போலீஸா! ஒப்புக்கறேன் செந்தில்! வா! வா! உன் அப்பாவைத் தடுத்து நிறுத்திடலாம்!" என்று பதட்டமுடன் படபடத்தார்.


"அதுக்கு அவசியமில்லை! அப்பா..." என்று சத்தமாகச் செந்தில் அழைத்தான்.

வாசலில் மறைந்திருந்த தியாகராஜன் உள்ளே வந்தார். அவர் முகத்தில் பொறி பறந்தது. "சொல்லுடா! ஏன் இந்தத் துரோகத்தைச் செய்தே?" என்றார் உஷ்ணமாக.

"பாழும் பதவி ஆசை! அடுத்த மாசம் பதவி உயர்வு ஒண்ணு வருதுன்னு உனக்குத்தான் தெரியுமே. நம்ம ரெண்டு பேர்ல உனக்குத்தான் அந்த ப்ரமோஷன் சான்ஸ்னு எனக்குத் தெரியும். தடையாயிருக்கற உன்னைத் தூக்கிட்டா, எனக்குத்தான் அந்தப் பதவி..." என்ற கோதண்டராமன், உள்ளே சென்று அந்தச் சிவப்பு ஃபைலை எடுத்து வந்தார்.

ஃபைலை தியாகராஜனிடம் கொடுத்துவிட்டு, "என்னை மன்னிச்சிடு!" என்றார்.

"நான் மன்னிச்சாலும், கம்பெனி உன்னை மன்னிக்காது!"



"எனக்கு டாக்டர் செலவு மட்டும் மாசம் 100 ரூபாய் ஆகுது"

"டாக்டரின் செலவெல்லாம் நீங்க ஏன் ஏத்துக்கறீங்க?"

— எம். வினோத்

அன்றே அலுவலகத்தில் தியாகராஜன் திரும்பவும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்; உடனடியாகப் பதவி உயர்வும் பரிசாக அவருக்குக் கிடைத்தது. கோதண்டராமன் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

மறுநாள் பள்ளியில் செந்தில் மகிழ்ச்சியுடன் காணப்பட்டான்.

"எனக்கும் ரொம்ப சந்தோஷமா இருக்குடா!" என்றான் அழகன். செந்திலைப் பெருமிதத்துடன் பார்த்தான். "நீ கண்டுபிடிச்ச விதம் சூப்பர்! அப்புறம்... உன் அப்பா விஷயமா ஒரு நாள்கூட என்கிட்ட நீ சிபாரிசு பேசாததை நினைச்சா, எனக்குப் புல்லரிக்குதடா. கிரேட்! நீ ஒரு ஆதர்ச நண்பன்டா!"

அப்பாவின் 'நண்பர்' என்று சொல்லிக்கொண்ட கோதண்டராமன் ஞாபகம் செந்திலுக்கு வந்தது.

மாலை 6.50. அழகன் தன் ஸ்போர்ட்ஸ் சைக்கிளில் கிளம்பினான். இரவு ஏழு மணிக்கு ட்யூஷன் மாஸ்டரின் வீடு இரண்டு கி.மீ தூரத்தில், திருவள்ளுவர் தெருவில் இருந்தது.

அழகனுக்கு சைக்கிளில் செல்ல மிகவும் பிடிக்கும். பொழுது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. காற்று சில்லென்றிருந்தது. சல்லென்று சென்றது சைக்கிள். ஜாலியாக உணர்ந்தான் அழகன்.

திருவள்ளுவர் தெரு சந்தடியற்றிருந்தது. எரியாத விளக்குகளால் இருட்டாக இருந்தது. தெருவின் முனையில் ஒரு

பக்கவாட்டுச் சந்தில் கறுப்பு கார் ஒன்று காத்திருந்தது. காரின் நம்பர் பிளேட் மறைக்கப்பட்டிருந்தது. அதன் கண்ணாடிக் கதவு ஏற்றப்பட்டிருந்தது.

7.05 மணி. மெலிதாக விசில் அடித்தபடி அழகன் திருவள்ளுவர் தெருவில் நுழைந்தான்.

"ஹலோ" என்று குரல் கொடுத்தபடி ஒரு உருவம் அந்தச் சந்திலிருந்து வெளிப்பட்டது.

"என்ன?" என்று அழகன் சைக்கிளை நிறுத்தினான்.

"அகத்தியர் தெரு எங்கே இருக்கு தெரியுமா தம்பி?" என்றபடி அந்த உருவம் அழகனை நெருங்கியது. அடுத்தகணம் –

பதில் சொல்ல வாய் திறந்த அழகன் முகத்தில் ஒரு கர்ச்சீப் வைத்து அழுத்தப்பட்டது. மயங்கிச் சரிந்த அழகனை அந்த உருவம் தாங்கிப் பிடித்துக்கொண்டது. அடுத்த நிமிடம் சைக்கிளையும் மயக்கமான அழகனையும் அள்ளிப் போட்டுக் கொண்டு, அந்தக் கார் விரைந்து மறைந்தது!

இரவு 7.30 மணி. அழகனுக்காகக் காத்திருந்த ட்யூஷன் மாஸ்டர் பரந்தாமன் வெறுத்துப் போனார். இன்னும் எவ்வளவு நேரம் காத்திருப்பது? இனி வருவானா? பெரிய இடத்துப் பிள்ளைகளே இப்படித்தான் என்று நொந்துகொண்டார்.

இரவு 9.00 மணி. அழகன் வீடு. அழகனின் பெற்றோர் கவலை கொள்ளத் தொடங்கினர். ட்யூஷனிலிருந்து அழகன் ஏன் இன்னமும் திரும்பவில்லை...?

நேரம் 9.30. ட்யூஷன் மாஸ்டர் வீட்டுக்குச் சென்று விசாரித்தபோது, அழகன் அங்கே வரவில்லை என்ற தகவலில் அதிர்ந்து போனார் சுந்தரம், அழகனின் அப்பா.

நேரம் 10.00. தியாகராஜன் வீடு. "அழகன் இங்கே வரலையே அங்கிள்!" என்றான் செந்தில் கவலையுடன். விபரீதமாகத் தோன்றிய எண்ணங்களை அடக்கிக் கொண்டு "நானும்கூட வரட்டுமா அங்கிள்?" என்று செந்தில் கேட்டான்.


"வேணாம் செந்தில்!" என்று வறண்ட புன்னகையுடன் அவன் தோளில் தட்டிவிட்டுக் காரில் ஏறிப் புறப்பட்டார் சுந்தரம்.

இரவு 11.00. இன்னமும் அழகன் வீடு திரும்பவில்லை. நேரம் ஆக, ஆக சுந்தரத்துக்கு அடி வயிறு சில்லிட்டது. பயத்தின் அளவு அதிகரித்துக் கொண்டிருந்தது. போலீஸிடம் போய்ச் சொல்லி விடலாமா? அல்லது இன்னமும் காத்திருக்கலாமா? கலவரத்தில், டென்ஷனில் அவருக்குக் குழப்பமாக இருந்தது. அழகன் எங்கே போனான்? ஏன் வீடு திரும்பவில்லை? அல்லது... அல்லது... தன் ஒரே மகனை எவராவது கடத்தி இருப்பார்களா?


நடுநிசியானபோது, போன் அலறியது!

(தொடரும்)

குறுக்கெழுத்துப் புதிர் விடை!



1 ப	ங்	2 க	ண	3 தே	ஷ்	■	சி	பு 4
ம்	■	ண்	■	ர்	■	ணி	■	ய
ப	■	ட	■	த	■	5 ம	ண	ல்
ர	■	ம்	■	ல்	6 பா	■	■	■
ம்	7 ஆ	■	ரி	■	தி	■	8 வை	கை
■	■	■	9 பொ	ன்	■	ங்	■	தி
லி	ல்	10 அ	■	லி	■	கா	■	த்
ல்	■	ணை	■	ர்	■	ங்	■	ரு
11 ப	ணை	■	ல்	12 பெ	ம்	13 ஹா	ர	14 கி



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ராகுல், ஸ்வேதாவைப் போல் நீங்களும் கோகுலத்திற்குக் கதை, ஓவியம் அனுப்ப விரும்புகிறீர்களா? அப்படியென்றால் கோகுலத்திற்கு சந்தா செலுத்துங்கள்.... உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

ஸ்கிப்பிங் ஆடுவதால் பலன் உண்டா?

● **கவிமணி செந்தில், சூ.சூ.வாடி, ஓசூர்.**

? 'ஸ்கிப்பிங் கயிறு' ஆடுவதால் என்ன பலன், டாக்டர்?

! ஸ்கிப்பிங் கயிறு ஆடுதல் ஓர் ஏரோபிக் பயிற்சி. இந்தப் பயிற்சியின் போது கை, கால், மார்பு, வயிறு, தொடை போன்றவற்றின் தசைகள் இயங்குகின்றன. இதனால் அவை ரத்தத்திலிருந்து அதிக அளவு பிராணவாயுவைப் பெற்றுக் கொண்டு அங்கு சேர்ந்துள்ள கழிவுகளை உடனுக்குடன் வெளியேற்றி விடுகின்றன. அங்குள்ள உறுப்புகள் சுத்தமடைகின்றன. சுறுசுறுப்படைகின்றன. வலுப் பெறுகின்றன. இப் பயிற்சியைத் தொடர்ந்து செய்யும்போது, இதயத்திற்கு ரத்தம் செல்வது அதிகரிக்கிறது. இதயத்திலிருந்து மூளை, சுவாசப் பை, கல்லீரல், சிறுநீரகம், செரிமான மண்டலம் ஆகிய முக்கிய உறுப்புகளுக்கும் ரத்தம் செல்வது அதிகரிக்கிறது. ஆகையால், நாள் முழுவதும் உற்சாகமாக உழைப்பதற்கு உடல் தயாராகி விடுகிறது. மேலும் உடற் தகுதியைப் பெருக்கவும் உடல் எடையைக் குறைக்கவும் இப்பயிற்சி உதவுகிறது.



● **எஸ்.நாகராஜன், மேலப்பாடி.**

? கண் அறுவைச் சிகிச்சையின்போது கண்ணில் லென்ஸை வைப்பதாகக் கூறுகிறார்கள். அப்படியென்றால் என்ன டாக்டர்?

! நம் விழிக்கோளத்தின் உள்ளே விழிலென்ஸ் உள்ளது. இது பார்ப்பதற்கு ஒரு பல்லி முட்டை அளவில் பளிங்கு போலத் தெளிவாக இருக்கும். இதன் வழியாக ஒளிக்கதிர்கள் ஊடுருவிச் சென்று விழித்திரையில் பிம்பமாக விழும்போது மூளை அதைக் காட்சியாக மாற்றுகிறது. இப்படித்தான் நமக்குப் பார்வை கிட்டுகிறது. வயது ஆக ஆக நம் தலைமுடி நரைப்பதைப்போல விழிலென்ஸும் மூப்படைகிறது. அதன் விளைவாக அது கடினமடைந்து ஒளியைத் தடுக்கும் பொருளாக மாறிவிடுகிறது. அப்போது ஒளிக்கதிர்கள் விழிலென்ஸை ஊடுருவிச் செல்ல சிரமப்படுகின்றன. இதனால் பார்வை மங்குகிறது. இதற்குக் கண்புரை நோய் என்று பெயர். இந்தக் குறைபாட்டைக் குணமாக்க மூப்படைந்த விழிலென்ஸை சிறு அறுவைச் சிகிச்சை மூலம் எடுத்துவிட்டு, அந்த இடத்தில் செயற்கை லென்ஸைப் பொருத்தி விடுவார்கள் கண் மருத்துவர்கள். இயற்கை லென்ஸ் செய்யத் தவறிய பணியை இப்போது செயற்கை லென்ஸ் செய்கிறது. இதன் பலனாக மீண்டும் பார்வை நன்றாகத் தெரியும்.

கேட்கட்டுமா டாக்டர்?



● **பெ. பாண்டியராசன், மாங்கொம்பு.**

? வயிற்றுக்கு மேலே நெஞ்சுப் பகுதியில்

? தினமும் சாப்பிட்டு ஒரு மணி நேரம் கழித்து எரிவதைப் போன்று உணர்வு ஏற்படுகிறது. இது எதனால்? இதைத் தவிர்க்க என்ன வழி?

! இரைப்பையை ஒட்டியுள்ள சவ்வில் உண்டாகும் அழற்சி அல்லது புண் காரணமாக இவ்வாறு ஏற்படலாம். இரைப்பையில் அமிலச்சுரப்பு மிகுதியாவதுதான் இதற்கு அடிப்படைக் காரணம். நேரந்தவறி உணவை உட்கொள்வது, அதிகமாகக் காரம் சாப்பிடுவது, மசாலா நிறைந்த உணவுகளை அடிக்கடி உண்பது, எண்ணெயில் வறுக்கப்பட்ட உணவுகளை மிகுதியாக உபயோகிப்பது, அதிகப்படியாக காபி குடிப்பது, பாட்டிலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களைக் குடிப்பது, புகை பிடிப்பது, அடிக்கடி வலி நிவாரணி மாத்திரைகளைச் சாப்பிடுவது, எச். பைலோரி எனும் கிருமி இரைப்பையைப் பாதிப்பது, பரபரப்பு, மனக்கவலை, மன அழுத்தம் ஆகியவை அமிலச் சுரப்பை அதிகப்படுத்தி நெஞ்செரிச்சலை உண்டாக்க வல்லவை. மருத்துவரின் ஆலோசனைப்படி தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.


டாக்டர்
கு. கணேசன்



இ.சே. அறிவழகன், திருப்புலிவனம்.

? இ.சி.ஜி. என்பது என்ன? இது எதற்குப் பயன்படுகிறது?

! இ.சி.ஜி. (E.C.G.) என்ற எழுத்துகள் 'Electro Cardio Graphy' எனும் சொற்றொடரின் முதல் எழுத்துச் சேர்க்கை. தமிழில் இதனை 'இதய மின்னலை வரை படம்' என்று அழைப்பர். 'இதய மின்னலை வரைவி' என்னும் கருவி மூலம் இதயம் துடிக்கும்போது ஏற்படும் மிக நுண்ணிய மின்சார மாறுதல்களைப் பல நூறு மடங்கு பெரிதாக்கி, அதை ஒரு வரைபடமாகத் தனித்தாளில் பதிவு செய்யப்படுகிறது. 1906ல் ஹாலந்து அறிவியலாளர் வில்லியம் எயின்தோவன் இக்கருவியைக் கண்டுபிடித்தார். தற்போது பயன்பட்டு வருகின்ற இதய மின்னலை வரைவிக் கருவிகள் இதய மின் மாறுதல்களை 3000 மடங்கு பெரிதாக்கிக் காட்டும் வல்லமை படைத்தவை.



பரிசோதனைக்கு உட்படும் நபரின் கைகள், கால்கள் மற்றும் மார்பின் மேல் ஆறு இடங்களில் மின் முனைகளை இணைத்து இதயத்தின் மின்னலை மாற்றங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இது ஒரு வரை கோட்டுப்படமாக எடுக்கப்படுகிறது. உடல் நலமிக்க ஒருவரின் இதயத்தில் இப்படம் எடுக்கப்படும்போது ஒரு முறையான வரை கோட்டுப்படம் கிடைக்கின்றது. இது இயல்பான இதய மின்னலை வரை படம் எனப்படுகிறது. இதய நோயுள்ளவரின் வரை கோட்டுப்படத்தில் அவருக்குள்ள பாதிப்புக்கு ஏற்ப மாறுதல்கள் காணப்படும். அவற்றைப் பார்த்து நோயைக் கணிப்பார், மருத்துவர்.

இதய மின்னலை வரை படத்தின் உதவியால் இதயத் துடிப்பின் எண்ணிக்கை, இதயத் துடிப்பின் லயம், ஒழுங்கு, நெஞ்சுவலி, மாரடைப்பு, இதயச் செயலிழப்பு, இதயவீக்கம், இதய அறைகளின் வீக்கம், இரத்த அயனிகளின் நிலை போன்றவற்றைத் தெரிந்து கொள்ள முடியும்.

கல்யாணம் செய்து வைத்த கண்ணன்!



புராதனகடம் என்ற சிற்றூரில் வாழ்ந்த பலராம் மேத்தாவுக்கு நெடுங்காலமாய் குழந்தை பிறக்கவில்லை. தினமும் பிரகலாத சரித்திரம் படித்து பானகம் நிவேதிப்பார். "பிரகலாதனுக்காகத் தூணில் தோன்றியவரே! பிரகலாதனின் தண்டனைகளை நீக்கியவரே, கருணை காட்டும்" என்று தீபாராதனையின்போது பிரார்த்திப்பார்.

அவருடைய குறை நீங்க வந்து பிறந்த குழந்தைக்கு நரசிம்மன் என்றே பெயர் சூட்டினர். பெற்றோரின் செல்லத்தினால் பையன் துஷ்டனாக வளர்ந்தான். படிக்காமல் ஊர் சுற்றினான். கோலி ஆடுவதும், கிட்டிப்புள் அடிப்பதும், ஊரார் தோட்டத்தைச் சூறையாடுவதும், குளத்து நீரை வாரி இறைப்பதுமாக ஒரே அட்டகாசம்தான்!

பெற்றவர் காலமானதும் சிற்றப்பா யமுனா தாஸ் இல்லத்தில் தங்கினான். யமுனா தாஸின் பிள்ளை, நரசிம்மனை விடப் பெரியவன். அவனுக்குத் திருமணமாகி இருந்தது. தினம் ஒரு சண்டை கொண்டு வரும் மைத்துனனை மன்னி கண்டித்தாள்.

"உன்னால் குடும்ப கௌரவம் பாழாகிறது. அக்கறையாய் படிக்காவிட்டால் சோறு கிடையாது" என்று மிரட்டினாள்.

கோபம் கொண்ட நரசிம்மன் வீட்டை விட்டு வெளியேறினான். கால் போனபடி நடந்தான். பசி வயிற்றைச் சுருட்டியது. கண்ணில் தென்பட்டது ஒரு தடாகம். படிகளில் இறங்கி பசி அடங்கு மட்டும் நீரை அள்ளி அள்ளிப் பருகினான்.

ஆர். பொன்னம்மாள்

சற்று தூரத்தில் தெரிந்த கோவிலை அடைந்தான். அந்தச் சிவன் கோவில் நிறைய சிதைந்திருந்தது. ஒரு சிறு அகல் விளக்கு கர்ப்பக்கிரகத்தில் எரிந்தது. வில்வம் சிதறிக் கிடந்ததிலிருந்து பூஜை நடந்திருக்கிறதென்று புரிந்து கொண்டான்.

'சிற்றன்னையால் உதாசீனப்படுத்தப்பட்ட துருவனால் தவம் செய்ய முடியுமென்றால் நம்மால் ஏன் முடியாது' என்று நினைத்தவன், சன்னதி முன் கண் மூடி அமர்ந்து, "ஓம், நமச்சிவாய" என்று ஜபிக்கத் தொடங்கினான்.

தன்னுடைய பொல்லாத்தனங்களை எண்ணி வெட்கினான் நரசிம்மன். பசி, தூக்கம் வெறுத்துத் தவம் செய்தான்.



பத்தாவது நாள் யாரோ அவனை உசுப்புவது போலிருக்கவே கண் விழித்தான். ஜடாமுடியுடன் முனிவரைப் போன்ற ஒரு முதியவர், 'என் பின்னால் வா' என்று சைகை செய்தார். பின்தொடர்ந்தான். பத்து நாட்கள் ஆடாது அசையாது இருந்ததால் கால்கள் மரத்துப் போயிருந்தன. தள்ளாடி நடந்தான்.

இனிய புல்லாங்குழல் இசை மனதை ஈர்த்தது. நறுமணம் வீசும் சோலையில் கண்ணன் புல்லாங்குழல் இசைக்க கோபியர்கள் சுழன்று சுழன்று ஆடிக் கொண்டிருந்தனர்.

பிரமித்து நின்ற நரசிம்மனின் வாயில் தன் கழுத்திலிருந்த துளசி மாலையிலிருந்து இரண்டு துளசி இதழ்களைப் பிய்த்துப் போட்டு, "நீ கண்ட காட்சியைப் பாடு" என்று மறைந்து போனார் கிருஷ்ணர்.

"உன் கவிதைகள் சூரிய, சந்திரர் உள்ள வரை நிலைத்து நிற்கும்" என்று ஆசி கூறி முதியவரும் மறைந்து விட்டார்.

மீண்டும் சிவாலயம் வந்தான் நரசிம்மன். மீண்டும் சிவ தியானத்தில் ஆழ்ந்தான்.

வீட்டுக்கு வந்த யமுனாதாஸ் நரசிம்மனைப் பற்றி மருமகளிடம் கேட்டார். தான் கண்டித்ததைக் கூறினாள் மருமகள். நரசிம்மனை ஊர் முழுவதும் தேடினர்.

பதினைந்து நாட்கள் கழிந்ததும் மாடு மேய்க்கும் சிறுவனால் நரசிம்மன் இருக்குமிடம் தெரிந்தது. யமுனாதாஸும் அவர் பிள்ளையும் அங்கு விரைந்தனர். எலும்பும் தோலுமாயிருந்த நரசிம்மனைக் கண்டு உருகினர். கண்ணனைப் பற்றி அவன் பாடிய பாட்டு அவர்களைப் பிரமிக்க வைத்தது. 'சரியாகப் படிக்காத அவன் கவிதை இயற்றுவது தெய்வத்தின் அருள்' என்று வியந்தனர்.

அவனைச் சமாதானப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வந்தனர். உரிய நேரத்தில் அவனுக்குத் திருமணமும் செய்து வைத்தனர். ஒரு பிள்ளையும் பெண்ணும் பிறந்தனர். கண்ணன் மீது பாடல்களை இயற்றி பஜனை செய்து கொண்டிருந்தார் நரசிம்ம மேத்தா.

புராதன கடத்துக்கு அருகில் சியாமளா என்ற ஒரு சிற்றூர். அங்கே திரிபுராந்தகர் என்ற செல்வந்தருக்கு அழகும், குணமும் நிரம்பிய ஒரு மகள் இருந்

தான்.

தினமும் நரசிம்ம மேத்தாவின் பஜனைக்கு வரும் கிருஷ்ண பட்டர் என்ற அந்தணர், திரிபுராந்தகரின் புதல்வியை மேத்தாவின் மகனுக்கு மணமுடிக்க ஆசைப்பட்டார்.

மேத்தா பரம ஏழை. திரிபுராந்தகர் கோடீஸ்வரர். கிருஷ்ண பட்டருக்கோ ஊரில் மிக நல்ல பெயர் உண்டு. "திரிபுரா! உன் பெண் சுகமாக வாழ நினைத்தால் மேத்தாவின் மகனுக்கே கொடு. நற்குணங்களின் பிறப்பிடம் அவன். அவனைப் புருஷனாக அடைய உன் பெண் முந்தைய பதினான்கு ஜென்மங்களில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்'' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்.

திரிபுராந்தகர் கொஞ்ச நாள் அப் பேச்சைப் புறக்கணித்தாலும் ஒரு தடவை, "என் குடும்பத்துக்கென்று ஒரு கௌரவம் இல்லையா? அந்தஸ்துக்கு ஏற்ற மாதிரி சீர் செய்தால் நான் ஏன் மறுக்கிறேன்?'' என் றார்.

நறுமணம் வீசும் சோலையில் கண்ணன் புல்லாங்குழல் இசைக்க கோபியர்கள் சுழன்று சுழன்று ஆடிக் கொண்டிருந்தனர்.

உடனே புராதன கடத்திற்குச் சென்றார் கிருஷ்ணபட்டர். "மேத்தா! உன் பிள்ளைக்கு திரிபுராந்தகர் பெண்ணைப் பேசி முடிக்கலாமா?" என்று கேட்டார்.

மேத்தாவிற்கு ஒரே திகைப்பு.

"குபேரனுக்கும், குசேலனுக்கும் சம்பந்தமா? மலைக்கும் மடுவுக்கும் ஒத்து வருவதாவது!" என்று ஆட்சேபித்தார்.

"திரிபுராந்தகரே சம்மதிக்கும் போது நீ ஏன் தயங்குகிறாய்? நீ குணத்தில் மலை! குசேலனும் கூட கண்ணன் கருணையால் குபேரனானான்'' என்று கிருஷ்ணபட்டர் வற்புறுத்த, "எல்லாம் இறைவன் அருள். பெண்ணைப் பெற்றவர் சம்மதித்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை" என்றார் நரசிம்ம மேத்தா.

கிருஷ்ண பட்டர் நேராக திரிபுராந்தகரிடம் சென்று, "உங்கள் கௌரவத்துக்கு ஏற்ற சீர்வரிசைகளுடன் மேத்தா வருவார். திருமண ஏற்பாடுகளைச் செய்யுங்கள்'' என்றார்.

திரிபுராந்தகர் கிருஷ்ண பட்டர் கலாட்டா செய்வதாக நினைத்து பேசாமலிருந்து விட்டார் எந்த ஏற்பாடுகளும் செய்யவில்லை!



திருமண நாளைக் குறித்த கிருஷ்ண பட்டர் மேத்தாவை உற்றார் உறவினரோடு வரும்படி தகவல் அனுப்பினார். மேத்தா புறப்பட்டு விட்டதாகப் பதில் செய்தியும் வந்து விட்டது.

பஜனை செய்த

பட்டும், பொன், வைர நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், வாழைக் குலைகளுமாக சீர்வரிசைகள் வந்து கொண்டே இருந்தது கண்டு ஊரார் பிரமித்தனர்.

படி சியாமளா நகருக்குப் புறப்பட்டார் நரசிம்ம மேத்தா.

பக்தன் அவமானப்பட பகவான் பார்த்துக் கொண்டிருப்பாரா? கிருஷ்ணர் – ருக்மிணி, சிவன் – பார்வதி, பிரம்மா – சரஸ்வதி, இந்திரன் – இந்திராணி இப்படி தேவர்களெல்லாம் ஜோடி ஜோடியாக வர்த்தக குடும்பங்களாக மாறி தட்டுத் தட்டாய் சீர் சுமந்து கொண்டு மேத்தாவின் பஜனை கோஷ்டிக்கு முன்னால் நடந்தனர். சியாமளா



நகருக்கு முன்னால் இந்த கோஷ்டிகள் கலந்து கொண்டன.

கிருஷ்ணர், 'நான் மேத்தா வீட்டு காரியஸ்தன்' என்று சொல்லிக் கொண்டு எல்லோரையும் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார். 'உன் பெயர் என்னப்பா?' என்று கிருஷ்ணபட்டர் கேட்க, "பெற்றவர்கள் வைத்த பெயர் சியாமளநாதன். கூப்பிடுவது நந்தகிஷோர்" என்று கூறியபடி முன் பக்கம் ஓடினார்.

முன்னால் வந்த நந்தகிஷோர், "திரிபுராந்தகரே! சீர் கொண்டு வரும் சம்பந்திக்கு ஆரத்தி தயாரா? என்ன இது... காவி பூசி கோலம் போட்டு ஒன்றுமே செய்யவில்லை! ஒரு தாம்பாளத்தில் தாம்பூலம், பழம், சந்தனம், குங்குமம், மஞ்சள், பன்னீர் எல்லாம் எடுத்து வையுங்கள். ஐந்து மட்டைத் தேங்காய் வைப்பது வழக்கம்தானே! சாஸ்திரத்துக்காவது இரண்டு முழம் புஷ்பம் வைக்க வேண்டும். நாங்கள் நாலு பந்து மல்லி, இரண்டு பந்து வெட்டிவேர் சதம்பம், என்று நிறைய்க் கொண்டு வந்திருக்கிறோம். நான் மேத்தாவின் பண்டரிபுரக் கடை காரியஸ்தன். என்னைக் கிஷோர் என்று கூப்பிடலாம். எது குறைந்தாலும் நானே பொறுப்பு" என்று மளமளவென்று பேசவும் திரிபுராந்தகர் வெலவெலத்தார். நாக்குழறியது. மனம் படபடத்தது. ஆனாலும் சமாளித்தபடி வேலைக்காரர்களை அழைத்து மளமளவென்று உத்தரவிட்டார்.

'இப்படிக் கொடுங்கள்' என்று அரிசி மாவை வாங்கி தானே அழகாகக் கோலமிட்டார் கிஷோர். பட்டும், பொன், வைர நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், வாழைக் குலைகளுமாக சீர்வரிசைகள் வந்து கொண்டே இருந்தது கண்டு ஊரார் பிரமித்தனர்.

மறுநாள் திரிபுராந்தகர் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் தன் மகளைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

அடுத்த நாள் பெண்ணை அழைத்துக் கொண்டு ஊர் திரும்பும் போது எந்த இடத்தில் தேவர் கூட்டம் சேர்ந்து கொண்டதோ அதே இடத்தில் மறைந்தது.

திரிபுராந்தகரும், மேத்தாவும், கிருஷ்ண பட்டரும் ஸ்ரீ கிருஷ்ணர் காட்டிய அன்பை எண்ணி உருகினர். 'வைஷ்ணவ ஜனதோ' என்ற மேத்தாவின் பாடலை அனைவரும் பாடியபடியே வழி நடந்தனர்.

மூக்கு, கண்களை மூடிக் கொண்டு சுவையறிய முடியுமா?

செய்து பார்!

உங்கள் நண்பர்களிடம் யார் சுவையை நன்கு உணர்வார்கள் என்று கேளுங்கள். நான், நீ எனப் போட்டி போடுவார்கள். அவர்களில் ஒருவரின் கண்களைத் துணியால் கட்டி விடுங்கள். பிறகு 2, 3 டம்ளர்களில் எலுமிச்சை ஜூஸ், ஆரஞ்சு ஜூஸ், தக்காளி ஜூஸ் என வெவ்வேறு விதமான ஜூஸ்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

கண்களைக் கட்டியிருக்கும் நண்பரிடம் மூக்கையும் மூடிக் கொண்டு ஒவ்வொரு ஜூஸையும் பருகச் சொல்லுங்கள். ஒவ்வொன்றையும் சுவைத்தவுடன் "இது என்ன ஜூஸ்" என்று கேளுங்கள்.


நண்பர் குழப்பமடைவார். அவரால் சரியாகச் சொல்ல முடியாது. பிறகு கண்களையும் மூக்கையும் திறந்து கொண்டு பருகச் சொல்லுங்கள். இப்போது சரியாகச் சொல்லிவிடுவார்.

இது எப்படி?

சுவையறிதலில் நாக்கு மட்டுமன்றி கண்களும் மூக்கும்கூட முக்கிய பங்கு வகிக்கின்றன. கண்களால் நிறத்தைப் பார்த்து, மூக்கால் வாசனை அறிந்து சுவைக்கும்போதுதான் நம்மால் சரியாகச் சுவையை அறிய முடியும்.



கோகுலம் க்விஸ்




1. கார்ட்டூன் காரெக்டர்களை உருவாக்கியவர் ______________.
2. புயலை முன்கூட்டியே அறியப் பயன்படும் கருவி ______________.
3. உலகிலேயே மிகச் சிறிய கண்டம் ______________.
4. முதல் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடந்த நாடு ______________.
5. சட்லெஜ் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை ______________.
6. கங்கை நதி உற்பத்தியாகும் இடம் ______________.
7. உலகில் அதிகமான நாடுகளைக் கொண்ட கண்டம் ______________.
8. புளித்த பாலில் உள்ள அமிலம் ______________.
9. தமிழ்நாட்டில் வேளாண் பல்கலைக் கழகம் உள்ள இடம் ______________.
10. துரியோதனின் தந்தை ______________.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்து கேள்விகளுக்கும் சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். முகவரிக் கூப்பனை ஒட்டி, விடைகளை எழுதி, உங்கள் முழு முகவரியையும் குறிப்பிட்டு அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். கடைசி தேதி 31.1.2001.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.





✉ தென்கச்சி கோ. சுவாமிநாதன் தமது ஆரம்பப் பள்ளி ஆசிரியரை நினைவு கூர்ந்து சொல்லியிருப்பது பாராட்டுதலுக்குரியது. 'ஆடு யாருக்குச் சொந்தம்?' கதை, மிருக வதைத் தடுப்பு குறித்து விழிப்படைய வைத்தது. நீதிமன்றத்தில் குற்றத்திற்குத் தண்டனை வழங்கிய நீதிபதி வெளியே மனிதாபிமானத்துடன் சித்தரிக்கப்பட்டிருப்பது வெகு அருமை.

– கோ. ராமதாஸ்,
வி. ராஜபுரம், தஞ்சை மாவட்டம்.

✉ சந்திரனில் ஒரு காலத்தில் காற்று இருந்து சிறிது சிறிதாக
வான் வெளியில்

பௌர்ணமி போல் ஜொலித்தது!

கரைந்து
முழுவதும் வெளியேறி விட்டதைப் படித்தபோது நான் ரொம்பவே ஆச்சரியப்பட்டேன்.

– வி. ராஜேஸ்வரி,
மன்னார்குடி.

✉ மான்களைப் பற்றிய கட்டுரை கண் கவர் படங்களுடனும் கருத்தைக் கவரும் செய்திகளுடனும் அழகாக இருந்தது. எங்கள் ஊர் பெரிய பண்ணையார் வீட்டில் கொம்புகளுடன் கூடிய மான் தலைகளைப் பார்த்திருக்கிறேன். அது மருந்திற்காக வைக்கப்பட்டிருப்பதாகக் கூறுவார்கள். ஆனால் கோகுலத்தைப் படித்த பிறகு தான் மருத்துவக்குணம் இல்லை என்பது தெரிய வந்தது. நன்றி.

– ஆர். பட்டம்மாள், ஆடுதுறை,
தஞ்சை மாவட்டம்.

✉ புதுப் பொலிவு, புதிய அம்சங்களுடன் வெளிவரும் கோகுலத்தை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

– எஸ். நர்மதா, எஸ். நரேன்,
திருச்சி.

✉ நிலாவைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து அளித்த விதம் நன்றாக இருந்தது. வானியல் பற்றிய கட்டுரைகள் எப்பொழுதும் என்னை சுவாரசியப்படுத்துகின்றன. பௌர்ணமி நிலவு போல் கட்டுரையும் ஜொலித்தது.

– தி.கு. கார்த்திகேயன்,
திருச்செங்கோடு.

✉ டிசம்பர் இதழில் வெளியான கோகுலம் நியூஸ் அனைத்தும் அறிய வேண்டிய விஷயங்கள். 'பிறந்த நாள் பரிசு' என்ற படக்கதையை எழுதிய எம். ஹரிணிக்கும், வரைந்த மகேஷுக்கும் பாராட்டுகள். பரிசு முக்கியம் அல்ல; அன்புதான் முக்கி

யம் என்பதை இக் கதை உணர்த்தியது.

– ர. விஸ்வநாதன், புதுவை.

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு

திருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பியும் வையுங்கள்.

இந்த மாதப் போட்டி:

விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண் யார்?

இந்த மாதம் துவங்கி இன்னும் இரண்டு மாதங்களுக்கு மேற்கண்ட மாவட்டங்களுக்கான போட்டி தொடரும். மற்ற மாவட்டங்களுக்கும் இந்த வாய்ப்பு வரும். காத்திருங்கள். பரிசை வெல்லுங்கள்!

முதல் தபால் தலை

உலகின் முதல் தபால் தலை 1840 ஆம் ஆண்டு மே 6-ந் தேதி வெளியிடப்பட்டது. 160 ஆண்டு கால சிறப்பு வாய்ந்த இந்த பென்னி பிளாக் தபால் தலை இதுவரை ஸ்டேன்லி கிப்பன்ஸ் நிறுவனத்திடம் இருந்தது. அதை இப்போது லண்டனில் உள்ள ராயல் தபால் தலை சேகரிப்பு மையம் வாங்கி, செயின்ட் ஜேம்ஸ் அரண்மனையில் பாதுகாக்க உள்ளது.

பாதுகாப்பான குடிநீர் இல்லை

வளரும் நாடுகளில் சுமார் 120 கோடி பேருக்குப் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை என்று ஐ.நா. அறிக்கை தெரிவித்துள்ளது. 60 கோடி பேருக்கு அடிப்படை சுகா



தார வசதி இல்லை என்றும் தெரிவித்துள்ளது. பாதுகாப்பான குடிநீர் மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் கிடைக்காததால் காலரா, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட வியாதிகள் ஏற்படுகின்றன. இதனால் வளரும் நாடுகளில் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான பேர் உயிரிழக்கின்றனர். வயிற்றுப்போக்கால் அதிகளவு உயிரிழப்பு ஏற்படுகிறது. ஆண்டுக்கு 20 லட்சம் பேர் பலியாகின்றனர் என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

கிறிஸ்துமஸ் மரம்

1700 ஊசியிலை மரக்கிளைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது ஒரு கிறிஸ்துமஸ் மரம். இதில் 13,000 வண்ண விளக்குகள் ஒளிர்கின்றன. ஜெர்மனியின் டோர்ட்முன்ட் நகரில் பொது இடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இந்த மரம்தான் மிகப் பெரிய கிறிஸ்துமஸ் மரமாம்!

பொன் விழா!

உலகின் மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தை எட்டி ஐம்பது ஆண்டு நெருங்குவதை ஒட்டி அதைக் கொண்டாடும் வகையில் ஒரு வருட நிகழ்ச்சிகளுக்கு நேபாளம் ஏற்பாடு செய்து வருகிறது. 1953 ஆம் ஆண்டு எட்மண்ட் ஹில்லாரியும் (நியூசிலாந்து) டென்சிங்கும் (நேபாளம்) முதன் முதலாக எவரெஸ்ட்டை அடைந்து சாதனை படைத்தனர். திபெத், நேபாளம் வழியாக இதுவரை 34 நாடுகளிலிருந்து 1,172 பேர் ஏறிச் சாதனை படைத்துள்ளனர்.


நீண்ட குகைச் சாலை!

சுவிட்சர்லாந்து நாட்டின் கோதார்டு சுரங்கச் சாலைதான் இதுவரை உலகிலேயே நீளமானதாக இருந்தது. இதன் நீளம் 16.9 கி.மீ. ஆனால் தற்போது நார்வே நாடு அந்தப் பெருமையைத் தட்டிச் சென்று விட்டது. அந்நாட்டின் மேற்குப் பகுதியில் போடப்பட்டுள்ள குகைச் சாலைதான் தற்போது உலகிலேயே மிகப் பெரியது. இது 10 மீட்டர் அகலம், 24.5 கி.மீ. நீளம் கொண்டது.

கோகுலம் நியூஸ்

ஆபத்து

2030 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21ந் தேதி பூமியை அஸ்டிராய்டு எனப்படும் குறுங்கோள் ஒன்று தாக்க இருக்கிறது என்று இன்டர்நேஷனல் அஸ்ட்ரானமிகல் யூனியன் (ஐஏயு) தெரிவித்துள்ளது. இது தாக்கினால் ஹிரோஷிமாவில் அணுகுண்டு விளைவித்த சேதத்தைப்



போல் நூறு மடங்கு சேதம் ஏற்படுமாம். பூமியில் விழக்கூடிய வாய்ப்பு ஐநூறில் ஒரு பங்குதான் இருக்கிறது என்றாலும் அதிலிருந்து பூமியை எப்படி பாதுகாப்பது என்று வானியல் ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

நம்பிக்கை அளிக்கும் புதியவர்கள்!



* டெண்டுல்கர்

ஷார்ஜா கிரிக்கெட் இறுதிப் போட்டியில் மோசமான தோல்வியைச் சந்தித்தது இந்தியா. அதன்பிறகு இந்தியா - ஜிம்பாப்வே அணிகள் 2 டெஸ்ட் மற்றும் 5 ஒரு தினப் போட்டிகளில் இந்தியாவில் விளையாடி வருகின்றன. இதில் முதல் டெஸ்ட்டில் இந்தியா ஜெயித்தது. இரண்டாவது டெஸ்ட் டிராவில் முடிந்தது.

நாக்பூரில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் 24வது சதத்தை எடுத்தார். இந்தப் போட்டியில் 201 ரன்களைக் குவித்த டெண்டுல்கருக்கு இது இரண்டாவது தடவையாக அடித்த இரட்டைச் சதம். ராகுல் திராவிட்டும் ஜிம்பாப்வேக்கு எதிரான டெஸ்டில் முதல் முறையாக இரட்டைச் சதம் அடித்திருக்கிறார்.

டெஸ்ட் போட்டிகளின் வெற்றியில் இந்திய அணி உற்சாகம் அடைந்திருப்பது தெரிகிறது. அதைத் தொடர்ந்து நடந்த இரண்டு ஒரு தினப் போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்றுவிட்டது.



* ஹேமங் பதானி

ஒரிசாவில் நடந்த இரண்டாவது ஒரு தினப் போட்டியில் ஜிம்பாப்வே அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 253 ரன்களைக் குவித்தது. அந்த அணியின் கார்லிஸ்லி 91 ரன்களும் கேம்பல் 68 ரன்களும் எடுத்து அணியை வலுவான நிலையில் வைத்திருந்தனர்.

பின்னர் ஆடத் துவங்கிய இந்திய அணி முதலில் விறுவிறுப்பாக ரன்களைக் குவித்தாலும் டெண்டுல்கர், கங்குலியின் விக்கெட் விழுந்ததை அடுத்து வரிசையாக விக்கெட்டுகள் சரிந்தன. அப்போது தமிழகத்தைச் சேர்ந்த ஹேமங் பதானி மைதானத்துக்குள் நுழைந்தார். பொறுப்பை

உணர்ந்து நிதான மாக ஆடினார். அவருடன் ஜோடி சேர்ந்து விஜய் தஹியாவும் அகர்கரும் ரன்களைக் குவிக்க உதவினர். இறுதியில் பதானி 58 ரன்களைக் குவிக்க, இந்தியா 255 ரன்களை எடுத்து போட்டியை வென்றது.



* ஸ்டீவ் வாஹ்

இந்தியாவை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்ற ஹேமங் பதானி ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

ஜோத்பூரில் நடந்த 3வது ஒரு தினப் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்ய முடிவெடுத்தது. டெண்டுல்கர் வழக்கம்போல் சிறப்பாக ஆடி 146 ரன்களைக் குவித்தார். இது அவருக்கு

விளையாட்டு அரங்கம்!

27வது சதம். இந்தியா 238 ரன்களை எடுத்தபோது பௌலர் ஜாகிர்கான் களமிறங்கினார். 11 பந்துகளைச் சந்தித்து 32 ரன்களைக் குவித்தார். இதில் தொடர்ந்து அடித்த 4 சிக்ஸர்களும் அடங்கும். இந்தியா கடைசி 3 ஓவரில் மட்டும் 45 ரன்களை எடுத்து 283 ரன்களாக உயர்த்திக் கொண்டது.

பின்னர் களமிறங்கிய ஜிம்பாப்வே அணி சிறப்பாக ஆடி வெற்றி பெற்றது.

சமீப காலங்களில் இந்திய அணியில் புதிதாக இடம் பெற்றுள்ள யுவராஜ் சிங், ஹேமங் பதானி, ஜாகிர் கான் போன்ற இளைஞர்கள் நம்பிக்கை தரும் விதத்தில் ஆடி வருகின்றனர். நான்காவது ஒரு தினப் போட்டியில் இந்தியா வென்று தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியும், மேற்கு இந்தியத் தீவுகள் அணியும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடின. விளையாடிய 2 டெஸ்ட் போட்டி களிலும் ஆஸ்திரேலிய அணி வென்று தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. ஸ்டீவ் வாஹ் தலைமையிலான உலக சாம்பியன் அணி, தொடர்ந்து விளை யாடிய 12 டெஸ்ட் போட்டிகளிலும் வென்று உலக சாதனை படைத்திருக்கிறது.

ஓவியப்போட்டி

ரோஜா பூ நேருவுக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே பிடிக்கும்தானே! இந்த அழகு ரோஜாதான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. வண்ணத்தில் ரோஜாக்களை வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதுங்கள். கடைசி தேதி 20.1.2001.



காணாமல் போன

பூங்குன்றன், அமுதன், இளங்கோ, கண்ணன், முருகன் ஆகியோர் அய்யனார் கோவில் மலை நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்கள். மலையடிவாரம் வந்ததும் இறங்கி சைக்கிள்களை மரங்களில் சாய்த்து விட்டு நடந்தனர்.

ஆள் அர்வமே இல்லை.

கோவிலும் பூட்டியிருக்கிறது. பூசாரி கூட இல்லை. ஆதிவாசிகள் வாழும் குடிசைப் பகுதிக்குச் சென்றால் எந்தக் குடிசையிலும் ஆள் இல்லை.

"என்னப்பா இது அதிசயமா இருக்கு, யாரையும் காணோமே? எங்கதான் போயிருப்பாங்க? கோவில்ல கூட ஒருவரையும் காணோமே" என்றான் பூங்குன்றன்.

"இப்ப என்ன செய்யறது?" – அமுதன்.

''திரும்பிடலாமா?" என்றான் இளங்கோ.


''அடிவார வனமே மயான அமைதியாயிருக்கே" அவர்கள் பேசிக் கொண்டே சைக்கிள்கள் பக்கம் வந்தனர்.

இவர்களைப் பார்த்ததும் கிழக்கேயிருந்து ஆதிவாசிச் சிறுவன் நீலன் வந்தான். அவனைப் பார்த்ததும்தான் இவர்களுக்கு உயிர் வந்தது.

''என்னப்பா நீலா எங்கேயும் ஆளுகளைக் காணோமே?"



புலிக்குட்டி!



என்று கேட்டான் கண்ணன்.

"ஆமா சாமி, நீங்க கூட இங்க நிற்க வேண்டாம். உடனே புறப்படுங்க."

"என்னப்பா பயமுறுத்தறே என்ன நடந்தது?" என்று பதறினான் பூங்குன்றன்.

"சாமி, வனத்துக்குள்ளே ஒரு புலிக் குட்டியைக் காணோம். தாய்ப்புலி ரொம்பவும் பயங்கரமா கத்துது, ஆர்ப்பாட்டம் செய்யுது. அதுக்குப் பயந்துதான் பூசாரியும் வரலே, நாங்களும் அடுத்த மலைக்குப் போயிட்டோம்."

"குட்டி எங்கதான் போயிருக்கும்?" – இளங்கோ.

"பள்ளத்துல எங்காவது விழுந்திருந்தால்?" என்று சந்தேகத்துடன் கேட்டான் கண்ணன்.

"அப்படியிருந்தா வாடையிலேயே தாய் கண்டுபுடிச்சிடும். குட்டிய யாரோ ஆளுகதான் புடிச்சிட்டுப் போயிருக்கணும்."

"அதெப்படி கரெக்டா சொல்றே?" என்றான் அமுதன்.

"அப்படியில்லேன்னா ஒரே நாள்ல கண்டுபிடிச்சிடும். அப்புறம் ஆர்ப்பாட்டமெல்லாம் பண்ணாது" என்றான் வருத்தத்துடன் நீலன்.

"புலிக்குட்டியை எப்படி பயமில்லாம புடிக்க முடியும்?" – அமுதன்.

"சாமி மலைக்கு வெறகு எடுக்குறவங்க, வாழை இலை, தேக்கு இலை பறிக்க வாரவங்க இப்படி பல பேர் வந்து போறாங்க. தாய் தீனி எடுக்கப் போனப்ப குட்டி வந்து பாதையில விளையாடிக்கிட்டு இருக்கலாம், அப்ப அங்க வந்தவங்க பார்த்துத் தூக்கிட்டு ஓடியாந்துட்டா..." என்று நிறுத்தினான் நீலன்.

"இப்ப என்னதான் செய்வது?" என்றான் பூங்குன்றன்.

"சாமி, குட்டிய புடிச்ச விபரம் பாரஸ்ட்டுக்கோ போலீசுக்கோ தெரிஞ்சா ஆறு வருசம் ஜெயிலு. நாமளே ஊர்ல விசாரிச்சி குட்டிய வாங்கி வந்து காட்ல விட்டுட்டா என்ன?" என்றான் நீலன்.

"அதெப்படி குட்டியைத் தாய்ப்பக்கம் கொண்டு போறது?" – கண்ணன்.

"சாமி நா புலி சிறுநீர் கழிச்ச மண்ணை எடுத்து உடம்புல பூசிக்கிட்டு மனுசவாடை இல்லாம பொதரு பக்கமா ஒளிஞ்சிகிட்டுப் போயி தாய்ப்புலி இருக்கிற குகைப் பக்கம் குட்டிய விட்டுட்டு வந்திடறேன்" – நீலன்.

"சரிப்பா. குட்டிய ஊருக்குள்ளே எப்படி தேடுறது என்ன செய்யப் போறே?" – பூங்குன்றன்.

"சாமி வெறகு எடுக்கறவங்க இலைக பறிக்கிறவங்க வீடு எங்க இருக்குன்னு விசாரிச்சு அந்தத் தெருக்குள்ள போனா எப்படியும் புலிக் குட்டியைக் கண்டுபுடிக்கலாம்" – நீலன்.

"சரி நீலா. வா போவோம். என் வண்டி பின்னாலே ஏறு" – இளங்கோ.

அவர்கள் சைக்கிள்களில் கிளம்பினார்கள்.

விறகுக் கட்டு விற்பவர்கள், இலைக் கட்டுகள் விற்பவர்கள் வீடுகள் எங்கே உள்ளன என விசாரித்துக் கொண்டு சில தெருக்கள் வழியாக சைக்கிள்களை உருட்டிய வாறே நடந்து சென்றனர். விறகுக் கட்டுகளை விற்பவர்கள் உள்ள தெருக்களில் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. இலைக் கட்டுகளை விற்கும் பெண்கள் வாழும் தெருக்கள் வழியாக வந்து கொண்டிருந்தனர்.

ஒரு இடத்தில் நீலன் டக்கென்று நின்றான். அவன் முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது – மெல்ல சுவாசித்தான்.

"சாமி இந்த வீட்டில் தான் புலிக்குட்டி இருக்கு."

மாணவர்கள் உடனே பரபரப்பானார்கள்.

கொ.மா. கோதண்டம்

அந்த வீட்டிற்குச் சென்று, "இலைக்கட்டு இருக்கா, என்ன விலை?'' என்று கேட்டார்கள்.

உள்ளேயிருந்து ஒரு பெண் வந்தாள். "தம்பிகளா நான் மூணு நாளா மலைக்குப் போகலே. அதனால இலைக்கட்டு இல்லை தம்பிகளா'' என்றாள்.

"ஏன் போகல மூணு நாளா?'' அவர்கள் கேட்டார்கள். அங்கு வந்த நீலன், "குட்டி இங்கதான் இருக்கு. எனக்கு வாடை அடிக்குது" என்று அவர்களிடம் மெல்லச் சொன்னான்.

"வேலை ஜாஸ்தி அதான் போகலை. இப்ப இலை இல்லை. நீங்க போங்க தம்பிகளா'' என்றாள்.

"அம்மா நாங்க இலைக்கட்டு வாங்க வரலே. புலிக்குட்டி வாங்க வந்தோம்'' - இளங்கோ.

''என்னப்பா சொல்றீங்க. பேசாம போறீங்களா இல்லையா?''

"அம்மா, புலிக்குட்டி நீங்கதான் புடிச்சிக்கிட்டு வந்திருக்கிங்க. எங்களுக்குத் தெரியும்."

"சரி தம்பி, உண்மையைச் சொல்லிடுறேன்."

"நான் இலை பறிக்கையிலே குட்டி வந்து எங்காலையே சுத்தி வந்திச்சி, எனக்குப் பயமா போச்சு. இருந்தாலும், டக்குனு எடுத்து சும்மாட்டுத் துணியில சுத்திக்கிட்டு ஓடி வந்திட்டேன். யாருகிட்டயும் சொல்லலே. ஒரே ஒரு கட்சிக்கார தம்பிகிட்ட மட்டும் சொன்னேன். அந்தாளு இன்னிக்கி சாயந்தரம் வந்து ஆயிரம் ரூபா தந்துட்டு, புலிக்குட்டிய வாங்கிக்கிடுதேன்னு சொல்லிருக்கு. உங்களுக்கு வேணுமுன்னா, கூட இருநூறு ரூபா தாங்க, புலிக்குட்டி தந்திடுறேன். சரிதானே தம்பிகளா?''

"அம்மா! அந்தக் கட்சி ஆளு மந்திரி வீட்ல தரவோ சர்க்கஸுக்கு விக்கவோ விலைக்குக் கேட்டிருக்கலாம். இப்ப நாங்க விலைக்கு வாங்க வரலே. குட்டிய இப்படியே போயி வனத்துல விடத்தான் கேட்கிறோம்'' - கண்ணன்.

"அதெப்படி நான் தருவேன்? பேசாமெ போயிருங்க"

"அம்மா புலிக்குட்டி இங்க இருக்கிறது போலீசுக்குத் தெரிஞ்சா ஆறு வருடம் ஜெயிலு. மூவாயிரம் ரூபா அபராதம். என்ன சொல்லுறீங்க?''

"என்னப்பா பயமுறுத்தறீங்க'' அந்தம்மாவின் பேச்சில் பதற்றம் தெரிந்தது.

"அம்மா நம்ம ஊரு போலீசு தெருத் தெருவா தேடிட்டு வருது. இப்ப இங்க போலீசு வர்றதுக்குள்ள தர்றீங்களா இல்லே உள்ளே போறீங்களா? தந்திட்டா நாங்க யாருகிட்டேயும் சொல்லாம இப்பவே போயி வனக் குகையில விட்டுருவோம்."


அந்த அம்மாள் சிறிது நேரம் யோசித்தாள். விருட்டென்று உள்ளே சென்று புலிக்குட்டியுடன் வெளியே வந்தாள்.

குட்டியை ஒரு பையில் போட்டு சைக்கிளில் கிளம்பினார்கள்.

"சாமி, குட்டிக்குப் பால் வாங்கிக் குடிக்க வச்சி கொண்டு போகலாம்'' என்றான் நீலன்.

"அப்ப வெளியே தெரியாம இருக்கணுமுன்னா எங்க வீட்டுக்கு முதல்ல போவோம். குட்டிக்குப் பால் ஊத்திக்கிட்டு, எங்கிட்ட கேமிரா இருக்கு, எல்லோரும் குட்டிய வச்சுக்கிட்டு போட்டோ எடுத்துக்கிட்டு அப்புறம் கொண்டு போய் விடலாம்" என்று பூங்குன்றன் சொல்லி விட்டு வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அவன் அக்கா பூங்கோதை எல்லோரையும் வரவேற்று பிஸ்கட் தந்தாள். புலிக்குட்டியைப் பார்த்ததும் துள்ளிக் குதித்தாள். பின் பால் பாட்டில் மூலம் பால் குடிக்கச் செய்து புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு 'வெளியே தெரிய வேண்டாம்' எனச் சொல்லிவிட்டு மீண்டும் அய்யனார் கோவில் வனத்திற்கு புறப்பட்டனர்.



''குரங்கைப் பார்க்கணும்னு புதுச்சட்டையை வெயில்லே காயப் போடுறியே... ஏன்?''

''வெயில்லே புதுத்துணியைப் போட்டா 'மங்கி'ப் போகும்னு சொன்னாங்களே!''

– தஞ்சை தாமு

எங்கள் பள்ளியில் நடந்தது

குறைவாகக் குறும்ப

வேர்

தாவரவியல் பாட வேளை. ஆசிரியர் தாவரங்களின் வேர்களைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மா, தேக்கு, சந்தனம் போன்ற மரங்களுக்கு ஆணி



வேர் இருக்கும் என்றும், நெல், சோளம் போன்றவற்றிற்கு சல்லி வேர் இருக்கும் என்றும் கூறிக் கொண்டிருந்தார். பின் வரிசையில் ஒரு மாணவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்த ஆசிரியர் அவனை எழுப்பி "அங்கே என்ன வேடிக்கை?'' என்றார். ''சார்! எல்லா மரத்தின் வேர்களைப் பற்றியும் சொன்னீங்க. இந்த கரண்ட் மரத்தோட (மின்சாரக் கம்பம்) வேரை விட்டுட்டீங்களே சார். அதான் யோசிச்சிட்டிருந்தேன்.'' என்றான். ஆசிரியர் கோபம் அடைந்து அவனை நின்று கொண்டு கவனிக்கச் சொல்லிவிட்டார்.

- ந. துரை, வெள்ளையாம்பட்டு

அடி

எங்கள் வகுப்பில் மிகவும் குறும்பு செய்யக்கூடிய மாணவன் ஒருவன் இருந்தான். அவன் படிப்பிலும் கெட்டியாக இருந்ததால் ஆசிரியர்கள் அவனைப் பெரிதாகக் கண்டு கெ ள்ள மாட்டார்கள்.



அன்றும் அவன் குறும்பு செய்து, சிரித்துக் கொண்டிருந்தான், ஆசிரியர் அவனைப் பார்த்து "ரொம்பக் குறும்பு செய்தால் ஒரு அடி கொடுப்பேன்'' என்றார். வழக்கம்போல் அவனும் "குறைவாகக் குறும்பு செய்தால் ஒரு இன்ச் கொடுப்பீங்களா சார்?'' என்றான். ஆசிரியருக்குச் சட்டென கோபம் வந்து முறைத்தார். அந்த மாணவன் மன்னிப்புக் கேட்டான்.

- சி. ராஜசேகரன், ராஜபாளையம்.

கண்டம்!

சமூக அறிவியல் ஆசிரியர் பாடம்



நடத்திக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவி தூங்கி விழுந்து கொண்டிருந்தாள். ஆசிரியர் அவளை எழுப்பி "இந்தியா எந்தக் கண்டத்தில் இருக்கிறது?'' என்று கேட்டார். உடனே "அபாய கண்டத்தில் இருக்கிறது சார்'' என்றாள் அவள். எல்லோரும் சிரித்து

செய்தால் என்ன கிடைக்கும்?

விட்டோம். ஆசிரியர் அவளிடம் "உன்னை மாதிரி தூங்கிட்டு இருந்தால் இந்தியா அபாயக் கண்டத்தில் தான் இருக்கும். அபாயகண்டத்திலிருந்து மீள இனியாவது விழித்திரு" என்றுகூறி உட்கார வைத்தார்.

- ராமகிருஷ்ணன், காயக்காடு.

வல்லினம்..?

தமிழாசிரியர் முதல் நாள் நடத்திய



பாடத்திலிருந்து கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார். ஒரு மாணவியிடம் "வல்லினம், மெல்லினம் என்றால் என்ன? என்று கேட்டார். உடனே அவள் "வல்லினம் என்றால் வன்மையானது. மெல்லினம் என்றால் மென்மையானது. சிங்கம், புலி, சிறுத்தை வல்லினத்திற்கு உதாரணம். மான், முயல், ஆடு மெல்லினத்திற்கு உதாரணம்" என்றவுடன் ஆசிரியர் உட்பட வகுப்பே சிரித்தது. பிறகு அந்த மாணவி, தான் முதல் நாள் வராததைத் தெரிவித்தாள். ''இதை முதலிலேயே சொல்லக் கூடாதா? நேரத்தை வீணடித்துவிட்டாயே" என்று கூறினார் ஆசிரியர்.

- ஏ.எல். பாத்திமா, காரைக்கால்

கோல்கொண்டா

வரலாற்று பாட வேளை. "கோல் கொண்டா என்ற பகுதியைக் கைப்பற்ற



பல நாட்டு மன்னர்களும் போட்டி போட்டார்கள். காரணம் அப்பகுதியில் நிறைய தங்கச் சுரங்கங்கள் இருந்ததுதான்" என்று ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு மாணவன் எழுந்து "அதாவது கோல்டு கொண்டா எனக்குக் கொண்டா என்று மன்னர்களெல்லாம் போட்டி போட்டிருக்கிறார்கள். அப்படித்தானே சார்" என்றான். அவனது பேச்சைக் கேட்டு எல்லோருக்கும் உற்சாகம் ஏற்பட்டது. உடனே ஆசிரியர் "ஆமாண்டா, சரியா கத்தாண்டா சொன்னே" என்றவுடன் எல்லோரும் சிரித்து கைதட்டினோம்.

- கிருஷ்ணன், புதுக்கோட்டை.

தண்ணீர்

அன்று கணிதப் பாடவேளை. ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அருகில் அமர்ந்திருந்த என் தோழி தண்ணீர் பாட்டிலை எடுத்தாள். அவள் ஹார்லிக்ஸ் பாட்டிலில் தண்ணீர் கொண்டு வருவதால் அப்படியே குடிப்பது சிரமம். எனவே சிறிய டம்ளரையும் எடுத்து வருவாள். அவள் தண்ணீரை ஊற்றிக் குடிக்கும்போது ஆசிரியர் கவனித்துவிட்டார். அவளை எழுப்பி "கிளாஸில் தண்ணீர் குடிக்கக் கூடாது" என்றார். "அப்படியே குடிக்கக் கஷ்டமாக இருக்கிறதாலதான் கிளாஸில் ஊற்றிக் குடித்தேன்" என்றாள் தோழி. ஆசிரியரும் நாங்களும் சிரித்துவிட்டோம். "டம்ளரில் குடிக்கக் கூடாதுன்னு சொல்லவில்லை. வகுப்பறையில் குடிக்கக் கூடாது. உட்கார்" என்றார் ஆசிரியர்.

- பாமா, காரைக்கால்

உலகிலுள்ள பிராணிகளில் மிகவும் உயரமானது ஒட்டகச்சிவிங்கிதான். எவ்வளவு பெரிய விலங்குகள் கூட்டத்திலும் இதைச் சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம். ஒட்டகச்சிவிங்கி என்றதுமே அதன் கழுத்து தான் நம் எல்லோருக்கும் நினைவு வரும். இவற்றின் உயரம் ஏறத்தாழ 18 அடிகள் அதாவது 5.5 மீட்டர். பெண் ஒட்டகச் சிவிங்கி 2 அடி குறைவாக இருக்கும்.

எல்லா பாலூட்டிகளுக்கும் உள்ளது போல் கழுத்தில் ஏழே முள் எலும்புகள் தான் இருக்கின்றன. ஆனால் அவை மிகவும் நீண்டுள்ளன.

கழுத்தில் சிறிய பிடரி மயிர் உண்டு. தலையில் உறுதியான இரு கொம்புகள் காணப்படுகின்றன. ஆண், பெண் இரண்டுக்கும் கொம்புகள் உள்ளன.

தோலின் நிறம் சிவப்பும் பழுப்பும் கலந்த நிறத் திட்டுகளின் இடையே வெள்ளை அல்லது மஞ்சள் கலந்த பழுப்பு

தீங்கு செய்யாத ஒட்டகச்சிவிங்கி!





நிறக் கலவையும் காணப்படும்.

ஒல்லியான நீண்ட கால்கள் வேகமாக ஓடுவதற்கு உதவுகின்றன. ஒரு மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் ஓடக்கூடியவை. தோள் பட்டை எலும்புகள் மிகவும் நீண்டு வளர்ந்திருப்பதால் அவற்றோடு பொருந்தியுள்ள முன்னங்கால்கள் பின்னங்கால்களை விட நீண்டிருப்பதாகத் தெரிகின்றன. இவை நடக்கும் போது வித்தியாசமாகத் தெரியும்.

ஒட்டகச்சிவிங்கியின் ஒரே தற்காப்பு ஆயுதம் அவற்றின் கால்கள்தான். சிங்கம் போன்ற பிராணிகளைக் கூட பின்னங்கால்களாலேயே உதைத்து முரட்டுத்தனமாகத் தள்ளி, படுகாயத்தை ஏற்படுத்தி விடும். சில சமயங்களில் முன்னங்கால் குளம்புகளால் அழுத்தமாகக் கீறிக் காயப்படுத்தி விடுவதும் உண்டு.

ஆப்பிரிக்காவில் மட்டும் வாழக்கூடிய பிராணிகளில் இதுவும் ஒன்று. வேல மரங்களும் சின்னச் சின்ன புதர்களும் புல் வெளிகளும் இருக்கும் இடத்திலேயே இவை வாழ்கின்றன. அடர்ந்த காட்டிற்குள் வசிக்க விரும்புவதில்லை.

உயரமாக வளர்ந்த எல்லா ரக மரங்





எஸ். சுஜாதா

களின் இலை, தளிர்களைப் பறித்து உண்ணுகின்றன ஒட்டகச்சிவிங்கிகள். இதன் நாக்கு 18 அங்குலம் நீளம் உடையது. விரும்பிய போது நீட்டவோ, குறுக்கவோ, உணவைப் பற்றவோ ஏற்றவாறு அமைந்திருக்கிறது நாக்கு.

சாப்பிடும் போதும் மணற்காற்று வீசும் போதும் ஒட்டகத்தைப் போல் மூக்குத் துளைகளை மூடிக் கொள்ளும். அதே போல் நீண்ட நாட்கள் நீர் பருகாமலும் இருக்க முடியும்.

மிகவும் சாதுவானது. யாருக்கும் தீங்கு செய்யாது. வித்தியாசமான பிராணியாக இருந்தாலும் அழகானது; கம்பீரமானது.

ஒட்டகச்சிவிங்கிகள் தண்ணீர் குடிக்கும் போதும், குறுஞ்செடிகளைச் சாப்பிடும் போதும் முன்னங்கால்களை அகற்றி வைத்துக் கொண்டு தலையைக் கீழே இறக்கும். இந்தச் சமயம் எதிரி வந்து தாக்கினால் ஒட்டகச்சிவிங்கியின் கதி அவ்வளவுதான்! ஏனென்றால் கழுத்தைச் சட்டென நிமிர்த்தி கால்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து தாக்குவதற்குள் எதிரி வென்று விடும். இத் தருணத்திற்காக சிங்கம் போன்ற பிராணிகள் காத்திருந்து தாக்குகின்றன.

இவற்றின் தோல் மிகவும் தடிமனாக இருக்கும். உணவு தேடி அலையும் போது முள்ளோ, மரக்கட்டைகளோ இவற்றைப் பாதிப்பதில்லை.



ஆண் ஒட்டகச்சிவிங்கி பெரும்பாலும் தனித்துத் திரியும். பெண் ஒட்டகச்சிவிங்கி 5 முதல் 20 வரையுள்ள மந்தைகளோடு திரியும்.

பெண் ஒட்டகச்சிவிங்கி 15 மாதங்கள் குட்டியை வயிற்றில் சுமக்கும். ஒரு தடவைக்கு ஒரே ஒரு குட்டிதான் பிறக்கும். குட்டி பிறக்கும் போது 220 பவுண்டு இருக்கும். பிறந்த 6 மாதங்கள் வரை தாயிடம் பால் குடிக்கும். 4 முதல் 5 ஆண்டுகளில் முழு வளர்ச்சியடையும். முதிர்ச்சியடைந்த ஒட்டகச்சிவிங்கி 2640 பவுண்டு எடை இருக்கும். பெண் சற்றுக் குறைவாக இருக்கும். இருபது ஆண்டுகள் வரை உயிர்வாழக்கூடியவை.

அசைபோடும் விலங்குகளில் ஜிராபிடீ என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவை ஒட்டகச்சிவிங்கிகள். இவற்றின் விஞ்ஞானப் பெயர் ஜிராஃபா காமலோ பார்டாலிஸ்.

மிக உயரமான கிளைகளைக் கூட எளிதில் பறித்துண்ண ஏற்ற வகையில் கழுத்து இருப்பதால் இவை மற்ற பிராணிகளுடன் உணவுக்காகப் போட்டி போடுவதில்லை. தொலை தூரத்தில் வரும் ஆபத்தைக் கூட முதலிலேயே கண்டுபிடித்து விடக்கூடியவை. இவற்றுடன் புல் மேயும் மற்ற மிருகங்கள் ஒட்டகச்சிவிங்கியை ஒரு அடையாளமாக வைத்து, அதைச் சுற்றியே மேய்கின்றன. ஒட்டகச்சிவிங்கியிடம் ஏதாவது பதற்றம் காணப்பட்டால் அதைத் தெரிந்து கொண்டு ஓடி தப்பி விடுகின்றன மற்ற பிராணிகள்.

தோலுக்காக அதிகமாக வேட்டையாடப்பட்டு விட்டதால் இவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகின்றது.

கிராம்புச் சூரணம்

1948 ஜனவரி 30ஆம் நாள் அதிகாலை 3.30 மணிக்கு வழக்கம் போல்தான் காந்திஜி விழித்தெழுந்தார்.

தினசரி காலையில் 'வாக்கிங்' போகும் பழக்கம் காந்திஜியிடமும் உண்டு. ஆனால் திறந்த வெளியில் அவர் நடந்து செல்வதில்லை. அதற்கு அவருடைய உடல் நலம் இடம் தருவதில்லை. எனவே, தன்னுடைய அறைக்குள்ளேயே குறுக்கும் நெடுக்குமாக, அவர் 'வாக்கிங்' போவார்.

'மனுபென்' என்று ஒரு பெண் காந்திஜியுடனேயே தங்கி தொண்டாற்றி வந்தாள். அவளும் அப்போது தினசரி காந்திஜியுடன் பேசிக் கொண்டே சேர்ந்து நடப்பாள். ஆனால் அன்றைய தினம் மனுபென் அவருடன் நடக்க வரவில்லை. காந்திஜிக்கு அதன் காரணம் புரியவில்லை. அவருடைய கண்கள் மனுவைத் தேடின.

மனு ஒரு ஓரமாக உட்கார்ந்து ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தது தெரிந்தது. உடனே காந்திஜி அவளருகில் சென்றார், "என்ன மனு? வழக்கமாகத் தினசரி என்னுடன் வாக்கிங் வருவாயே. இன்று ஏன் வரவில்லை? இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்றார்.

நிமிர்ந்து பார்த்த மனு, "பாபுஜி! கிராம்புச் சூர்ணம் தீர்ந்துவிட்டது. செய்து கொண்டு இருக்கிறேன்..." என்றாள்.

காந்தி ஆங்கில முறை மருத்துவத்தைப் பின்பற்றுவதில்லை. தனக்குத் தேவையான மருந்துகளை, நம் நாட்டு முறைப்படித் தாமே தயாரித்துக் கொள்வார்.

காந்திஜிக்கு அப்போது இருமல் தொந்தரவு அதிகம் இருந்தது. எனவே கிராம்புச் சூரணத்துடன் பனை வெல்லம் சேர்த்துப் பிசைந்து, அதை மாத்திரை போல் உருட்டி, உலர வைத்துத் தேவைப்படும்போது சில உருண்டைகளை வாயில் அடக்கிக் கொள்வது அவருடைய வழக்கம். அந்த மருந்து உருண்டைகள் தயாரிக்கத்தான் மனு கிராம்புச் சூரணம் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

மனு தொடர்ந்தாள், "நீங்கள் நடந்து கொண்டே இருங்கள். நான் இதோ என் கைவேலையை முடித்துவிட்டு வந்து சேர்ந்து கொள்கிறேன். இப்படி உட்கார்ந்தால் தான் காரியம் முடியும். இருமல் மருந்து உருண்டைகள் முற்றிலுமாகத் தீர்ந்து விட்டன. அதற்குச் சூரணம் தயாரிக்க உட்கார்ந்தேன். இன்று இரவு உங்களுக்குத் திடீரென்று மருந்து தேவைப்படும்போது, துளியும் கிராம்புச் சூரணம் இல்லாமல் போய்விடும்" என்றாள்.




யாராக இருந்தாலும், இப்போது செய்ய வேண்டிய வேலையை அப்படியே விட்டுவிட்டு, எதிர் காலத்தில் செய்ய வேண்டிய செயல்களில் ஈடுபடுவதை, அவர் சிறிதும் விரும்ப மாட்டார். எனவே, அதை மனுவுக்கு உணர்த்த விரும்பி அவர் சொன்னார்: "இரவுக்காக இப்போது வாக்கிங் போவதை விட்டுவிட்டாயே. அந்த இரவு வருவதற்குள் எனக்கு என்ன ஆகும் என்பது யாருக்குத் தெரியும்? அப்போது நான் உயிருடன் இருப்பேனா, மாட்டேனா என்பதே யாருக்கும் தெரியாதே..." என்றார்.


மேலும் தொடர்ந்து அவர், "அப்படியே நான் இன்று இரவு உயிருடன் இருந்து விட்டேன் என்று வைத்துக்கொள். அப்போது உட்கார்ந்து உன்னால் இந்தச் சூரணத்தை எனக்குச் செய்து கொடுத்துவிட முடியாதா? முடியுமே. அதற்காக இப்போது செய்ய வேண்டிய வாக்கிங்கை நீ நிறுத்திவிட வேண்டுமா என்ன?" என்றார்.

இது காந்திஜி இயல்பாகச் சொன்ன சொல்தான் என்றாலும் அது அன்று மாலையே பலித்துவிட்டதே!

\- ஜானகி மணாளன்



ரகசிய விருந்து!
கதை : ஆ. நீலாம்பிகை, ஒன்பதாம் வகுப்பு, விழுப்புரம்.
படம் : மகேஸ்
ரோஜாவனம் காட்டில் முயல், கிளி, மான் மூன்றும் நட்புடன் வாழ்ந்து வந்தன.
ஏன் இப்படி சண்டை போடறீங்க? மான், முயல், கிளியைப் பார்த்தாவது ஒற்றுமையா இருக்கக் கூடாதா?
இனியாவது ஒற்றுமையா இருங்க. போங்க.
நாட்கள் சென்றன. ஒருநாள்—
என்ன, மூணு பேரும் ஒண்ணா இருப்பாங்க. இப்ப முயல் மட்டும் தனியா இருக்கு? நட்புக்குள் விரிசலா, அப்படி நடந்தால் சந்தோஷம்தான்.
என்ன முயலாரே, சோகமாக உட்கார்ந்திருக்கிறீர்?
ஒண்ணும் இல்லை.
ஒண்ணும் இல்லாமலா உன் முகம் இப்படி இருக்கிறது? கிளியும் மானும் சந்தோஷமா இருக்காங்க.
ரெண்டு நாளா என்னை விட்டுட்டு மானும் கிளியும் ஏதோ காரியம் செய்கிறார்கள்.
நான் கூட பார்த்துட்டுத்தான் இருக்கேன். மானும் கிளியும் நாளை மறுநாள் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்து, அனைவரையும் அழைத்துள்ளன.


என்னிடம் அதைப் பற்றி ஒண்ணுமே சொல்லலை. ஏன் இப்படி? வருத்தமாக இருக்கு.
உன்னை உதாசீனப்படுத்தியவர்களுக்காக நீ ஏன் வருத்தப்படறே? நீ நல்லவன். இப்போதாவது அவர்களைப் பற்றிப் புரிந்துக் கொண்டாயே!
நீ சொல்வது சரிதான்!
அன்றிலிருந்து முயல் மற்ற பிராணிகளிடம் கிளியையும் மானையும் இழிவாகப் பேசியது.
இப்படியெல்லாம் இழிவாகப் பேசாதே!
விருந்து நாள் –
பெரிய விருந்தாக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். உங்கள் தோழன் முயலாரை மட்டும் காணவில்லையே!
காத்திருங்கள். அழைத்து வந்து விடுகிறோம்.
மானும் கிளியும் கிளம்பின.
பிறந்த நாள் வாழ்த்துகள்!
ஏன் முகத்தைத் திருப்பிக்கிறே?
DRESS


உனக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கத்தான் ரகசியமாக வைத்திருந்தோம்.
இந்தப் புது உடையைப் போட்டுக்க.
சீக்கிரம் கிளம்பு. ஏன் தயங்கறே?
என்னை மன்னித்து விடுங்கள். நரியின் பேச்சைக் கேட்டு உங்களை இழிவாகப் பேசி விட்டேன்.
நண்பர்களுக்குள் மன்னிப்பெல்லாம் எதுக்கு?
வா போகலாம்.
நம்மைப் பார்த்து நரி ஏமாறப் போகுது!

ரயிலே... ரயிலே...

இந்திய ரயில்வே அமைப்பு ஆசியாக் கண்டத்திலேயே பெரியது. உலக அளவில் நான்காவது இடத்தில் இருக்கிறது. 7000 கோடி ரூபாய் முதலீடு. ஆண்டு வருவாயாக 2000 கோடியை ஈட்டித் தருகிறது. இந்திய ரயில்வே ஆசியாவில் முதலில் இங்கிலாந்து கம்பெனியால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அதன் பெயர் மத்திய ரயில்வே. முதன் முதலில், இந்தியாவில் பம்பாய்க்கும் தானாவுக்கும் இடையில் 16.4.1853 அன்று 34 கி.மீ. தூரம் ஓடியது ரயில். இப்போது இந்தியாவில் மொத்தம் 7056 ரயில் நிலையங்கள் உள்ளன. 62,660 கி.மீ. தூரம் ரயில்கள் ஓடுகின்றன.

மத்திய அரசின் கண்காணிப்பின் கீழ், ரெயில்வே போர்ட் செயல்படுகிறது. இந்த வாரியம், சேர்மன் உட்பட 5 உறுப்பினர்களைக் கொண்டது. ரயில்வேயின் வரவு செலவுக்கான பட்ஜெட் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட வேண்டும். ஆடிட்டர் ஜெனரலால் கணக்குகள் தணிக்கையிடப்படுகின்றன. நிர்வாக வசதிக்காக 12 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பொது மேலாளர் உண்டு. சென்னையில் 14.4.1951 அன்று மண்டலம் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு ரயில்வே மண்டலம் தான் எல்லாவற்றிலும் பெரியது.

பிராட்கேஜ் ரயில்பாதை, மீட்டர் கேஜ் ரயில்பாதை, நேரோகேஜ் ரயில்பாதை ஆகியவை உள்ளன.

தற்போது பல மீட்டர் கேஜ் பாதைகள், பிராட் கேஜ்களாக மாற்றப்பட்டுவிட்டன. விரைவில் எல்லாமே பிராட் கேஜ் ஆகிவிடும். ரயில் பெட்டிகள், என்ஜின்கள், சித்தரஞ்சன், ஜம் ஷெட்பூர், சென்னையில் பெரம்பூர் ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்றன.

நிலக்கரி, இரும்பு, இரும்புத் தாது, பெட்ரோலியப் பொருட்கள், உணவுப் பொருட்கள், உரம், சிமெண்ட், சர்க்கரை, உப்பு, எண்ணெய் வகைகள் ஆகியவற்றை எடுத்துச் சென்று உரிய இடங்களில் சேர்ப்பிப்பதன் மூலம், தொழில், வர்த்தகம், விவசாயம் ஆகிய துறைகள் பயனடைய ரயில்வே உதவுகிறது.

1950-51ஆம் ஆண்டில், 12,840 லட்சம் பயணிகள் பயணம் செய்தனர். 1994-95ஆம் ஆண்டில் 39,150 லட்சம் பயணிகள் பிரயாணம் செய்துள்ளனர். ரயில்களில் பயணம் செய்வோர் எண்ணிக்கை கூடிக் கொண்டே இருக்கிறது.

இந்திய ரயில்வேயில் குகைப் பாதைகள் பல உள்ளன. அவற்றுள் நீளமானது, டார்சி டன்னல் (¾ மைல் நீளம்) ஆகும். நீளமான பிளாட்பாரம் கரக்பூர் ரயில் நிலைய பிளாட்பாரம்தான். 2733 அடி. நீளமான பாலம் சோனே பிரிட்ஜ்.



மிக அதிகமான பணியாளர்கள் (16,46,704க்கு மேல்) பணியாற்றும் அமைப்பு, ரயில்வேதான். இந்திய ரயில் பாதை, முக்கிய நகரங்கள், மாநிலத் தலைநகர்கள், யாத்திரை ஸ்தலங்கள், சுற்றுலாத்தலங்கள் எல்லாவற்றையும் இணைக்கிறது. இந்தியாவின் தென் கோடியான கன்யாகுமரியில் இருந்து, வட கோடியான ஜம்மு வரை, ரயில் பாதை நீள்கிறது.


- பாரதி மகள், கரூர்.

முதல் பரிசு :
கே.உமா, பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, சத்திரம்
கருப்பூர், கும்பகோணம்.



நவம்பர் இதழில் 'நாய்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.


இரண்டாம் பரிசு :
ச.பரணிதரன்,
உறையூர்,
திருச்சி மாவட்டம்.



ஓவியப் போட்டி முடிவுகள்



மூன்றாம் பரிசு :
பெ. பாண்டியராஜன்,
காரைக்குடி.



ஆறுதல் பரிசு :
இரா. சங்கர்,
எட்டாம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி,
சித்தரேவு.



ஆறுதல் பரிசு :
டி.ஜி.சிவப்ரியா,
நான்காம் வகுப்பு, மாமல்லன்
மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.

வியப்பில் ஆழ்த்திய எரிமலைகள்!

எரிமலை என்றால் எரிகின்ற மலை அல்ல, உருகிய பாறை வெளியே தப்பி வருவதற்கு பூமி தன் மேல் மட்டத்தில் ஏற்படுத்திக் கொள்ளும் வழிதான் எரிமலையெனப்படுகிறது.

பூமியினுள் 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் உஷ்ணம் கடினமான பாறைகளைக் கூட உருக்கிவிடும்! நிலத்தினுள்ளிருக்கும் பாறைகள் உருகும் போது அவை விரிவடைகின்றன. இம்மாதிரிப் பாறைகள் உருகித் திரவ நிலையிலிருப்பதை 'மாக்மா' என்கிறார்கள். இந்த மாக்மாவிலிருந்து கிளம்பும் பயங்கரமான உஷ்ணம் உள்ளிருந்து நிலத்தைக் கிழித்துக் கொண்டு வெளியே வரத் துடித்தபடி அங்குமிங்கும் அலைபாய்கிறது! பூமியின் எந்தப் பகுதியில் வலிமை குறைந்திருக்கிறதோ அந்தப் பகுதியைப் பிளந்து கொண்டு இந்தத் திரவப் பாறைகள் வெளியே பீறிட்டு வருகின்றன. உருகிய பாறையின் வெப்ப அளவு 2000 டிகிரிக்கும் அதிகமாக இருக்கும். பூமியின் மேலோட்டைப் பிளந்து கொண்டு, உருகிய பாறைக் குழம்பை மேலே தள்ளிக் கொண்டு வருவது நீராவிதான். இதை எரிமலை வெடிக்கிறது என்கிறோம். இந்தத் தீக்குழம்பு, 'லாவா' எனப்படுகிறது.

எரிமலையில் இருந்து உமிழப்படுவதாய் கருதும் புகை உண்மையில் கருமையான நீராவிதான். பாறைத் துகள்களே தீக்கங்குகளாகவும் சாம்பலைப் போலவும் தோன்றுகின்றன. நிலத்தினுள் உருகிய பொருள்கள் அனைத்தும் பொங்கி வெளிவரும் வரையில் தீக்குழம்பு, புகை, சாம்பல் ஆகியவை தொடர்ந்து வெளிப்பட்டு வழியும்! லாவா வருவது நின்றுவிட்டால் அதனை 'இறந்த எரிமலை' என்கிறார்கள்.

பூமியின் ஆழத்தில் உள்ள வெப்பம் மிகுந்த பாறைக் குழம்பின் இடப் பெயர்ச்சி காரணமாகவே 'எரிமலைகள்' வெடிக்கின்றன என்கிறார்கள்.

1883ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் 'கரகாட்டோ' என்ற பகுதியில் ஒரு எரிமலை வெடித்து 810 மீட்டர்கள் உயரத்திற்கு மேலே எழும்பியது. இதன் வெடிப்புச் சத்தம் 40கி.மீ. தொலைவுக்கு அப்பால் கடலில் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகளின் காதுகளுக்குக் கேட்டதாம். எரிமலை வெடிப்பு அதிர்ச்சியின் காரணமாக 'செஸ்மிக்' கடலின் அலை அதன் அருகிலுள்ள தீவுக்குள் ஒரு கிலோ மீட்டர் தூரம் நுழைந்து 36,000 பேரை உயிர்பலி வாங்கியது. அப்பகுதியில் சில ஆண்டுகள் வரை வானில் ஒளிபிழம்புடன் வானம் எரிவதைப் போன்றே தோன்றியதாம். காரணம் எரிமலையில் இருந்து வெடித்து கிளம்பிய புகையும் சாம்பலும்.

1980ம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவின் 'செயின்ட் ஹெலன்ஸ்' என்னுமிடத்தில் ஒரு எரிமலை வெடித்தது. இது வெடித்த ஓசையின் அளவைக் கணக்கிட்ட ஆய்வாளர்கள் ஓசையின் அளவு, இரண்டாம் உலகப்போரில் ஜப்பானின் ஹிரோசிமா நகரில் போட்ட அணுகுண்டுகளின் அளவை போல 20,000 மடங்கு அணுகுண்டுகளின் வெடிப்பு ஓசைக்கு இணையாக இருந்ததாகக் குறிப்பிட்டார்கள். இவ் வெடிப்பின் விளைவால் 27 கிலோ மீட்டருக்கு அடுத்துள்ள காட்டுப் பகுதியில் பல பகுதிகளில் மரங்கள் வேரோடு சாய்ந்து விட்டனவாம். எரிமலை வெடிப்பினால் சேர்ந்த சாம்பலின் அளவு மட்டும் 600 மில்லியன் டன்களாம்.





1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள 'பினாடுபோ' என்ற 600 வருடங்கள் தூங்கிக் கொண்டிருந்த எரிமலை வெடித்த போது 20 மில்லியன் 'சல்பர் டை ஆக்சைடு' வானில் கலந்ததால் 30 கிலோ மீட்டர் பரப்பளவிற்கு வானில் குடை போல பழுப்பு நிற மேகம் சூழ்ந்தது. மேலும் வானிலிருந்து தீ கற்களாக மழை பெய்தது. 1815 ஆம் ஆண்டில் ஜாவா நாட்டிலுள்ள 'தாம்போரா' என்ற எரிமலை வெடித்தபோது உலக பருவ நிலையே மாறி விட்டதாம். ஆம், பிரான்ஸில் கோடையில் விளைய வேண்டிய பயிர்கள் விளையவில்லை. வழக்கமாக அப்போது வடகிழக்கு அமெரிக்காவில் கோடை காலம் நிலவ வேண்டும், ஆனால் 'கோடை காலமே' அங்கே இல்லை என்றாகிவிட்டது.

1982ம் ஆண்டு மெக்ஸிகோவிலுள்ள 'சிசோன்' எனும் எரிமலை வெடித்தது. 'நயாம்லாகிரா' எனும் எரிமலை ஆப்பிரிக்காவில் வெடித்தது. இவற்றின் விளைவு தென் ஆப்பிரிக்கா, இந்தியா, இந்தோனேசியா,

'தாம்போரா' என்ற எரிமலை வெடித்தபோது உலக பருவ நிலையே மாறி விட்டது!

பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வறட்சி நிலவியது. புயலும், மழையும் பெரு நாட்டில் பெருகியது. பசிபிக்கடலில் சூரியனின் வெளிச்சத்தையே குறைத்து விட்டது. இதனால் கடலில் வீச வேண்டிய பருவக் காற்று வீசாமல் போனது.

ஒவ்வொருமுறை எரிமலை வெடிப்பின் போதும் ஏராளமான கார்பன்-டை ஆக்ஸைடு, சல்பர்-டை ஆக்ஸைடு, ஹைட்ரஜன் சல்பேட் வாயுக்கள் வானில் கலக்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எரிமலை வெடிப்புகள் சில நேரங்களில் நமக்கு நன்மை பயக்கவும் செய்கின்றன. ஆம், சில எரிமலைகள் வெடிக்கும்போது சில பகுதிகளில் மண்ணின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டு தரிசு நிலம் விளைச்சலுக்கு உகந்ததாக மாறிவிடும். சில பகுதிகளில் தங்கம், வெள்ளி, செம்பு அதிகளவு கிடைத்திருக்கிறது.

அண்டார்டிகாவிலுள்ள 'ஈரோபிஸ்' என்னும் எரிமலை வெடித்தபோது சுத்தமான தங்கம் வெளிப்பட்டது. ஆப்பிரிக்காவில் ஆரம்ப காலங்களில் எரிமலை வெடித்து வெளிப் பட்ட அதிகளவு கார்பன்கள்தான் தற்போது வைரங்களாக மாறி கிடைக்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எரிமலைகள் அதிகமுள்ள நியூசிலாந்து, ஜப்பான், ஐஸ்லாந்து நாடுகள் நிலத்திலிருந்து எரிவாயுவைப் பெறுகின்றன. இதைத்தான் 85 சதவிகிதம் சமையலுக்குப் பயன்படுத்துகின்றனர்.

- கோவீ. ராஜேந்திரன்,
மதுரை.

உங்களுடன் ஒரு நிமிடம்



சிரிப்போம், சிந்திப்போம்!

கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப் பிறகு இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள். இருவரும் மொட்டைத் தலையர்கள்.

"எங்கேடா, திருப்பதி போயிருந்தியா?" என்று கேட்டான் ராமு.

"ஆமாம், நீ?"–கிட்டு.

"நான் எங்கேயும் போகலை, வீட்ல உட்கார்ந்து, ராஜ்குமார் விடுதலை தொடர்பாக வீரப்பன் காட்டுல என்ன நடந்திருக்கும்னு யோசிச்சுக்கிட்டிருந்தேன், அவ்வளவுதான்" என்ற ராமு, காய்ந்து போன மண்டையைத் தடவிக் கொடுத்துக் கொண்டான்!

இது, உ. ராஜாஜி ஜோக். உங்களுக்கும் நாட்டு நடப்பு, சமுதாயப் போக்கு தொடர்பாக இது போன்ற ஜோக்குகள் தோன்றுகின்றனவா? எழுதி அனுப்புங்கள். ஆசிரியர் பக்கத்தில் பிரசுரமாகும் ஸ்பெஷல் ஜோக்குகளுக்கு விசேஷப் பரிசு ரூ.25/-

தலைப்பில் 'ஆசிரியர் பக்க ஜோக்' என்று குறிப்பிடுங்கள்.

வீரப்பன் ஜோக்குக்குத் திரும்பி வருவோம். உண்மையிலேயே காட்டில் என்ன நடந்தது என்பது யாருக்கும் புரியவில்லையாதலால் பலவிதமான செய்திகள், வதந்திகள் உலவுகின்றன. எது உண்மை, எது கற்பனை?



விடை கிடைக்கவில்லை என்றாலும் ராஜ்குமார் விடுதலை பெற்று வீடு திரும்பியதில் தேசமே நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது. அவருக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் தமிழக, கர்நாடக மக்களிடையே கசப்புணர்வு மட்டுமல்ல; விரோத பாவமே ஏற்பட்டிருக்கலாம். அவை தவிர்க்கப்பட்டுள்ளன.

ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தையொட்டி ஒரு விஷயத்தை நீங்கள் கவனித்திருக்கக் கூடும். அதாவது, ராஜ்குமார் விடுதலைக்கு, தமிழக-கர்நாடக அரசுகள் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பல அரசியல்வாதிகள் குறை கூறி விமர்சித்தார்கள். வீரப்பன் ஆட்டி வைக்கிறபடியெல்லாம் இரு முதல்வர்களும் ஆடுவதாக கேலி செய்தார்கள். ஆனால் இவர்களில் ஒருவராவது ராஜ்குமாரை பத்திரமாக விடுவித்து அழைத்து வருவதற்கு மாற்று வழி என்ன என்பதைக் கூறவில்லை!

இதிலிருந்தே பல அரசியல்வாதிகளின் தராதரத்தை நாம் புரிந்து கொள்ளலாம். குறை கூறுவதும் பரிகசிப்பதும் எளிது; ஆரோக்கியமான, யதார்த்தமான மாற்று வழி காண்பிப்பது ரொம்பக் கஷ்டம். வழி காண்பிப்பவன்தான் நல்ல அரசியல்வாதி; பழிப்பவன் அல்ல.

இது அரசியலுக்கு மட்டுமல்ல; அன்றாட வாழ்க்கைக்கும் பொருந்தும். அடிக்கடி வகுப்பாசிரியர் நம்மீது கோபப்படுகிறார் என்று குறைப்பட்டுக் கொண்டால் போதாது; ஏன் கோபப்படுகிறார் என்று யோசித்து பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும். அதே போல, ஒரு மாணவன் குறைவாக மதிப்பெண் பெறுகிறான் என்று அவனை வகுப்பாசிரியர் கோபித்துக் கொள்வதும் கேலி செய்வதும் சுலபம்; ஆனால் அந்த மாணவன் நல்ல மார்க் வாங்குமாறு முயற்சிகளை மேற்கொள்கிற ஆசிரியர்தான் சிறந்தவர்.


இப்படி குறையை நிறைவாக மாற்றுகிற சிந்தனையையும் மனப்பான்மையையும் நாம் பெறும்போதுதான் நாடு உயர்கிறது; நாமும் உயர்கிறோம்.

இனி மொட்டைத் தலைகளைப் பார்க்கும்போதெல்லாம் உங்களுக்கு இந்த மன உறுதி வளரும், அல்லவா!


பிப்ரவரி இதழில் மீண்டும் சந்திப்போம். – ஆசிரியர்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager ; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



ஒரே மாதிரியான இரண்டு பந்துகள் எவை?



விடை: 8-18



''வயிறு குலுங்க வைக்கும் ஜோக் ஒண்ணு சொல்லுங்கள்.''

''எதுக்கு?''

''மருந்தைக் குலுக்காமல் குடித்துவிட்டேன்!''

– எஸ். மோகன்



பிருந்தாவனம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka